உ

**Tamil Men of Letters—Part 5.**

# தமிழ் நாவலர் சரிதை.

இது

சேலம். குகை. ஸ்ரீமத், மே. மா.

பெருமாள் செட்டியாரவர்கள் குமாரரும்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின்

அங்கத்தினரும், தமிழ் வித்வானுமாகிய

ஸ்ரீமான்-சாமி தில்லை நடேச செட்டியாரவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

SEP 1916

கோயமுத்தூர்

சாரதாவிலாச சபையின் காரியதரிசி

சி. கு. நாராயணசாமி முதலியாரால்

சென்னை

கீம்ர்ஷேச் அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

1916

விலை அணா 8]

[காபீரைட் ரிஜிஸ்டர்.

# பொருளடக்கம்.

I. முகவுரை.

II. சிறப்புப்பாயிரம்.

III. நூல்.

IV. அநுபந்தம்.

V. விசேடக்குறிப்புகள்.

VI. செய்யுள் முதற்குறிப்பகராதி.

VII. பெயரட்டவணை.

# முகவுரை

தமிழ் நாவலர் சரிதை என்பது, புலவர் பலருடைய வரலாறுகளை அவரவர்கள் சமயோசிதமாகப்பாடியபாடல்களுடன் குறிப்பிடும் ஒரு பழைய திரட்டுநூலாம். மதுரையில் தோன்றிய புதியசங்கத்திலிருந்து செந்தமிழ்ப் பத்திரிகை வெளிவந்த காலத்தில் அநேகம் பாவலர் வரலாறுகளைப் புதிய கவிகளுடனும் சரித்திரக் குறிப்புகளுடனும் பத்திராசிரியரும் பிறரும் தமிழ் நாவலர் சரிதையிலிருந்து எடுத்துக்காட்டி வந்தது முதல், அத்தகைய நூலைப் பெற்றுப்படிக்க ஆசையுள்ளவனாய்ச் சில வருஷங்களுக்குமுன் அதன் பிரதியொன்றும் கிடைக்கப் பெற்றேன். யான், அந்நூல் புலவர்சரிதங்களையெல்லாம் விளக்கிக் காட்டக்கூடிய பெரிய நூலாயிருக்குமென்று எண்ணியிருந்தபடி, அது இல்லாமல் சில பாடல்களுடன் கூடிய சிறிய நூலாகவே காணப்பட்டது. ஆயினும் இது வரை நாம் கேட்டுவந்த அநேகந் தனிப்பாடல்களையும் சரித்திரக் குறிப்புகளையும்பற்றிய நமது கொள்கைகள் பலவற்றை இந்நூல் பலவிடங்களில் மாற்றியும் திருத்தியும் புதுவழிகளைக் காட்டுவதாக இருந்தமையால், இதனை ஆராய்ச்சி செய்வதில் எனக்கு அதிக விருப்பமுண்டாகி வந்தது. ஆனல் அதற்கு எனக்குக்கிடைத்த பிரதியோ அவ்வளவு சுத்தமுடையதாகவில்லை. இரண்டு வருஷங்

களுக்குமுன் என் நண்பர், கோயமுத்தூர் மகா-ா-ாஸ்ரீ சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் தாம் சம்பாதித்து வைத்திருந்த ஒரு பிரதியை என் விருப்பத்திற்கிசைந்து அனுப்பிவைத்தனர். இது முழுதும் சுத்தமுடையதன்றாயினும், முன் கிடைத்ததிலும் பலவகையில் இப்பிரதி மேலென்றே சொல்லக்கூடும். இவ்விரண்டினுடைய உதவியைக்கொண்டே யான் இந்நூலை ஒருவாறு சோதிக்கத் துணிந்தேன். இச்சோதனைக்குச் செந்தமிழ்ப் பத்திரிகையில் இந்நூற்பாட்டல்களுடன் வெளிவந்த சரித்திர விஷயதானங்களும், மஹா மஹோபாத்யாயர் பிரம்மஸ்ரீ. உ. வே. சாமிநாதய்யரவர்கள் தங்கள் பதிப்புகளில் இந்நூற் பாடல்களிற் சிலவற்றைப்பற்றி எழுதிய விசேஷக் குறிப்புகளும், பிறவும் எனக்கு உதவியாயிருந்தன. முற்கூறிய நண்பர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள், இதுவரையும் அச்சில்வராத சோழமண்டல சதகம் இந்நூலாராய்ச்சிக்கு முக்கியமென்று யான் விரும்பியபடி, அதன் பிரதி யொன்றையும், திருவாரூர்க் கமலாசனிப் பத்திராதிபர் ஸ்ரீமத். T.S. தியாகராஜஞானியா ரவர்களிடமிருந்து பெற்று எனக்கு அன்புடன் உதவினர். இவையெல்லாம் சேர்ந்தமையாலேயே இந்நூலை ஒருவாறு வெளியேற்றிவிடலாமென்று நம்பி யான் முயன்றனன்.

இச்சரிதை நூலானது சங்கத்தார் சரித்திரத்திலிருந்து தொடங்கி அந்தகக் கவிவீரராகவ முதலியார் வரலாற்றோடு முடிகிறது. அந்தகக் கவிராயருக்குப் பிற்பட்ட புலவர்கள் பலரிருந்தும் அவர்கள் பாடல்களை இந்நூலிற் காணுததால், இந்நூலைத்திரட்டிய புலவர் அக்கவிவீரராகவர் காலத்துக்குமிக அடுத்திருந்தவராதல் வேண்டுமென்று

தோன்றுகிறது. அந்தகக்கவியின் காலம் குறைந்தது 350 வருஷத்துக்கு மேலாகும். ஆகவே 100 வருஷத்துக்குப் பின்பு இந்நூல் தொகுக்கப்பட்டதாக வைத்துக் கொள்ளினும் சுமார் 250 வருஷத்துக்குமுற்பட்டதே இந்நூலுக்குரிய காலமாகச் சொல்லலாம். இவர்காலத்து வழக்குகள் இக்காலத்து வழக்குகளினும் உண்மையுடையனவாகவே கொள்ளத் தடையில்லையன்றோ? இந்த நூலிற்கண்ட பாடல்களையும் அவற்றின் குறிப்புக்களையும் நம் காலத்தில் வெளிவந்திருக்கும் தனிப்பாடற்றிரட்டுகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால், ஒருவர்வாக்கு மற்றொருவரதாகவும், ஒருவர்சரித்திரம் மற்றவர் சரித்திரமாகவும் பழையவர்பாடல்கள் புதியவர்பாடல்களாகவும் புதியவர் பாடல்கள் பழையவர் பாடல்களாகவும் சம்பந்தமில்லாத கதைகள் கலந்தும் பலவிதமாகப் பிறழ்ச்சியுற்றிருப்பதைக் காணலாம். கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலியவர்களைப்பற்றி இப்போது வழங்குங் கதைகளில் அநேகம், இக்காலம் எழுதப்பட்டுவரும் நாவல்களினும் அதிக உண்மை யுடையதில்லை. இவையெல்லாம் இந்நூலால் நாம் நன்றாக அறிந்து கொள்ளக்கூடியவை. இற்றைக்கு 240 வருஷத்துக்கு முன்னிருந்த படிக்காசுப் புலவர் இயற்றிய தொண்டை மண்டல சதகத்திலும் 180 வருஷத்துக்குமுன் ஆற்பாநாதப் புலவர் பாடிய சோழ மண்டல சதகத்திலும் கூறப்படும் சரித்திரங்களும், பாடல்களும் இத்தமிழ்நாவலர்சரிதைப் பாடற்குறிப்புக்களுடன் பல விஷயங்களில் ஒற்றுமைப்பட்டும் பிற்காலவழக்குகளோடு மாறுபட்டும் இருப்பதால், ஒருபடியாகவே முன்னாளில் புலவர்பாடல்களும் சரிதங்களும் வழங்கினவென்றும், 100 வருஷங்கட்குப்

பின்புதான் அவைமாறியும் சிதைந்தும் போயின என்றும் தெரியலாம். இந்நூலுடன் சேர்த்துள்ள விசேடக் குறிப்புகளை நோக்கின் இம்மாறுபாடுகளும், உண்மை வரலாறுகளும் நன்கு விளங்கக்கூடுமாதலால், அவற்றை இங்கே விவரிக்கவேண்டியது அநாவசியம். இந்நூல் தொகுத்த ஆசிரியர் பெயர் முதலியவற்றைப்பற்றி ஒன்றுந்தெரியவரவில்லை.

இந்நூலில்வரும் பாடல்களிலே சிலவற்றுக்குச் சரித்திரங்களும், பொருள்களும் நன்றாக விளங்கக்கூடவில்லை. வேறுசிலபாடங்களும் குறிப்புகளும் சிதைந்துள்ளன. ஆதலால், தமிழ்வித்வான்கள் அவற்றை ஆராய்ச்சி செய்து கொள்ளும்படி உள்ளபடியே பதிப்பித்திருக்கிறேன். இந்நூன்முடிவில் விசேடக்குறிப்பு ஒன்று எழுதிச்சேர்த்திருக்கிறேன். சென்றசிலவருஷங்களாகப் பல நூல்களிலிருந்தும், என் நண்பர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களின் சகாயத்தைக்கொண்டுந் தெரிந்த சரித்திரக் குறிப்புகளையும், முக்யமான விடங்களுக்குப் பொருட் குறிப்புகளையும் மற்ற விசேடக்குறிப்புகளையும் சேர்த்திருப்பதை அக்குறிப்பிற்காண்க. இவைகளில் என்னறியாமையால் குற்றங்குறைகள் காணப்படுமானல், அதனைப் பொறுத்துக்கொள்வார்களாக. இந்நூலிறுதியில், பாட்டுமுதற் குறிப்பகராதி, பெயரட்டவணை முதலியவை சேர்க்கப் பட்டிருக்கின்றன.

இந்நூலைப் பதிப்பிப்பதில் எனக்குச் சிறிதும் சிரமம் இல்லாமற் செய்தவரும், என்நண்பர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்களே. இவர் சென்னையில் தாமேற்கொண்டு நடத்திவந்த பலவேலைக்கிடையில் இந்நூலையும்

அச்சிட்டு உதவிய நன்றியையும், மற்ற நன்றிகளையும் யான் என்று மறவேன். தக்கவித்வான்கள் மேற்கொண்டு செய்யத்தக்க இந்நூலை முதிர்ந்தறிவற்ற நான் ஆராய்ச்சி செய்து அச்சிட்டு முடித்ததற்கு என்னிடத்திலுள்ள தமிழபிமானமே காரணமாதலால், பெரியோர்கள் என் பிழைகளைக் குறைவாகக் கொள்ளாமல் குணமாக்கொள்வார்களென்றே நம்புகிறேன். முடிவாக, நான் உத்தேசித்த சிறு தமிழ்க்கைங்கரிய மொன்றை நிறைவேற்றி வைத்தருளிய "பைந்தமிழ்ப் பின்சென்ற பச்சைப் பசுங் கொண்ட" லான எம்பெருமான் திருவடிகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

| | |
|---|---|
| 1—1—16<br>குகை, சேலம். | இங்ஙனம்.<br>மே. பெ. சாமி தில்லைநடேசன். |

# சிறப்புப் பாயிரம்.

சென்னை, முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப்புலவரும் 'பாவலராற்றுப்படை' ஆசிரியாரும் சைவசித்தாந்த தத்துவ உபந்நியாசகருமாகிய

**மணிமங்கலம், ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியார்**

அவர்கள் எழுதியது.

---

உலகப் பொருள்களில் ஊடுருவச் சென்று உண்மை கண்டு தாம் உவந்ததே அன்றி ஏனோரும் அவ்வுவகை பெறுதற் பொருட்டுத் "தாமின் புறுவ துலகின் புறக் கண்டு - காமுறுவர் கற்றறிந் தார்" என்னும் அருமருந் தன்ன குறட்கிணங்க நூல்களாகச் செய்து அருள்கூர் புலவர் நந்தம் செந்தமிழ் மொழிக்கண் எண்ணிகந்தோர். அவர் தாம் பலபூவினுஞ்சென்று தேனை ஈட்டும் தேனீயை ஒத்துச் செய்தருளிய நூல்கள் இன்றேல் நாம் அனைவரும் அறிவுக்கண்ணின்றி அறியாமை யென்னும் பேரிருள் வாய்ப்பட்டு மக்கட்பிறப்பின் உறுபயன் எய்தாது கொன்னே கழிந்தொழிவேம் என்பது ஒருதலை. இதுகாறும் அச்சாகி வெளிவந்துலவிய நூற்றொகையினும் வெளிவராத நூற்றொகை பெரிதென்பது மிகையாகாது. எத்துணையோபல நூல்கள் பெயரளவானே தமிழின்கண் நின்றுநிலவுகின்றன அன்றிக் கைவரப் பெற்றிலம்.

'தமிழ் நாவலர் சரிதை' என்னும் இந்நூலினைப் பன்முறை பாட்டானும் உரையானும் கேட்டுக் கரைகடந்த

அவாவினுள் விழுங்கப் பட்டிருந்தேம். இதனை இன்று வரை அச்சிட வெளிப்போந்த தமிழ்ச் செல்வரையேனும் தமிழ்ப் புலவரை யேனும் தமிழகம் காணப்பெறாமை நம்மருமந்த பாஷையின்கண் நம்மவர் வைத்திருக்கும் பற்று இற்றென்பதைத் தெரிக்கும்.

இந்நூல், தன்பெயருக்கிணங்கத் தமிழ் நாவலர் சரிதையைக் கூறுதொழிலினும் அன்னார் அவ்வப்போது இடப் பொருத்தமமையப்பாடிய இன்பச்சுவை கெழுமிய இனிய பாடல்கள் பலவற்றை உடையதாக இலங்குகின்றது. ஆண்டாண்டுக் குறிப்பாகவும் சரிதத்தைக் காட்டுகின்றது. இனி, தனிப்பாடற்றிரட்டுக்கும் இதற்கும் வேற்றுமை சாலப்பெரிது. இவ்விரண்டில் இஃதே வலியுடைத்தென யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. பழந்தமிழ்வாணர் சரிதஆராய்ச்சி செய்வார்க்கு இஃதொன்றே உறுகருவியாக விளக்க முறுகின்றதெனின் இதனை ஒவ்வொருவரும் பெறுதல் எத்துணை இன்றியமையாததென்பது கூறாமே அமையும். பல பாடல்கள் ஆசிரியர் பெயர் மாறியும் பல சொற்றிரிந்தும் பலதொடர் திரிந்தும் பல படக்காணப்படும் தனிப்பாடற்றிரட்டுப்பாக்கள் இதனைக்கொண்டே செப்பஞ் செயற்பாலன

இனி, இதனை முதன்முதல் நம் கெழுதகை நண்பர் தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் சி. கு. நாராயணசுவாமி முதலியார் அவர்கள், தமிழ்ப்புலவர் ஸ்ரீமான் மே. பெ. சாமி தில்லை நடேச செட்டியார் அவர்களைக்கொண்டு பரிசோதிப்பித்து வெளிப்படுத்தார். புலவர்பலர் சரிதங்களை ஆராய்ச்சி செய்து பல நூல்கள் வெளியிட்டுத் தமிழ

கத்துக்கு பெருநன்றிபுரிந்த இவர் இதுபோழ்து வெளி வராத இதனையும் ஆர்வம்மிக்கு வெளிப்படுத்த வந்தமைக்குத் தமிழர் ஒவ்வொருவரும் பாராட்டற் பாலர். பழந்தமிழ் நூல்களைப் பரிசீலனை செய்வதென்பது எத்தனை அருந்தொழிலென்பது நந்தம் புலவர் அறியாததன்று. பரிசோதித்த புலவர் அவர்கள் பாட்டுக்களைச் சீர்திருத்தியதே அன்றி ஆங்காங்குக் குறிப்புக்கள் எழுதியும், விசேடக் குறிப்புக்கள், பெயர் அட்டவணை, செய்யுள் முதற்குறிப்பு, அகராதி முதலியன எழுதியும் உள்ளார்கள். இஃது அறவும் அருஞ் செயல் என்பது ஒவ்வொருவர் உள்ளத்திலும் தோன்றும் என்னும் துணிபுடையோம். இன்றுவரை வெளிப்போந்த நூல்களினின்றும் குறிப்புக்கள் எடுத்தெழுதுகிறார். தமிழர் யாவரும் இதுபோல் பலநூல்கள் வெளிவருதல் வேண்டுமென உண்மை யன்பு கொண்டு உழைத்துப் புகழுந்திருவும் பெற்றுய்வாராக.

சென்னை,
கல்லியாண நிலையம்
1—4—16

இங்ஙனம்
மணி. திருநாவுக்கரசு.

---

இது

அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பதிப்பாசிரியர்
ஸ்ரீமான் வ.த. சுப்பிரமணிய பிள்ளையவர்களின் குமாரரும்
தமிழ் வித்வானும் M. A. பட்டதாரியுமாகிய ஸ்ரீமான்
ஸ்ரீமத். வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள்
எழுதியது.

தமிழ்ப் புலவர் சரித்திர ஆராய்ச்சியிற் பேரவாக்கொண்டு பெரிதுந் தேர்ந்த ஸ்ரீமான் மே. பெ. சாமி

தில்லை நடேசசெட்டியார் அவர்கள் "தமிழ் நாவலர் சரிதை" என்னும் பழைய நூலை அச்சிட்டு இத்தமி ழுலகுக்குத் தந்தது ஒரு பேருபகாரச்செயல். தமிழ் நன் குணர்ந்தாருள்ளும் இந்நூலின்பெயரைக் கேட்டிருப் பாரும் தனிச் செய்யுள்களைக்கண்டிருப்பாரும் ஒழிய நூல் முழுமையும் கண்டவர் வெகுசிலரே. பழைய தமிழ் நூல் களை வெளியிடுவதே உபகாரம்; அவை தம்முள் சரித்திர விளக்க நூல்களை வெளியிடுவது பேருபகாரம் என்பது சொல்லவும் வேண்டுமோ? நூல் திருத்தமாகவும் சிறந்த குறிப்புக்களோடும் அமையப்பெற்று இறும்பூது பயக் குந் தன்மைத்தாய் விளங்குகின்றது. ஸ்ரீமான் செட்டி யாரவர்கள் இன்னும் இத்தகைய அரிய நூல்களை அச் சிட்டும் சரித்திர ஆராய்ச்சிகளைச்செய்தும் உலகுக்குப் பயன்படுமாறு "உலகெலாமுணர்ந்தோதற்கரிய" முழு முதற் கடவுள் திருவருள் புரிவாராக.

---

சேலம் செவ்வாய்ப்பேட்டை
ஸ்ரீ பகவத்விஷய காலக்ஷேபரும் ஜோதிடபண்டி தரும், இந்நூற் பரிசோதகரின் ஆசிரியருமாகிய
ஸ்ரீமான் S. R. வேங்கடகிருஷ்ணையரவர்கள்
பாடியது.

திருமாதி னுரிமைபெறு சேலமா நகரிணைச்
    செல்வமார் குகைநகரில்வாழ்
தேவாங்க குலதிலகன் மூவா மருந்தெனுஞ்
    சீர்மிகுங் குணபூஷணம்
பெருகுமேட் டுப்பட்டி மாரிசெட் டிச்சுதன்
    பேசு பெருமாள் செட்டியின்

பெயரினை விளக்கவரு முயர்வினைப் பெற்றுள்ள
பிரியநற் குமரனை
தருமநெறி முறைவழாச் சகலகலை யுணர்கவிச்
சாமிநில் லைகடேசன்
தரையிலாங் காங்குள்ள நிறையினைச் சேர்த்துதவு
தண்ணளிக டமைநிகர்த்தே
திரைகட லுடுத்தபார்ச் செந்தமிழ்க் கவிகள்முன்
செப்பிய கவிநயங்கள்
தெரியுமா றுதவினன் செந்தமிழ் நாவலர்கள்
சீர்ச்சரிதை யொன்று சேர்த்தே.

---

இது
சேலம் செவ்வாய்ப்பேட்டை
சின்ன முத்துத்தெரு தேவாங்க குலதிலகரிலொருவரும்
மநுகுலதேவாங்க வாசக சாலையின் டைரெக்டருமாகிய
ஸ்ரீமத். P. S. திருமலைய செட்டியாரவர்கள்
பாடியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

திருவோங்கு மலர்மகளுங் கலைமகளும்
நிலமகளுந் திகழுஞ் சேல
மருவோங்கு காவனமு மணித்தடமு
மார்குகையில் மன்னி வாழும்
தெருளோங்குங் கேள்விநிறை தேவலன்றன்
குலம் விளங்கச் செனித்த தோன்றல்
அருளோங்கு மரியருளாற் பெருமாள்செய்
தவமுய்ய வவனி வந்தோன். (1)

அண்டமுத லெண்டிசையு மகிழ்ந்களிக்க
வறுமுகவே ளறைந்த தென்சொல்
உண்டபெரு நற்புலவர் மொழியாய்ந்திக்
காலவழூஉ வொழுங்க தாக்கித்
தண்டமிழ்நா வலர்சரிதை யெனுமொருநூ
லெமக்களித்தான் றகைமையாருங்
கண்டமிழ்த மெனச்சாமி தில்லைநட
ராஜனெனுங் கவிவல் லோனே. (2)

---

ஈரோடு மஹாராஜன் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பாலசரஸ்வதி
ஸ்ரீமத். சே. ரா. திம்மப்பையரவர்கள்
பாடியது.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீரார்பண் டைத்தமிழ்நா வலர்சரிதை
யித்தலத்திற் செழிப்புற் றோங்க
வாரும் பொருப்பினங்கள் சூழ்சேல
வெழிற்குகைவாழ் இனியகல்விப்
பேராருஞ் சாமிதில்லை நடேசகுணப்
பெரியன்பரி சோதித் தானம்
தாராத வன்பொடுநா ராயணசா
மிப்புலவ னச்சிட்டானே (3)

---

கோயமுத்தூர் தாலுகா வடவழி வாசியும்
ஸ்ரீ மருதாசலக் கடவுள் பிள்ளைத்தமிழ் சோதிட
யவனகாவிய முதலிய நூற்களின் ஆசிரியரும் சோதிட
சித்தாந்த வல்லவருமாகிய
ஸ்ரீமத். மு. அருணசலக் கவிராயரவர்கள் பாடியது.

---

நேரிசை யாசிரியப்பா.

சீருஞ் சிறப்புந் திகழ்தமிழ் நாட்டுள்
சேரும் பெருமைச் சேரமண் டலந்தனில்
தேங்கிய செல்வந் திருநடஞ் செய்யும்
ஓங்கிய மாளிகை யுறுபெருந் திருவும்
அன்ன தானமு மகிலநற் றுணமும்
துன்னிய கீர்த்தியும் துலங்கிய நகராம்
சேலந் தன்னிற் சீர்த்தியும் செழிப்பும்
சீலமும் படைத்த தேவாங்க மரபோன்
வாணிப வழியால் வளர்பொரு ளீட்டி
மாணுறு தனதனய் மாநிலம் வாழ்வோன்
மாரிபோல் வழங்கு மாரியின் பேரன்
பேரிசை பெற்ற பெருமாள் மைந்தன்
வாய்மையுஞ் சீலமு மற்றுள குணங்களும்
தூய்மையு மிகுந்த தோன்ற லாவோன்
இன்றமி ழிலக்கிய விலக்கணக் கடல்களை
முன்றவப் பயனல் முழுவதுங் கண்டோன்
செந்தமிழ்ப் புலவர் சேர்நிழற் போல்வான்
வந்தடை வோர்க்கெல்லாம் வழங்கு முதாரி
இப்பெருஞ் செம்ம லிருங்கவிப் புலவர்
திப்பிய சரிதந் திறம்படக் கூறும்

தமிழ்நா வலர்சரி தையெனும் பழமை
திகழ்மா நூலைச் சிதல்வாய்ப் படாமல்
முன்னா லறிவால் முறைப்பட வாய்ந்து
பின்னா றுற்ற பிழையெலாங் களைந்து
முகவுரை குறிப்புரை முதலிய சேர்த்தி
அகமகிழ்ந் தனைவரு மறிந்து வியக்க
அச்சுவா கனத்தி லழகுற வேற்றி
மெச்சும் வண்ணம் மேதினிக் களித்தனன்
திடமுறு சாமி தில்லை
நடரா சத்திரு நாமத் தோனே.

---

கோயமுத்தூர்ப் பள்ளபாளையம்
மாணவர் தமிழ்ச்சங்கக் காரியதரிசியும்
தமிழ்ப் பண்டிதருமான
ஸ்ரீமத். நா. வையாபுரிப் பிள்ளையவர்கள்
பாடியது

---

வெண்பா.

சேல நகர்திகழுந் தேவாங்க நன்மரபோன்
சீலன் நடராசச் செம்மல்தான் — ஞாலம்
அமிழ்தாகச் சோதித் தனைவர்க்கு மீந்தான்
தமிழ்நா வலர்சரிதை தான்.

---

சேலம் செவ்வாய்ப்பேட்டை புத்தக வியாபாரம்
ம-௱-௱-ஸ்ரீ தி. சு. கணபதிப்பிள்ளை யவர்கள்
பாடியது

---

பதினைந்து சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

சீருற்ற மாடமா ளிகையழகு திகழ்வுற்ற
செல்வமிகு சேல நகரில்

தேவாங்க நன்மரபி னுவாங்கு கலையினொடு
திருவுமொரு சேர வாழ்வோன்
பாருற்ற கற்பகக் கையினான் நாவலவர்
பாடிமகிழ் புகழின் மிக்கோன்
பாவாரு முத்தமிழ்த் துறைபோய பண்டிதன்
பண்புபெறு பெருமாள் சுதன்
தேருற்ற பாவலவர் சீர்த்திவர லாறெலாஞ்
சேரத் தொகுத்து முன்னோர்
செய்ததமிழ் நாவலர்கள் சரிதையைக் கரிசறச்
செப்பமிட் டச்சேற்றினான்
காருற்ற மேனியுங் கையுற்ற வாழியுங்
கவினுற்ற கண்ண னடிகள்
கருத்துற்று வாழ்தில்லை நடராச
னென்கின்ற கனமுற்ற யோகவானே.

---

கோயமுத்தூர்த் தமிழ்ப்பண்டிதர்
ஸ்ரீமத். ஐயாசாமிபிள்ளை யவர்கள்
பாடியது.

**கலித்துறை.**

பண்ணிய னுவலர் நல்வாழ்வு கூறும் பழந்தமிழ்நூல்
எண்ணியலாய்ந்தச்சிலேற்றியெம்போலியர்க்கீந்தனனால்
கண்ணியவான்புல வோர்க்கொரு காவலன்சேலநகர்
நண்ணிய தில்லைநடராசனென்கின்றநாவலனே.

---

# தமிழ் நாவலர் சரிதை.

## காப்பு.

* கரும்பு மிளநீருங் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி—அரும்பவிழ்தார்ச்
சேரமான் † சொன்ன சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி. (1)

‡ மதிபாய் சடைமுடித்து மாசுணப்பைம் பூட்டு
சதிபாய் குறுந்தாட்டுத் தான—நதிபா
யிருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தெ னுள்ள
முருகவிட்டு நின்ற வொளி. (2)

---

* இவ்வெண்பா, சிலப்பதிகார அரும்பதவுரையின் காப்பாகக் காணப்படுகிறது.

† சேரமான்—இளங்கோவடிகள்; சேரன் செங்குட்டுவனுடன் பிறந்து, அரசாட்சிக் குரியவராய்ப் பின் துறவுபூண்டமைபற்றி, அடிகள் எனப்பெயர் பெற்றார். 'இளங்கோ வேந்தன்' என இவரை மணிமேகலை கூறும்.

‡ இது, தொல்காப்பிய வுரைகளிற் காப்புச் செய்யுளாக வரையப்பட்டுள்ளது. ஒளி என்னும் எழுவாய்க்கு, முடித்து, பூட்டு, தாட்டு, கவுட்டு, வாய்த்து என்னுங் குறிப்பு வினைகள் பயனிலைகளாம். மாசுணம் - பாம்பு. சதி - சாரி. தானம் - மதம். கவுள் - கபோலம்.

தனிமைபெறு சீர்த்தித் தமிழ்நா வலர்சீ
ரினிமை பெறச்சேர்த் தெழுத—நனிதுணையா
மைந்துமுகத் தந்தி யெனுஞ்செஞ் சடைமௌலி
யைந்துமுகத் தந்தி யடி. * (3)

## நூல்.

### [முச்சங்க வரலாறு]

தலைச்சங்கத்தார் இடைச்சங்கத்தார் கடைச்சங்கத்தார் எனப் புலவர் மூவகையர். அவருட் டலைச்சங்கமிருந்தார்—அகத்தியனாரும் இறையனாரும் முருகவேளும் நிதியின்கிழவனும் முரிஞ்சியூர் முடிநாகராயரும் † என்றித் தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர்; அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார். அவர்களாற் பாடப்பட்ட நூல்—பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதியாண்டு. ‡ அவர்க்கு நூல் அகத்தியம். ||

---

* இப்பாடல், முன்னவை போலன்றி, இந்நூல் தொகுத்த ஆசிரியர் வாக்கென்பது, இதன் போக்கால் விளங்கும். சந்திரனைத் தன்பாற்கொண்ட அந்தி என்று சொல்லத்தக்க, செஞ்சடைமுடிதரித்த ஐந்துமுகத் தந்தியான விநாயகர் - என்பது பின்னிரண்டடியின் பொருள்.

† இப்புலவர், பாரதப்போரில் பாண்டவசேனைக்கு உணவளித்துதவிய சேரமான் பெருஞ்சோற்றுதியன் சேரலாதனைப் பாடியவர். (புறம்—1)

‡ 'நாற்பதிற்றியாண்டு' என்பது இறையனார் களவியலுரை.

|| "அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதிமுதற் கடுங்கோனீறாக எண்பத்தொன்பதின்மர் என்ப; அவருட்கவியரங்கேறினார்

இடைச்சங்கமிருந்தார்:—அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க்கருங்கோழியும் * மோசியும் வெள்ளூர்க்காப்பியனாரும் சிறுபாண்டரங்கனும் மதுரையின் மாறனும் † துவரைக்கோமானும் இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர்; அவருள்ளிட்டு மூவாயிரத்தெழுநூற்றுவர் பாடினார்; அவர்களாற்பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலையகவலும் கல்வியகவன் மாலையும் என ‡ இத்தொடக்கத்தன வென்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் தொல்காப்பியமும் பண்டிபாரமும் ‡ என்ப. அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு ¶ கபாடபுரத்திருந்தார். அப்போது மதுரையைக் கடல்கொண்டதென்ப. ||

கடைச்சங்கமிருந்தார்:—கபிலபரணரும் சிறுமேதாவியாரும் சேந்தம் பூதனாரும் $ அறிவுடை நாயனாரும்

---

எழுவர் பாண்டியர் என்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப'' என்ற விஷயங்கள் களவியலுரையில் மிகுதியாகக் காணப்படுவன.

* 'கருங்கோழி மோசியும்' என்பதும், † 'திரையன்மாறன்' என்பதும் அச்சிட்ட களவியற்பாடங்கள்.

‡ இந்நூல்கள் களவியலுரையிற் கூறப்படவில்லை. பண்டிபாரமென்பதற்குப் பிரதியாகப் பூதபுராணங் களவியலுரையிற் காணப்படுகிறது.

¶ இந்நகரம், தாமிரபர்ணி சங்கமமாகுமிடத்தில் இருந்ததென்பதும், பழைய பாண்டியராஜதானி என்பதும் வான்மீகராமாயணத்தால் தெரிகின்றன (செந்தமிழ், தொகுதி 7.)

|| "அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறனீறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப; அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டியர் என்ப'' என்ற விஷயங்கள் களவியலில் மிகுதியாகக் காணப்படுவன.

$ 'அறிவுடையரனாரும்' என்பது களவியற்பாடம்.

பெருங்குன்றூர்க் கிழாரும் இளந்திருமாறனும் மதுரை யாசிரியர் நல்லந்துவனும் மதுரை மருதனிள நாகரும் கணக்காயனார் மகனார் நக்கீரருமென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாற்பத்தொன்பதின்மர்*பாடினார். அவராற் பாடப்பட்டன—நெடுந்தொகை குறுந்தொகை நற்றிணைநானூறு அகநானூறு புறநானூறு ஐங்குறுநூறு பதிற்றுப்பத்து பத்துப்பாட்டு. மணிமிடைபவளமுங் களிற்றியானைநிரையும் நித்திலக்கோவையும் † முத்தொள்ளாயிரமும் ‡ கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் எழுபதுபரிபாடலும் பாரத வெண்பாவும் என இத்தொடக்கத்தன. அக்காலத்து நூல் அகத்தியமும் தொல்காப்பியமும். இவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற்றைம்பதியாண்டு. §

அக்காலத்துப் பாண்டிய நாடு பன்னீராண்டு மழை பெய்யாது வற்கடஞ் ¶ சென்றது. சங்கத்தாரெல்லாரும்

---

* 'நானூற்று நாற்பத்தொன்பதின்மர்' என்பது களவியற்பாடம்.

† மணிமிடைபவள முதலிய மூன்றும் அகநானூற்றின் பகுதிகளே யாதலால், அதனின் வேறாக இந்நூலாசிரியர் இவற்றைக் கொண்டதற்கும், அகநானூற்றின் மறுபெயராகிய நெடுந்தொகையைத் தனியாக வைத்தெண்ணியதற்கும் காரணம் புலப்படவில்லை.

‡ முத்தொள்ளாயிரம் 'பிறசான்றோர்' செய்த தென்பர். (தொல். பொருளதி. 471 உரை)

§ "சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன். முதலாக உக்கிரப்பெருவழுதிஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியர் என்ப" என்ற விஷயங்கள் களவியலில் மிகுதியாகக் கண்டவை.

¶ வற்கடம்-பஞ்சம்.

வேறு வேறிடத்துப் போயினார். பின்பு மழை பெய்து நாடு விளைய அவரெல்லாரையும் மதுரையிடத் தழைப்பித்துத் தமிழாராய்ந்தார். பொருளதிகாரங் காணாமற் போயினதால் ஆலவாயிறையனார் அறுபது சூத்திரம் பாடினார். *

---

## [ இறையனார். ]

### தருமி என்னும் பிராமணனுக்குப் பொற்கிழி வாங்கிக்கொடுத்த சிந்தாசமுத்தி.

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலி
னறியவு முளவோநீ யறியும் பூவே. (1)

### பாணபத்திரனுக்காகச் சொக்கநாதசுவாமி சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகசவகவல்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை
யன்னம் பயில்பொழி லால வாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையி னிருமையு முதவிய வொளிதிகழ்
குருமா மணிநிரைக் குடையத னிழற்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க

---

* "உலகிய னிறுத்தும் பொருண்மர பொடுங்க-மாறனும் புலவரு மயங்குறு காலை...அன்பி னைந்திணையென் றறுபது சூத்திரம்-கடலமு தெடுத்துக் கரையில்வைத் ததுபோல்...தெளிதரக் கொடுத்த தென்றமிழ்க் கடவுள்" (கல்லாடம்-5)

பண்யால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பாலன்பன் றன்னைக்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே. (2)

வள்ளுவரைச் சங்கத்தார் பாடிய வள்ளுவமாலையில்
இறையனார் பாடிய வெண்பா.

என்றாழ் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேனிரைக்கு நீர்மையதாய்க்—குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் செவ்வித் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன் வாய்ச் சொல். (3)

இறையனார் பொய்யாமொழிப்புலவர் முன்பு சிராமலையைப்
பாடிய வெண்பா.

கோட்டாற் கொழும்பிரசங் குத்தி யதனடுவே
பாட்டாற் பனைக்கை புகமடுக்கும்—காட்டானை
தேனீ ரருந்துஞ் சிராமலையே செஞ்சடைமேல்
வானீர் கரந்தான் மலை. (4)

முருகவேள் பொய்யாமொழியாரைப பாடிய வெண்பா.

விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தா
லெழுந்த சுடர்வருமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினள்
பொய்யா மொழிப்பகைஞர் போல். (5)

[சங்கத்தார்]

வள்ளுவமாலையில் நாமகள் பாடிய வெண்பா.

நாடா முதனான் மறைநான் முகனாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
யெள்ளுவன் மீதுயர்த்த வேந்திலைவேல் வேந்தனே
வள்ளுவன் வாயதென் வாக்கு. (6)

நக்கீரர் நாடத்துக் குயக்கொண்டானைச் சாகப்பாடிய
அங்கத வெண்பா.

முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—யரணிலா
வானந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டா
னானந்தஞ் சேர்கசுவா கா. (7)

அவனைப் பிழைக்கப்பாடிய வெண்பா.

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
வந்தண் பொதியி லகத்தியனா ராணையினாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா. (8)

பாரிகோட்டையையும் மலையையும் சேரனுஞ் சோழனும்
பாண்டியனும் வளைந்ததின் பிறகு, மூவரும், அவர்கள்
வலியக் கூடாரம் பிடுங்கிக்கொண்டுபோக
ஔவை பாடிய அகவல்.

அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகொண் முரசின் மூவிரு முற்றினு
முழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்

தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
வாடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே. (9)

மலையமான் திருமுடிக்காரி வரிசையறியாது கொடுத்த
விடத்துக் கபிலர் பாடியது.

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ வரிதே பெரிது
மீத லெளிதே மாவண் டோன்றல்
அதுநற் கறிந்தனை யாயிற்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே (10)

தம்பியால் நாடுகொள்ளப்பட்டுக் காடுபற்றியிருந்த குமணனைப்
பெருந்தலைச்சாத்தனார் பாடியது.

ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய

பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே. (11)

இதுவுமது.

இந்தப் பாட்டுக்குக் குமணன் தலை கொடுத்தான்.

ஆறுபெருக் கில்லா தருந்திடர்தான் பட்டாலு
மூறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியைநீ யானு மென்வறுமை தீர்க்கச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு. (12)

உறையூர் முற்றியிருந்த நலங்கிள்ளியையும் அடைத்திருந்த
நெடுங்கிள்ளியையும் கோவூர்கிழார் பாடியது.

இரும்பனை வெண்டோடு மலைந்தோ னல்லன்
கருஞ்சினை வேம்பின் றெரியலோ னல்லன்,
நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே [றே
நின்னொடு, பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்
யொருவிர் தோற்பினுந் தோற்பதுங் குடியே
யிருவிர் வேற லியற்கையு மன்றே, அதனாற்
குடிப்பொரு ளன்றுநுஞ் செய்தி கொடித்தேர்
நும்மோ ரன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே. (13)

சோழன் நலங்கிள்ளியுழைநின்று உறையூர்புக்க
இளந்தத்தனை எதிர்த்து வந்தானென்று கொல்லப்புக்குழிக்
கோவூர்கிழார் பாடி உய்யக்கொண்டது.

வள்ளியோர்ப் படர்ந்து புள்ளிற் போகி
நெடிய வென்னாது சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருத்தி

ஓம்பா துண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந் தன்றோ வின்றே, திறப்பட
நண்ணார் நாண வண்ணாந் தேகி
யாங்கினி தொழுகி னல்ல தோங்குபுகழ்
மண்ணாள் செல்வ மெய்திய
நும்மோ ரன்ன செம்மலு முடைத்தே. (14)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்
மலையமான் மக்களை யானைக்கிடுவுழிக் கோவூர்
கிழார் பாடி உய்யக்கொண்டது.

நீயே, புறவி னல்ல லன்றியும் பிறவும்
பலவும் விடுத்தோன் மருகனை யிவரே
புலனுழு துண்மார் புன்க ணஞ்சி
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண் டழூஉ மழாஅன் மறந்த
புன்றலைச் சிறாஅர் மன்றுமருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ வுடையர்
கேட்டனை யாயினீ வேட்டது செய்ம்மே. (15)

சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி முக்காவ
னாட்டு ஆமூர்மல்லனைப் பொருது அட்டுநின்
றானைச் சாத்தந்தையார் பாடியது.

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டி னிணக்கு மிழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ
வூர்கொள வந்த பொருநனொ
டார்புனை தெரிய னெடுந்தகை போரே. (16)

சங்கத்தார்

காலை ஞாயிறு கடுங்கதிர் பரப்பி
வேலையுங் குளனும் வெடிபடச் சுவறித்
தந்தையை மக்கண் முகம்பா ராமே
வெந்த சரகம் வெவ்வே றருந்திக்
குணமுள தனையுங் கொடுத்து வாழ்ந்த
கணவனை மகளிர் கண்பா ராமே
விழித்தவிழி யெல்லாம் வேற்றுவிழி யாகி
யறவுரை யன்றி மறவுரை பெருகி
வுறைமறந் தொழிந்த வூழிகா லத்திற்
றுயில் லவர்க்குத் தாயே யாகவும்
தந்தையில் லவர்க்குத் தந்தையே யாகவும்
இந்த ஞாலத் திடுக்கண் டீர
வந்து தோன்றினன் மாரிதிக் கிழவன்
நீலஞ் சேரு நெடுமால் போல்வன்
ஆலஞ் சேரி மயிந்த னென்பான்
றன்குறை சொல்லான் பிறர்பழி யுரையான்
மறந்தும் பொய்யான் வாய்மையிற் குன்றான்
இறந்து போகா தெம்மையுங் காத்தான்
வருந்த வேண்டா வழுதி
யிருந்தன மிருந்தன மிடர்கெடுத் தின்னே. (17)

'திருவாலங்காட்டுத் திருநடனங்கண்டீரோ?' என்று முனிவர்
கேட்க வள்ளுவர் பாடியது.

பூவி லயனும் புரந்தரனும் பூவலைக்கத்
தாவி யளந்தோனுந் தாமிருக்க—நாவி
விழைநக்கி நானொருடு மேழையறி வேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன் றன் கூத்து. (18)

கபிலர் பிறந்தபோது பாடியது.

நெட்டிலை யிருப்பை வட்ட வான்பூ
வாடா தாயிற் பீடுடைப் பிடியின்
கோடேய்க் கும்மே வாடிற் பைந்தலைப்
பரதர் மனைதொறு முணங்குஞ்
செந்தலை யிறவின் சீரேய்க் கும்மே. (19)

## [ஔவையார்]

ஔவையார்க்கு நெல்லிப்பழங் கொடுத்த அதிகமானைப்
பாடிய அகவல்.

வலம்படு வாய்வா ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த கழறொடித் தடக்கை
யார்கலி நறவி னதியர் கோமான்
போரடு திருவிற் பொலந்தா ரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே. (20)

அப்போது பாடிய வெண்பா.

பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்குவரு பாற்பெண்ணை யாற்றினையு—மீங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை
யறுப்பித்தா யாமலகந் தந்து. (21)

புள்வேளூர்ப் பூதன் அவர்க்குச் சோறிட்டபோது
பாடிய வெண்பா:

*வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டு*
*முரமுரவென் றேபுளித்த மோரும்—பரிவுடனே*
*புள்வேளூர்ப் பூதன் புகழ்புரிந் திட்டசோ*
*றெல்லா வுலகும் பெறும்.* (22)

பழையனூர்க் காரிக்கு ஆடுவாங்கிக்கொடுக்க, வாதவன் வத்
தவன் யாதவன் மூவரிடத்தும்போய் அவர்கள் கொடாதபடி
யினாலே, சேரமானிடத்துப் போய்ச்சொல்லிய வெண்பா.

*வாதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னானை*
*யென்றான்-யாதவர்கோன் யாதொன்று மில்லையென்*
*றான்-ஆதலால்—வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்*
*கோ னானையினும்-யாதவர்கோ னில்லை யினிது.* (23)

அப்போது சேரமான் பொன்னாடுகொடுக்கப் பாடிய வெண்பா.

*சிரப்பார் மணிமுடிச் சேரமான் றன்னைச்*
*சுரப்பாடு கேட்கவே பொன்னாடொன் றீந்தான்*
*இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்*
*தாமறிவர் தங்கொடையின் சீர்.* (24)

இவையிரண்டும் பொய்யாமொழிப்புலவர் பாதிபாட,
ஔவையார் பாதிபாடியன.

*தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே*
*மண்ணாவதுஞ்சோழ மண்டலமே—பெண்ணாவா*
*ளம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராஞ்*
*செம்பொற் சிலம்பே சிலம்பு.* (25)

*பத்தம்பிற் பாதி யுடையா னிரண்டம்பிற்*
*கொத்தம்பி யென்பாள்பாற் கோட்புக்குச்—சுத்தப்*

பசும்பொ னரவல்குற் பாவைக்குத் தோற்று
விசும்பிடைவைத் தேகினன் வில். (26)

ஒருநாட் பசியினாலே ஒருவன்மனையிற்போக, அவன் 'சோறில்லை போ' என்று சொன்னபின்பு, அவன் மனைவி உபசாரஞ்சொல்லி அன்னமிட்டாள்; அப்போது சொல்லிய வெண்பா.

அற்ற தலையி னருகிற் றலையதனைப்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றன்
மரமனையா னுக்கிம் மனையாளை யிந்த
பிரமனையான் காணப் பெறின். (27)

ஒரு குறவன்பலாவைப் பகைவர் வெட்டிப்போட்ட அப்பலாவளரப் பாடியது.

கூரிய வாளாற் குறைபட்ட கூன்பலா
வோரிலையாய்க் கொம்பா யுயர்மரமாய்ச்—சீரிய
வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின்பழமாய்ப்
பண்டுபோ னிற்கப் பணி. (28)

அப்போது குறப்பிள்ளைகள் நாழித்தினை கொடுப்ப வாங்கிக் கொண்டு சோழனிடத்தில் வந்துபாடிய வெண்பா.

கூழைப் பலாத்தழையப் பாடிக் குறச்சிறுார்
மூழக் குழக்குத் தினைதந்தார்—சோழாகே
ளுப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை
யொப்பிக்கு மென்ற னுளம். (29)

அறம்பொருளின்பம்வீடு நான்கும்வரப் பாடிய வெண்பா.

ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றுங்
காத லிருவர் கருத்தொத்துப்—ஆதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு. (30)

அரிசிகேட்க யானைகொடுத்த நாஞ்சில்வள் ளுவனைப் பாடியது.

தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டின மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங்கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே யன்னதோர்
தேற்றா வீகையு முளதுகொல்
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே. (31)

ஏழிற்கோவைப் பாடிய அங்கதம்.

இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—பொருடேரும்
பாட்டு முரையும் பயிலா தனவிரண்
டோட்டைச் செவியு முள. (32)

'மூன்றுகிழி சங்கிலியிறப்பாட, ஒருகிழி நிறைநில்லாத கவி பாட, ஒரு கிழிக்கு நாலுகோடி கவிபாட'—என்று ஆக ஐந்துகிழியும் பாண்டியன் வாசலிற்கட்டி வைத்தபோது கிழியிறப்பாடிய வெண்பா.

தண்டாம லீவது தாளாண்மை தண்டி
யடுத்தக்கா லீவது வண்மை யடுத்தடுத்துப்
பின்சென்றா லீவது காற்கூலி பின்சென்றும்
பொய்த்தா னிவனென்று போமே லவன்குடி
யெச்ச மிறுமே யிறு. (33)

சென்றுழ துண்பதற்குச் செய்வ தரிதென்று
மன்றுழ துண்பான் மனைவாழ்க்கை—மூன்றிலிற்

றுச்சி லிருந்து துடைத்தெழுகண் ணீராலே
ழெச்ச மிறுமே லிறு. (34)

வழக்குடையார் நிற்ப வரும்பொருள்கை வாங்கி
வழக்கை வழக்கழிவு சொல்லின் —வழக்குடையார்
சுற்றமுந் தாமுந் துடைத்தெழுகண் ணீராலேழ்
சுற்ற மிறுமே லிறு. (35)

நிறைநில்லாத அகவல்.

வையக மெல்லாம் வயலா வானோர்
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமு முத்து மணியுங் கலந்தொரு
கோடானு கோடி கொடுப்பினு மொருநா
ளொருபொழு தொருவனா ணுழிதல் பார்க்கு
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே. (36)

நாலுகோடி கவி.

மதியாதார் முற்ற மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி யுறும்.
உண்ணீருண் ணீரென் றே யூட்டாதா தம்மனையி
லுண்ணுமை கோடி யுறும்.
கோடி கொடுத்துங் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி யுறும்.
கோடானு கோடி கொடுப்பினுந் தன்னுடையநாக்
கோடாமை கோடி யுறும். (37)

ஒருவனைப் பாடி அவன் 'ஒன்றுமில்லை' என்ற
போது பாடிய விருத்தம்.

கல்லாத வொருவனையான் கற்ற யென்றேன்
காடேறித் திரிவானை நாடா வென்றேன்

பொல்லாத வொருவனையா னல்லா யென்றேன் [றேன்
போர்முகத்துக் கோழையைநான் புலியே றென்
வல்லாரும் புயமென்றேன் சூம்பற் றோளை
வழங்காத கையனைநான் வள்ள லென்றேன்
இல்லாது சொன்னேனுக் கில்லை யென்றான்
யானுமென்றன் குற்றத்தா லேகின் றேனே. (38)

ஒருவனைப் பாடி அவனிகழ்ச்சிசொல்ல, அப்போது
பாடிய அங்கதவகவல்.

எம்மிக ழாதவர் தம்மிக ழாரே
எம்மிகழ் வோரே தம்மிகழ் வோரே
எம்புக ழிகழ்வோர் தம்புக ழிகழ்வோர்
காரி பாரி நள்ளி யெழினி
ஆஅய் பேகன் பெருந்தோண் மலையனென்
றெழுவரு ளொருவனு மல்லை யதனால்
நின்னை நோவ தெவனோ [வுலவா
தட்டார்க் குதவாக் கட்டி போல]
நீயு முளையே நின்னன் னோர்க்கே
யானு முளனே தீம்பா லோர்க்கே
குருகினும் வெளியோய் தேளத்துப்
பருகுபா லன்னவென் சொல்லுகுத் தேனே. (39)

சில புல்லறிவாளர் தன்னைப் பாடச் சொல்லியபொழுது
பாடிய அகவல்.

மூவர் கோவையு மூவிளங் கோவையும்
பாடிய வென்றன் பனுவலா னெம்மையும்
பாடுக வென்றனிர்
நும்மையிங் கெங்ஙனம் பாடுகென் யானே

[ ] இதற்குள் அடங்கியவை, உண்மைப்பாடம் விளங்காமை யால், ஊகித்தமைக்கப்பட்டவை.

களிறுபடு செங்களங் கண்ணிற் காணீர்
வெளிறுபடு நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொற் புலம்பலுக் கிரங்கீர்
இல்வு வாய்ச்சிய ரிளமுலை புல்லீர்
அவிச்சுவை யல்லது தமிழ்ச்சுவை தெருளீர்
உடீஇ ருண்ணீர் கொடீஇர் கொள்ளீர்
ஓவ்வாக் கானத் துயர்மரம் பழுத்த
துவ்வாக் கனியெனத் தோன்றிய நீரே. (40)

திருக்கோவலூரில் அங்கவைசங்கவை என்கிற பெண்கள், வீட்டில் ஔவைக்கு இலைக்கறி இட்டபோது பாடிய வெண்பா.

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்
நெய்தா னளாவி நிறையிட்டுப்—பொய்யே
யடகென்று சொல்லி யமுதத்தை யிட்டார்
கடகஞ் செறியாதோ கைக்கு. (41)

சிற்றாடை கொடுக்க அப்போது பாடிய வெண்பா.

பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் றீந்த களைக்கோலுஞ்—சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர். (42)

சோழன் ஒருதுகிலைப்பார்த்துப் பராக்காகவிருப்ப, அப்போது பாடிய வெண்பா.

நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினு நூற்சேலை
நாற்றிங்க டன்னிற் கிழிந்துபோ—மாற்றலரைப்
பொன்றப் புறங்கண்ட போர்வே லகளங்கா
வென்றுங் கிழியாதென் பாட்டு. (43)

திருக்குடந்தையில் இரண்டுவேளாளர் ஒருவன் லோபியும் ஒருவன் விதரணியுமாக இருந்தவர்களைப் பாடிய
வெண்பா.

*திருத்தங்கி தன்வாழை தேம்பழுத்து நிற்கு*
*மருத்தன் றிருக்குடந்தை வாழை—குருத்து*
*மிலையுமிலை பூவுமிலை காயுமிலை யென்று*
*முலகில் வருவிருந்தோ டுண்டு.* (44)

ஒருவன், ஆடம்பரமாகவந்த கீழானபுலவன் கவியைக்கேட்டு இவள்கவி கேளாதிருந்தான்; அப்போது பாடிய
வெண்பா.

*விரக ரிருவர் புகழ்வாரும் வேண்டும்*
*விரணிறைய மோதிரமும் வேண்டும்—அரையிலொரு*
*பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்கவிதை*
*நஞ்சேனும் வேம்பேனு நன்று.* (45)

சேரன் கைலைக்குப் போகிறபோது ஔவையாரை அழைக்க, அவள் விநாயகபூசை பண்ணித் தாமதமாயிருப்ப விநாயகன் துதிக்கையா லெடுத்துக் கைலையில் விடச் சேரனைக்கண்டு பாடிய கலித்துறை.

*மதுர மொழிநல் லுமையாள் சிறுவன் மலரடியை*
*முதிர நினையவல் லார்க்கரி தோ முகில் போன்முழங்கி*
*யதிர வருகின்ற யானையுந் தேரு மதன்பின்வருங்*
*குதிரையுங் காதங் கிழவியுங் காதங் குலமன்னனே.* (46)

சேரன் கைலையிலிருக்கத் திரும்பிவந்து பாடிய
வெண்பா.

*சிறுக்கீரை வெவ்வடகுஞ் சேதாவி னெய்யு*
*மறுப்படாத் தண்டயிரு மாந்தி—வெறுத்தேனை*

வஞ்சிக்குங் கொற்கைக்கு மன்னவனேற் பித்தானே
கஞ்சிக்கும் புற்கைக்குங் கை. (47)

முருகவேள் கேட்கப் பாடிய அகவல்.

அரியது கேட்குந் தனிநெடு வேலோய்
மக்கள் யாக்கையிற் பிறத்தலு மரிதே
மக்கள் யாக்கையிற் பிறந்த காலையு
மூங்கையுஞ் செவிடுங் கூனுங் குருடும்
பேடு நீக்கிப் பிறத்தலு மரிதே
பேடு நீக்கிப் பிறந்த காலையு
ஞானமுங் கல்வியு நற்குற லரிதே
ஞானமுங் கல்வியு நற்குறு மாயினு
தானமுந் தவமுந் தரித்தலு மரிதே
தானமுந் தவனும் தரித்தார்க் கல்லது
வானவர் நாடு வழிதிற வாதே. (48)

தத்துவங் கூறிய வெண்பா.

ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும்
வென்றான்றன் வீரமே வீரமாம்—என்றானும்
சாவாமற் கற்பதே வித்தை தனைப்பிற
ரேவாம லுண்பதே யூண். (49)

உழவு நன்றோ என்று கேட்டபோது பாடிய வெண்பா.

ஏரு மிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய்
நீரருகே சேர்ந்த நிலமுமாய்—ஊருக்குச்
சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டா
லென்று முழவே யினிது. (50)

[பொய்யா மொழியார்]

வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
யாய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த

கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ. (51)

பொதியி லகத்தியனுய்ப் பொய்யா மொழியா
[யதிகை யமரப்பர்க் காளாய்த்]—துதிபெருகு
செங்காட்டுக் கோட்டந் துறையூ ரெனுந்தலத்துச்
சங்காத்தங் கொண்டிருப்பாய் தான். (52)

பாண்டியன்வாசலிற்போய்ப் பாதிவசையும் பாதி
நசையுமாகப் பாடிய கலித்துறை.

குழற்கா லரவிந்தங் கூம்பக் குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கான் மதியமன் றோநின் றிருக்குல நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே யிருந்துமவ் வந்திவண்ணன்
கழறகால் வணங்குதி யோவணங் காமுடிக் கைதவனே.

சங்கப்பலகையிற் சிவபெருமான்சங்கத்தாரைப்
பாடிய வெண்பா.

உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள்—சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழெண் பன்னாலு மேற்குமோ
வேடவிழ்தா ரேழெழுவி ரின்று. (54)

சங்கப்பலகை மிதப்பப்பாடிய வெண்பா.

பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்தன்
மாற னறிய மதுரா புரித்தமிழோர்
வீறணையே சற்றே மித. (55)

[ ] 'யதிசவமணைப்பாக்கிழாய' என்றுள்ளதை ஒருவாறு ஊகித்தமைக்கப்பட்டது: உண்மைப்பாடந் தெரியவில்லை.

காளையார்கோயில் தேவடியார் எழுபதுபேரும எழுபதினுயிரம் பொன்கொடுக்கப் பாடியவெண்பா.

*வாச மலர்மடந்தை போல்வார்வண் கானப்பே*
*ரீசன்றன் மக்க ளெழுபதின்மர்—தேசத்*
*திரவலர்மே னீட்டுவர்கை யீண்டுலகங் காக்கும்*
*புரவலர்மே னீட்டுவர்பொற் கால்.* (56)

சீநக்கன் கட்டுச்சோறு கொடுக்கப் பாடிய விருத்தம்.

*அளிகொ ளுந்தொடை யன்ன ரசைக்குமன்*
*ஒளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்*
*புளியஞ் சோறுமென் புந்தியிற் செந்தமிழ்*
*தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே.* (57)

சீநக்கனுக்குப் பாடிக்கொடுத்த வெண்பா.

*திறையின் முறைகொணர்ந்து தெவ்வேந்த ரீண்ட*
*இறையு மிறைகிடக்க லாகா—வறைகழற்காற்*
*போர்வேந்தர் போர்மாளப் போர்வா ளுறைகழித்த*
*தேர்வேந்தன் றஞ்சைத் தெரு.* (58)

கண்டியூர் வண்ணாத்தியைப் பாடிய வெண்பா.

*தூசுதூ சாக்குவார் பாவை சுடர்த்தொடிக்கை*
*யாசிலாக் கண்டியூ ரரணங்கு—வாசமலர்க்*
*கண்ணங்கை கொங்கைமுகங் காலுங் கடிக்கமலங்*
*கண்ணங்கை கொங்கைமுகங் கால்.* (59)

பொய்யாமொழிப்புலவர் முருகவேளைப் பாடிய வெண்பா.

*பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்குங் கானலிலே*
*யென்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலும்*
*மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்*
*கானவேன் முட்டைக்குங் காடு.* (60)

சிராமலையைப் பாடிய கலித்துறை.

அங்கம் புலியத ளாடையைச் சாத்தி யரவமுடன்.
பங்கம் புலிவைத்த பண்பர்க் கிடம்பனை வாளெயிற்று
வெங்கண் புலியைவிட் டியானையைத் தேடி விதம்விதச்
சிங்க மிருந்து தனித்தனி நோக்குஞ் சிராமலையே. [மாய்ச்

நாலுபேருக்குக் கண்டேரியப் பாடியவெண்பா.

கூத்தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தாடன்
மூத்தாண் முகத்தின் முழுநீல—மூத்தாட
னன்னை முகத்தி லரவிந்த மன்னைதன்
னன்னை முகத்திலிரண் டம்பு. (62)

பாண்டியன் 'நீர் நல்லபுலவர்' என்றபோது பாடிய
வெண்பா.

அறமுரைத் தானும் புலவன் முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவ னெனில். (63)

பொய்யாமொழியார்க்கு அபவாதம் வந்தபோது பாடியது.

தேரையார் தெங்கிள நீருண்ணூர் பழிசுமப்பார்
நாரியார் தாமறிவர் நாமவரை நத்தாமை
கோரைவாய் பொன்சொரியுங் கொற்றவன் றன் கண்டி
யூரைவாய் மூட வுரையறிந்தோ மில்லையே. (64)

புலையன்றன் னுடல்வெடிக்கப் பாடிய வெண்பா.

கோதில்குல மங்கைக் குலோத்துங்கச் சாவகனென்
றோதினேன் றன்னை யொறுப்பதனுன்—மாது
துளையாது முத்து வடந்தூக்கி னுளாம்
விளையாடாச் செப்பிரண்டின் மேல். (65)

இது சீநக்கருடன் தீப்புகுந்த பாட்டு.

அன்றுநீ செல்லக் கிடவென்று யாருயிர்விட்
டின்றுநீ வானுலக மெய்தினாய்—வென்றிதிகழ்
மாநக்க பூண்முலையார் மாரனே தென்னரசூர்ச்
சீநக்கா செல்லக் கிட. (66)

[கம்பர்.]

கம்பர் தெய்வவரத்தினாற் கவிசொல்லியநாளிற்
பாடிய வெண்பா.

மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று
வீட்டளவும் பால்சொரியும் வெண்ணையே—நாட்டி
லடையா நெடுங்கதவு மஞ்சலென்ற சொல்லு
முடையான் சரராம னூர். (67)

ஏரெழுபதுபாடி அரங்கேற்றும்போது புதுவைச் சேதிராயனை
விடந்தீண்டத் தீர்த்த வெண்பா.

ஆழியான் பள்ளி யணையே யவன்கடைந்த
வாழி வரையின் மணித்தாம்பே—பூழியான்
பூணே புரமெரித்த பொற்சிலையே பூட்டுகின்ற
நாணே யகல நட. (68)

மங்கை யொருபாகன் மார்பிலணி யாரமே
பொங்கு கடல்கடைந்த பொற்கயிறே—திங்களையுஞ்
சீறியதன் மேனூருந் தெய்வத் திருநாணே
யேறிய பண்பே யிறங்கு. (69)

காவிரி எச்சிற்பட்டப் பாடிய வெண்பா.

மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதுங் காவிரியே—பொய்கழுவும்

போர்வேற் சடையன் புதுவையான் றன்புகழை
யார்போற்ற வல்லா ரறிந்து. (70)

காவிரி பெருக்கடங்கப் பாடிய வெண்பா.

கன்னி யழிந்தனள் கங்கை திறம்பினள்
பொன்னி கரையழிந்து போனாளென் — றிந்நீ
ருரைகிடக்க லாமோ வுலகுடைய தாயே
கரைகடக்க லாகாது காண். (71)

ஒரு வேளாளன்களத்திற் குறுணிநெல் வாங்கி
வேலிக்காலிலிறைத்துப் பாடிய
வெண்பா.

செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாயில்வழிப் போகோமே—யிட்டமிலாப்
பார்ப்பா ரகத்தையெட்டிப் பாரோம் பரிசறிந்து
காப்பா ருழவாளர் காண். (72)

வாணியன்தாதன் விருதுகாளம் பிடிக்கப்
பாடிய கலித்துறை.

கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பாணங் குலக்கவி
காளம் பிடித்திடிற் சின்னம் படுமன்னர்காதலிமார் [க்குக்
வேளம் பிடித்தகண் வெள்ளம் பிடிக்கவெம் பேய்க்குழுப்
தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே [போய்த்

தாதனைப் பாடிய கலிப்பா.

தாதாவென் றாலுந் தருவென்று சொன்னாலுந்
தாதாவென் றாலுந் தருவனோ தாரர்தான்
தாதாவென் றாலுந் தருவென்று சொன்னாலுந்
தாதாவென் றாலுந் தருவனந் தாதனே. (74)

சோழனுடன் கோபித்துக்கொண்டு மதுரைக்குப்போம்போது
பாடிய வெண்பா.

*காத மிருபத்து நான்கொழியக் காசினியை*
*யோதக் கடல்கொண் டொளித்ததோ—மாதவா*
*கொல்லி மலையுடைய கொற்றவா நீமுனிந்தா*
*லில்லையோ வெங்கட் கிடம்.* (75)

கூட்டிக்கொண்டுவரச் சோழன் அனுப்பிய இணையார
மார்பனைப் பாண்டியன் இவனாரெனப்
பாடிய வெண்பா.

*என்னுடைய தம்பி சரரா மனுக்கிளையான்*
*கன்னி மதயானைக் கண்டன்மகன்—றன்னும்*
*புணையார்நீர் வேலிப் பழனஞ்சூழ் சோணாட்*
*டிணையார மார்ப னிவன்.* (76)

பாண்டியனுந் தேவியும் பல்லக்குச் சுமக்க அப்போது
பாடிய வெண்பா.

*உமையவனு நீயு மொருங்கொப்பே யொப்பில்*
*உமையவனுக் குண்டங்கோ ரூன—முமையவன்*
*பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டிய*
*பாகந்தோய்ந் தாண்டான் பதி.* [னுன் (77)

பின்னொருகாற் சோழனுடனே கோபித்துக்கொண்டு
சொன்ன வெண்பா.

*மன்னவனு நீயோ மண்ணுலகு மிவ்வளவோ*
*வுன்னையோ யான்புகழ்ந்திங் கோதுவது—மென்னை*
*விருந்தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோ சோழா*
*குரங்கேற்றுக் கொள்ளாதோ கொம்பு.* (78)

பிரதாபருத்திரனிடத்திற் போய் அவனடைப்பை கட்டிவரப் பாடிய வெண்பா.

*அவனிமுழு துண்டு மயிரா வதத்துன்*
*பவனி தொழுவார் படுத்தும்—புவனி*
*யுருத்திரா வுன்னுடைய வோரங்கல் நாட்டிற்*
*குருத்திரா வாழைக் குழாம்.* (79)

திருவொற்றியூர் வல்லியைக் கண்டு சொல்லிய கலிப்பா.

*இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம்*
*பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக்*
*கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ்*
*நில்லென்று போனாரென் னெஞ்சைவிட்டுப் போகாரே.* (80)

பின்பு சொன்னவிருத்தம்.

*நடக்கி லன்னமா நிற்கினல் வஞ்சியாங்*
*கிடக்கி லோவியப் பாவை கிடந்ததாந்*
*தடக்கை யான்சது ரானன பண்டிதன்*
*மடத்து ளாளென் மனத்துறை வல்லியே.* (81)

அப்போது வல்லிவீட்டுக்கு எருமைவாங்கிவரப்போய்க் காளிம்பன் நிரைமேய்ப்பானைக்கண்டு அவன்பேரிற் பாட்டுச் சொல்ல அவன் ஈன்றவெருமை ஆயிரங்கொடுத்த வெண்பா.

*புக்கு விடைதழுவிக் கோடுழுத புண்ணெல்லாந்*
*திக்கினுயர் காளிம்பன் றென்புழன்மா—னக்கணமே|க்கு*
*தோள்வேது கொண்டிலனேற் சுந்தரப்பொற்றோன் றனு*
*வாழ்வேது கண்டிலமே மற்று.* (82)

மயிலாப்பூரிற்போய்த்தட்டான் திருவாலிமேற்பாடியவெண்பா

*அண்ணறிரு வாலி யணிமயிலை யத்தனையும்*
*வெண்ணிலவின் சோதி விரித்ததே—நண்ணுந்*

தடந்துப்பு விற்பாணந் தன்முகத்தே கொண்டு
கடந்துப்பு விற்பா ணகை. (83)

பின்போருக்காற் குரும்பையென்னுந் தாதியைத்
தழுவிச்சொல்லிய கலித்துறை.

[கரும்பு
சொல்லியைச் சொல்லி னமுதான செல்வியைச் சொற்
வில்லியைமோகவிடாய்தணிப்பாளைவிழியம்பினுற் [றியூர்
கொல்லியைக்கொல்லியம்பாவையொப்பாளைக்குளிரொற்
வல்லியைப் புல்லிய கைக்கோ விவள்வந்துவாய்த்த
துவே. (84)

அதிகாரியை வெட்டுவிக்கப்பாடிய வழுப்பாட்டு.

சென்னி விளைகழனிச் செஞ்சிவாழ் சோழரண்டே
மன்னுபுக ழொற்றியூர் மடப்பக்க நாச்சியார்
தம்மை வட்ட பூழலோ பூழல். (85)

பின்பு 'காளியைப் பந்தம் பிடி' என்று பாடிய வெண்பா.

ஒற்றியூர் காக்க வுறைகின்ற காளியே
வெற்றியூர் காகுத்தன் மெய்ச்சரிதை—பற்றியே
நந்தா தெழுதற்கு நல்லிரவின் மாணுக்கர்
பிந்தாமற் பந்தம் பிடி. (86)

வில்லி களந்தைதமின்னே விண்ணவர்தங் கோமானை
வல்லிநெடுஞ் சேடனையவ் வாணனையாம்—புல்லியுறப்
பார்க்கும்போ துந்தாளைப் பற்றும்போ துந்தனத்தைச்
சேர்க்கும்போ துந்நினைப்பஞ் சென்று. (87)

இதுவும் ஒருபாட்டு.

நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன்
கற்படு திண்டோளன் கங்கண கணகணவன்

விற்புரை திருநுதலாள் மின்மினு மினுமினுவை
சொற்படிவேலைசெய்வாள் துந்துரு துருதுரும். (88)
(இதற்குத் தியாகம் ஆயிரக்கலநெல்லு.)

சோழன் கம்பர்மேலே புலியைக் கொல்லவிட்டபோது
பாடியது.

வெங்கண் சிவந்து வெடிவான் முறுக்கி வெகுண்டெழுந்தெ
ணங்கம் பிளக்க வரும்புலி யேயன் றிரணியனைப்
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றியுண்ட
சிங்க மிருப்பது காண்கெடு வாயென்றன் சிந்தையுள்ளே.

சோழன் எய்தபோது கம்பர் பாடியது.

வில்லம்பிற் சொல்லம்பு மேதகவே யானாலும்
வில்லம்பிற் சொல்லம்பு வீறுடைத்து—வில்லம்பு
பட்டுருவிற் றென்னையென் பாட்டம்பு நின்குலத்தைச்
சுட்டெரிக்கு மென்றே துணி. (90)

கம்பர் மரணகாலத்திற் பாடிய கவி.

ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்கனியுந்
தேம்பாய வுண்டு தெவிட்டுமனந்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணை வருசடையன் கம்ப
னிறக்கும்போ தல்லா லினி. (91)

தாதன் பாடிய வசை.

கைம்மணிச் சீரன்றிச் சீரறி யாக்கம்ப நாடன்சொன்ன
மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனை வாளெயிற் றுப்
பைம்மணித் துத்திக் கணமணிப் பாந்தட் படம்பிதுங்கச்
செம்மணிக் கண்பிதுங் கப்பதம் பேர்த்த செயதுங்கனே.

கம்பன்பேரிற் பாடிய கையறம்.

இன்றோநங் கம்ப னிறந்தநா ளிப்புவியி
லின்றோநம் புன்கவிகட் கேற்றநா—ளின்றோதான்

பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப
நாமடந்தை நூல்வாங்கு நாள். (92)

வாழைதூக்கின வலையனைப் பாடியது.

பந்தரிலே வாழைதூக்கும் பளையன்மகன் சோறன்
தங்கள் வீட்டிலே யிருந்தனு மிறந்தான் தங்க
ளாத்தாள் வீட்டிலே யிருந்தானு மிறந்தான் (93)

## [ தொல்காப்பியதேவர் ]

தொல்காப்பியதேவர் சமணர்கோவிலுக்குச் செங்கலறுப்பிக்கச் சிவதலத்தார் தங்களேல்லையென்றபோது பாடியது.

வேத மொழிவிசும்பு மேனி சுடர்விழிமண்
பாதந் திருப்பா திரிப்புலியூர்—நாதர்
பரமாம் பரமாம் படிகடலெண் டிக்குங்
கரமா மவர்க்குயிர்ப்பாங் கால். (94)

(இதுகேட்டுக் கலம்பகம் பாடச்சொல்லிப் பாடினர்.)

## [ இரட்டையர் ]

அரங்கேற்றும்போது சிதம்பரத்திற் கயிறுபோட்டுப் பார்க்கக கண்டகவி.

பாடுவார் பாடும் பரிசில் வரிசையெல்லாம்
ஆடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே. (95)

இரட்டையர் திருவக்கைக் கோங்கராயன் அசனம் இடுவித்தபோது பாடியகவி.

சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்டநாயன் றமிழ்க் கொங்கர்கோன்-பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே-யூணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர் வானிலே-வீணுக்கு நின்னக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே. (96)

திருவண்ணாமலைச் சம்பந்தன் சமுத்திபாடச் சொன்னது.

மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்தனுக்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதேன் —மின்னி
னிளைத்த விடைமடவா ரெல்லாருங் கூடி
வளைத்திழுத்துக் குட்டா மலுக்கு. (97)

சம்பராசன் விகடசமுத்தி பாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சியேகாம்பரன்சம்பனெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம்வேட்டவிற்பூவையன்
ஞன் -வெறிக்குங் கருங்கொங்கை மீதேவிழிசொரிவெள்
ளந்துள்ளித் - தெறிக்குந்திவலை யழிக்குஞ்சிந்தூரத் தில
கத்தையே. (98)

இது படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்று லலைப்புண்டுங் கண்ணன் கடல்கடைந்து
மேற்று னெடுத்து வளைத்தெய்து—மாற்றுத
செம்பொன் மலையில்லை சேனுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா (99)

ஆறு விலகிய பாட்டு.

ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதம்ப மோதங்கு மாவம் பலபலவா
மாற்கமு மாகின் முூர்மாதை நாதர். வலங்கொள்பம்பை
மேற்கரைகோயில்கொண்டார்புரஞ்சீறியவெங்கணைக்கே.

திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச்சொன்னபோது பாடியகவி.

தொல்காப் பியதேவர் சொன்ன தமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைப்ப தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் பொருணழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே.

காட்டுவழியிற் போம்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடைகூறியது.

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ—வொன்றுங்
கொடாதாரைச் சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்ன
விடாதோ வதுவே யிது. (101)

செயங்கொண்டார் அபயன் 'உமதூர் எது' என்று கேட்டபோது சொன்ன கவி.

செய்யும் வினையு மிருளுண் பதுவுந்
தேனுங் நறவு மூனுங் களவும்
பொய்யுங் கொலையு மறவுந் தவிரப்
பொய்தீ ரறநூல் செய்தார் தமதூர்
கையும் முகமு மிதழும் விழியுங்
காலுந் நிறமும் போலும் கமலங்
கொய்யும் மடவார் கனிவா யதரங்
கோபங் கமழுந் தீபங் குடியே. (102)

அபயன்மேற் கோபம்வந்தபோது பாடியது.

காவல னீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழா
மேகாப் பொருளளித்தேன் யான். (103)

செட்டிகள்மேல் இசையாயிரம் பாடியபோது, சேக்கிழார் புகார் தங்களுக்கு ஊரென்று பாடச்சொல்லியது.

ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணேயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே—நீடுபுகழ்க்

கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தா
முச்சிக்குப் பின்புகா ரூர். (104)

[ஒட்டக்கூத்தர்.]

ஒட்டக்கூத்தருக்குச் சரசுவதி தம்பலங்கோடுக்கக் கவிதை யுண்டாகிய கூத்தமுதலியார் அரும்பைத்தோள்ளாயிரம் பாடும்போது, விக்கிரமசோழன்கேட்டு 'ஒருகவியை ஒட்டச்சோல்' என்று சோன்னபோது பாடியது.

நடித்தது நச்சர வுச்சியி னுச்சி மதிலிலங்கை
யிடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டா
லடித்தது பொற்கிரி விக்ரம சோழ வகளங்கனே. (105)

சோழன் வரிசையளித்து விடுத்தபோது கூத்தர்கூறிய வகுப்பு.

இடுக்கட்புண்படு கிரப்புக்கொண்டுழன்
றிரக்கச்சென்றவின் றெனக்குச்சிங்களந்
திடுக்குற்றஞ்சும்வெஞ் சினத்துச் செம்பியன்
றிருக்கைப்பங்கயஞ் சிறக்கத்தந்தன
படுக்கக்கம்பளம் பதக்கக்குங்குமம்
பதிக்கக்கங்கணம் பரிக்கக்குஞ்சரங்
கடுக்கக்குண்டலங் கவிக்கச்சங்கினங்
கவிக்குப்பஞ்சரங் கவிக்குத்தொங்கலே. (106)

இந்தவிருதுகள்யாருக்கு? என்றபோது பாடியது.

பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்போய்முடியப்
பைம்பொற்று ரகைசிந்தப் பகிரண்டத் திடையே
மத்துக்கொண் டமுதத்தைக் கடையாழித் திருமால்
வடிவாகிப் புவிகைக்கொண் டருண்மானு பரனு

*முத்துப்பந் தரினிற்குங் குருளைக்குஞ் சினவேண்*
*டாமுருகற்கும் பொதியக்கோ முனிவற்கும் புதுமக்*
*கொத்தற்கும் சடிலக்கொந் தளருக்கு மல்லாற்*
*கூழைத்தண் டமிழர்க்கேன் கொடியுங்கா ளமுமே.*

விக்கிரமசோழனுலாப் பாடியபோது, இரண்டுகேண்ணியை ஒருபாட்டாகப் பாடென்றபோது பாடியது.

*கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்*
*செய்ய கரிய திருமாலே—வைய*
*மளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி*
*வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.* (108)

கலிங்களையறுத்தபோது சேரனும் பாண்டியனும் பாவமென்று ஓலைவரவிட, ராசா வெட்டவந்தபோது பாடியது.

*அன்றையினு மின்றைக் ககன்றதோ வல்லாது*
*குன்றெடுத்து நீதிருத்திக் கொண்டாயோ—வென்று*
*மடைந்தாரைத் தாங்கு மகளங்கா நீயும்*
*நடந்தாயோ நாலெந் தடி.* (109)

கண்டன் செண்டுவெளியிற் குதிரையேறியபோது பாடியது.

*கண்டன் பவனிக் கவனப் பரிநெடுங்கால்*
*மண்டுளக்கா தேயிருந்த வாறென்னே—கொண்டிருந்த*
*பாம்புரவி தாயல்ல பாருரவி தாயல்ல*
*வாம்புரவி தாய வகை.* (110)

ஆனை நிகளம்விடுத்தபோது பாடியது.

*இன்னங் கலிங்கத் திகல்வேந்த ருண்டென்றோ*
*தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ—சென்னி*
*யகளங்கா வுன்ற னயிரா வதத்தி*
*னிகளங்கால் விட்ட நினைவு.* (111)

கண்டன் துலா புருடதானம் பண்ணியபோது பாடியது.

தொழுகின்ற மன்னர் சொரிந்திட்ட செம்பொற்
றுலாத்திடைவண் - டுழுகின்ற தார்க்கண்ட னேறிய
ஞான்றி லுவாமதிபோய் - விழுகின்ற தொக்கு மொரு
தட்டுக் காலையில் வேலையில்வந் - தெழுகின்ற ஞாயிறொத்
தான்குல தீப னெதிர்த்தட்டிலே. (112)

தேவி ஊடலாய்க்கதவடைத்தபோது பாடியது.

க்ரத்துஞ் சிரத்துங்களிக் குங் களிற்றுடைக்கண்டன்வந்தா
னிரத்துங் கபாட மினித்திறப் பாய்பண் டிவணணங்கே
யுரத்துஞ்சிரத்துங் கபாடந்திறந்திட்ட துண்டிலங்கா
புரத்துங் கபாட புரத்துங்கல் யாண புரத்தினுமே. (113)

கவிகளையறுத்தபோது புலவரெல்லாம்வெகுளப் பாடியது.

பாட்டுத்தொடுக்கும்புலவோர்க்குக்கூத்தன் பயப்படல்பே
தாட்டுக் கடற்புலி யஞ்சலன் றேவ றுத் துக்கிடந்த
சூட்டுக் கதிர்க ணிலத்தடங் காமற் றெருகுத்துமள்ளர்
மேட்டுக்குவாலிடும்பொன் னிநன் னாடுடைவேற்கண்டனே.

கவிஞரை வெட்டவேண்டாமென்று நேற்குன்றவாண
முதலியார் பாடியது.

கோக்கண்டு மன்னர் குரைகடற் புக்கிலர் கோகனகப்
பூக்கண்டு கொட்டியும் பூவாதொழிந்தில பூவில்விண்ணோர்
காக்கண்ட செங்கைக் கவிச்சக்ர வர்த்திநின் கட்டுரையாம்
பாக்கண் டொழிவர் களோ தமிழ் பாடிய பாவலரே. (115)

ஒட்டக்கூத்தன்பாதி சோழன்பாதி பாடியகவி.

ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லா
நீடுங் குடையிற் றரித்த பிரானென் று நித்தநவம்
பாடுங் கவிப்பெருமானொட்டக்கூத்தன் பதாம்புயத்தைச்
சூடுங்குலோத் துங்கசோழனென் றேயெனைசொல்லுவரே

உலாப்பாடியபோது, பேராசிரியர், நேமிநாதர்
பட்டோலை பிடிக்கப் பாடியது.

*செங்கான்மட வன்னம்படர் தீயாமென வெருவிச்*
*சிறையிற்பெடைமறையக்கொடுதிரியத்திரள் கமுகின்*
*பைங்கான்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்*
*பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா*
*தங்காதலி யருமைந்தரு முடனாக வணங்கித்*
*தலைகாவெம துடல்காவெம துயிர்காவக ளங்கா*
*கொங்காமனை துங்காவென மதுரேசர் வணங்குங்*
*கோல்யானை யபங்காவிவள் குழலோசை பொருளே.*

இராசாவுக்கு வேளையேதென்றுகேட்ட சோமனுக்குச்
சொல்லியது.

*தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் றானுரைப்ப*
*துன்னுடைய கீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்*
*சோமா திரிபுவனத் தோன்றலே நின்புகழை*
*யாமா ருரைக்க வினி.* (118)

பழிகாரர் தொடர்ந்தபோது சோமன்வாசலில் ஓடிச்சொன்னது.

*அடையென்பார் தள்ளென்பா ரன்பொன் றிலாமற்[றால்*
*புடையென்பார் தங்கடைக்கேபோகேம்—கொடையென்*
*முந்துஞ்சோ மாபுவனை முன்னவனே நின்கடைக்கீழ்*
*வந்துஞ்சோ மாதலான் மற்று.* (119)

கூத்தன்மாணிக்கன் பாடிய அந்தாதிச்சமுத்தி.

*மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக்*
*காவுறங்கின வின்னமென் மகள் கண்ணுறங்கிலள் கைய*
*கோவுறங்குகடைத் தலைக்குலதீப வள்ளைகுதட்டநின் [ணைக்*
*றாவுறங்கு புகாரசஞ்சல வஞ்சலென்ன வடுக்குமே.* (120)

(இரண்டாமடி அம்பிகாபதி பாடியது.)

ஏகா வடமென் னிருகொங் கையின்மே
லாகாவட மான தறிந்திலையே
த்யாகா பரஞ திசையா னைகளின்
பாகா பரராச பயங்கரனே. (121)

இராசா கைகொடுத்தபோது பாடியது.

கொலையைத் தடவிய வைவே லரக்கர் குலமடியச்
சிலையைத் தடவிய கையே யிதுசெக தண்டத்துள்ள
மலையைத் தடவிய விந்தத்தடவி மலைந்தவொன்னார்
தலையைத் தடவி நடக்குங்கொல் யானைச் சயதுங்கனே.

மடையனைத் தண்டஞ்செய்ததை விலக்கப் பாடியது.

மீனகம் பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப்
போனகம பற்றிய மாலல்லை யோபொருந் தாவரசர்
கானகம் பற்றக் கனவரை பற்றக் கலன்கள்பற்ற
வானகம் பற்றக் கதிர்வேல் விடுத்த மனதுங்கனே. (123)

அரியைப் பாடவேணுமென்னப் பாடியது. [ன்

ஆரேயெனுமொன் றுசொல்லத்தொடங்கினுமவ்விடத்து
பேரேவருமென்னபே றுபெற்றேன்பெருநான்மறையின்
வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த
காரே கடல்கொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே.(124)

[புகழேந்தி]

சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண் டோட்டம்புகும்
பித்தனிவனென் பரென்னைக்கண்டாய் பிழைத்துக்கனைத்
தத்த முதுகிட்ட தெவ்வேந்தர் தங்கள் தடமகுட [தே
சத்த மவசத்த மாகுங்கொல் யானைச் சயதுங்கனே.(125)

தேவி ஊடலாற் கதவடைத்தபோது பாடியது.

தூபங் கமழும்பைங் கோதையன் விக்ரம சோழன்மன்னர்
தீபன் புறங்கடை வந்துநின் றானின் றிருப்புருவச்
சாபங் குனிய விழிசிவப் பத்தலை சாய்த்துநின்ற
கோபந் தணி யன்ன மேயெளி தோநங் குடிப்பிறப்பே.

இழையொன் றிரண்டுவகிர்செய்த வற்றொன் றிணையு
மிடை - குழையொன் றிரண்டுகட் கொம்பனை யாய்கொண்
ட கோபந்தவிர் - மழையொன் றிரண்டுகைம் மானபரன்
கண்டன் வாசல்வந்தாற் - பிழையொன் றிரண்டு பொறுப்
பதன் றோகடன் பேதையர்க்கே. (127)

நானே யினிச்சொல்லி வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்து விடாய்செம்பொன் மாரிபொழி
மானே ரபய னிரவி குலோத்துங்கன் வாசல்வந்தாற்
றானே திறக்குநின் கைம்மல ராகிய தாமரையே. (128)

இராசா துலாபுருடதானம் பண்ணியபோது பாடியது.

பொருந்த வொருதட்டு மேருப் புகினு
மிருந்த திருத்தட் டெழாதாற் - றிருந்து
மறைப்புக்க சொல்லபயா வன்புறவுக் காக
நிறைப்புக்க தெவ்வாறு நீ. (129)

சூதிற் றேவியை உயர்த்திப்பாடியது.

பழியும் புகழு மெவர்க்குமுண் டாமிந்தப் பாரினுணக்
கழியுஞ் சிலையுங் கயலுமன் றோவக ளங்கதுங்க [ண்டு
மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ர வர்த்தி முகத்திர
விழியும் புருவமு மாகியிப் போதுன்னை வெல்கின்றவே.

சாருவபூமன், பாண்டியனுண்டிநிமித்தமாகக் கோபித்து,
ஆரியசேகரன் வாசலிலேயும் இந்தக்குறும்பு
செல்லுமோ என்னப் பாடிய வெண்பா.

*கவியரசர் தம்முனிவு கண்டாற் புகழ்கொள்*
*புவியரசர் சீரே பொறுப்பார்—கவியரச*
*ருன்னல் முனியில் வரப்பெறு ரோதுமவர்க்*
*கெந்நாடுஞ் செல்லாத தில்.* (131)

ஆரியசேகரனிடத்திற் போயிருந்து புத்தசமயத்திற் கடகம்
யானை வாங்கிமீண்டு மதுரையில்வந்து பாண்டியன்
வரிசையளிப்ப இருந்தபின் ஆரியசேகரன் அகப்
பட்டபோது கேட்டபின் பாடிய கவி.

*ஆஅ விதியோ வடலா ரியர்கோமான்*
*ஏஎ வலரா விழிந்தநாள்—ஓஒ*
*தருக்கண் ணிலுங்குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட*
*திருக்கண் ணிலுஞ்சுடுமோ தீ.* (132)

கதிர்காமத்து வேலர்முன் பாம்பை மயில்விடப் பாடிய கவி.

*தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்*
*வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்*
*சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமா*
*ளேறு மயிற்பெருமா ளே.* (133)

இராசாவைப் பாடாமல் ஓடக்காரனைப் பாடியது.

*கயக்காவி நாறுங் கொழும்பிற் ப்ரசண்டா*
*காரேர் கொடைச்செங்கை யாரோதன் மைந்தா*
*இயக்காபொன் மார்பிற் செழும்புன்னை யந்தா*
*ரிப்போது நீநல்கி லென்பேதை தன்மேற்*

சயக்கரம வேளம்பு தையாது முத்தின்
ருமஞ்சு டாசந் தனம்பூசி னாலுந்
தியக்காது வேயும் செவிக்குப் புகாது
தீயென்று மூளாது திங்கட் கொழுந்தே. (134)

பாண்டியன் வாசலிலே வந்து, அவன் புறப்படவில்லை
யென்று பழியாகப் பாதிபாடி அவன்வந்து வணங்கப்
புகழாகப் பாடியது.

எண்ணீர்மை நாலுக் ககத்திய னாமிவனென்பதெல்லாம்
வெண்ணீர்மை யன்றிவிரகல்ல விக்ரம மாறன்செஞ்சொற்
பண்ணீர்மை தேறும் பராக்ரம மாறன் பதங்கழுவுந்
தண்ணீர் குடித்தல்ல வோகும்ப யோனி தமிழ்கற்றதே.

ஆரியசேகரன் ஆனைமேல் ஆயிரம்பொன்னும் வரவிட வந்த
யானையைப் பாண்டியன்வந்து கேட்கப் பாடியது.

பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்குங்
காவலர் நிற்கும் படிவைத்த வாகண்டி யொன்பதினும்
மேவலர்மார்பினுந் திண்டோளினுஞ்செம்பொன் மேருவி
சேவெழு தும்பெரு மாள்சிங்கை யாரிய சேகரனே [னுஞ்

சித்திரத் தனுமனைப் பாடச்சொல்லப் பாடியது

புராதன மென்னுங் கவிப்புல வீரிந்தப் புன்குரங்கு [ன்
இராவணம்விட்டிங்குவந்ததென்னோவந்த வாறுசொல்வே
தராதல மெண்ணுந் தமிழ்மா றனையுமித் தம்பியையு
மிராகவ னென்று மிலக்குவ னென்றும்வந் தெய்தியதே.

வேம்பத்தூரார் சமுத்திசொல்லப் பாடியது.

இந்து நுதலழ கோரகுரா மாவிவட்குக்
கொந்து முடிமுகிலோ கோவிந்தா—வெந்திறல்சேர்
வேலோ விழியிரண்டும் வேங்கடவா னைவயி
றாலிலையோ நாராய ணா. (138)

## [பழையனூர் நீலி விஷயம்]

பழையனூரார் பழிதீர்ந்த தீக்குழி அவியாதெரிய மூவேந்தரும் வந்துபார்த்துப் பாடியவை.

இது சேரன்.

*யாவரே காராளார் யாவ ரிணையாவார்*
*நாவலோ நாவலோ நாவலோ—கோவைப்*
*பொருப்பா லவித்தார்க்குப் போதுமே யுண்மை*
*நெருப்பா லவித்தார்க்கு நேர்.* (139)

இது சோழன்.

*எல்லை பலகடந்திட் டெங்கும் புகழ்பூத்துத்*
*தொல்லை மனுக்காகத் தோன்றிற்றே—கொல்லை*
*வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த*
*குழியிலெழு செந்தீக் கொழுந்து.* (140)

இது பாண்டியன்.

*பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப்*
*பிழைத்தார்க ளன்று பிழைதீர்ந்தார்—பிழைத்தார்க*
*ளொல்லாருங் காண வெரியகத்தே மூழ்கினா*
*ரெல்லாரு மின்று முளர்.* (141)

அச்சுதகளப்பாளன் தலையிட்டபோது சேரன் பாடியது.

*தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல்*
*தனைவிளைத்தார் முற்றமது தானுங்—கனைசீர்*
*முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை*
*யரசுணங்கு மச்சுதன்முற் றத்து.* (142)

இது சோழன்.

*அரசர் குலதிலக னச்சுதன்முற் றத்தி*
*லரச ரவதரித்த வன்னாண்—முரசதிரக்*

கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் கால்விலங்கை
வெட்டிவிடு மோசை மிகும். (143)

இது பாண்டியன்.

குறையுளா ரெங்கிரார் கூர்வே லிராம
னிறையறு திங்க ளிருந்தா—னறைதுளிக
ளாலிக்குந் தார்மாலை யச்சுதா முன்னமொரு
வாலிக் கிளையோன் வரை. (144)

இதுபாடியபின்பு, ஒருவிலங்குகூடப்போட்ட பின்பு
பாண்டியன் பாடியது.

குடகர் குணகடலென் றார்த்தார் குடகர்க்
கிடகர் வடகடலென் றார்த்தார்—வடகடலர்
தென்கடலென் றார்த்தார்தென் றில்லையச்சு தானந்த
முன்கடைநின் றார்க்கு முரசு. (145)

சேரமான் கணைக்காலிரும்பொறை செங்கணுற்
றுணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்டபோது
பொய்கையாருக்கு எழுதிவிடுத்த பாட்டு.

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற் றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே. (146)

(இதுகேட்டுப் பொய்கையார் களவழிநாற்பதுபாடச்
செங்கணன் சிறைவிட்டரசளித்தான்.)

———

நெடுஞ்செழியனைச் சேரனுஞ் சோழனுஞ் சிறியனென்றிடப் பாடிய பாட்டு.

நகுதக் கனரே நாடுமீக் கூறுந
ரிளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையும் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
யருஞ்சமந் ததையத் தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
வென்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோல னாகுக
வோங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
வுலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடா தொழிகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
விரப்போர்க் கீயா வின்மையா னுறவே. (147)

பாண்டியன் அழகாகக் கூத்துப் பார்க்குமிடத்திற் பாராமுகமாக, கூத்தாடினவள் கோபித்துக்கொண்டு விழுங்காற் பாடியது.

மாகுன் றனையபொற் றோளான் வழுதிமன்
வான்கரும்பின்
பாகென்ற சொல்லியைப் பார்த்தென்னைப்
பார்த்திலன் பையப்பையப்

போகின்ற புள்ளினங் கான்புழுக் கோட்டம்
புகுதலுண்டேற்
சாகின் றனனென்று சொல்லீ ரயன்றைச்
சடையனுக்கே. (148)

பாண்டியன் இந்தக்கவியைக்கேட்டுச் சோதிக்கச் சிலரை விடுக்க, அவன் சூலிமுதுகிற் சோறிட்டபோது பாடியது.

இரவ லாளரே பொருந்திரு வுறுக
வரவுமிழ் மணியு மலைகட லமுதுஞ்
சிங்கப் பாலுந் திங்கட் குழவியும்
முதிரை வாலுங் குதிரை மருப்பு
மாமை மயிரு மன்னத்தின் பேடு
மீகென விரப்பினு மில்லென வறியான்
சடையனை யயன்றை தலைவனை
யுடையது கேண்மி னுறுதியோ வாதே. (149)

தொண்டைமண்டலத்த வேளாளரைப் பாடியது.

வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரென்-றையன் களந்தைப் புகழேந்தி யாண்டா னுரைத்த வவரோர்நீ-ரெய்யுஞ் சிலைக்கை மதவேளே யிராசா திபனே யிரப்போர்கள் - ஐயந் தவிர்த்த பெருமாளே யாவோ மடியோ மாவோமே. (150)

(பின்னிரண்டும் வேளாளர் பாடியது.)

அறம்வளர்த்தமுதலியாரைக் கலம்பகம் பாடலாமோ என்று புலவர்க்குக் கூறியது.

உங்கள் மனந்தெரி யும்புல வீரொரு சீர்மரபோன்
[திங்களின் கூடச்செம் பூரணமா]
துங்கண் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றே
எங்கள் மரபுண் டெனக்கவி பாடினம் யாமவர்க்கே.(151)

விட்டிலிராசாவைப் பாடியது.

தொட்டி லிருக்கத் தொடங்கிய நாண்முதலா
யட்டதிக்கு நின்குடைக்கீ ழாயிற்றே—விட்டலையா
தன்குமரி யன்றித் தனிக்குமரி கொள்ளாநீ
தென்குமரிக் கேகுவதேன் செப்பு. (152)

[வரதுங்கராம பாண்டியன் மனைவி]

பணியாரக்குடத்துள் மதுரைக்குப் பாண்டியன்றேவி விடுத்த கவி.

என்னையிவ்வா றவர்மறந்து யானவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்றானே விப்பிறப்பிற்
செய்தபவ முடிந்த வாறோ
கன்னன்மத னபிராமன் வரதுங்க
ராமனியற் காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்கா ளினியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறே. (153)

செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங்
கணவனுடன் சேர்ந்து வாழ
வொப்பாரு மில்லாவென் கணவனுடன்
யான்கூடி யுறவா டாமல்
வெப்பாலு மிகுகாமத் துயராலு
நாடோறு மெலிந்து வாடி
யிப்பாடு படவென்றோ யிறையோனென்
றலையோட்டி லெழுதி னானே. (154)

எண்டிசாமுகமுந்திங்க ளிளநிலாவெள்ளங்காயக் [சோரப்
கொண்டமால்பெருகுந்தோறுங்கொழுங்கணீர்முலையிற்

பண்டுகாமறியாக்காமத் துயரிறுற்படுவதெல்லாம்
வண்டுகாணுரையீருங்கள் வரதுங்க ராமனுக்கே. (155)

[சத்தி முற்றப் புலவர்.]

சத்திமுற்றத்தில் ஒருபுலவன் பாண்டியன்மதுரைக்குப் போகப் பாண்டியன்வாசற்புலவர் வாசல்விடாமல் மறிக்க ஊரிலம்பலத்திற் கிடந்தான் பாடியது.

நாராய் நாராய் செங்கா னாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் பெடையும்
தென்றிசைக் குமரி யாடி வடதிசைக்
காவிரி யாட வேகுவி ராயின்
சத்தி முற்றத்து வாவியிற் சென்று
நனைசுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி
வரவுபார்த் திருக்கு மனைவியைக் கண்டெங்
கோமான் வழுதி கூடல் மன்றத்
தாடை யின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇ
யலகுதிர்க் தன்ன பல்லின னாகிப்
பேழைசெய் பாம்பென வுயிர்க்கு
மேழை யாளனைக் கண்டன மெனுமே. (156)

(இது இராசா நகரிசோதனையிற்கேட்டு மறுநாள் வரிசைபண்ணி வீடும் ஆள்விட்டுக்கட்டுவித்துப் பின் அனுப்பினான்.)

சோழன்புலவன் பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவது கண்டு கூறியது.

மான பரனபயன் வந்தானெனவழுதி
போனவழி யாரேனும் போவரோ—ஆறாற்

படவே யமையாதோ பாவியே னிந்தக்
குடைவே லிடைநுழைந்த கோ. (157)

வசைபாடிய புலவன், மதுரையிற் பாண்டியன் கண்டு
முனியப், பின்னுங் கூறியது.

இலங்கிலைவேற் கிள்ளி யெதிர்மலைந்த வந்நாள்
பொலன்கலனும் பொன்முடியுஞ் சிந்த—நிலங்குளுங்
வோடினான் மேலோ ருயர்கானவன் குடையாய்ப்
பாடினார் மேலோர் பழி. (158)

அம்பனைக் கோன்றானென்று பழிகூறப் பாண்டியனிடத்திற்
சோழன்விட்டு புலவன் முடிசூட்டுமங்கலநாட்பாடிய வசை.

பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரில்
ஈண்டிரெண விட்ட வெழுத்தல்ல—பூண்டதிருப்
போகவென்றும் வேற்றார் புகுதவென்று நீயிவண்விட்
டேகவென்று மிட்ட வெழுத்து. (159)

(இதுகேட்டு நன்றாகவே பொருள்கூறியும், பரிசில்கொடுக்க
மறுத்தான்; நீ வந்தகாரியம்வேண்டிற் சோழன்பாற்
போவென்றான்.)

சோழன் புறக்கொடையிற் பாண்டியன்புலவன் கூறியது

ஆறெல்லாஞ் செந்நீ ராருகெல்லாம் பல்பிணங்கள்
தூறெல்லாஞ் சோழன் சுரிகுஞ்சி—மாறில்லாக்
கன்னிக்கோ னேவமுடிக் காரிக்கோன் பின்றொடரப்
பொன்னிக்கோன் போன புகார். (160)

ஒருதாதியை ஒரு புலவனுக்களிப்பஅவளுடலிற்சொல்லியது

முன்னா ளிருவர் முயங்கும் படிகண்டு
மன்னா பணிதவிர்த்து வாழ்வித்தாய்—துன்னார்தஞ்
சேனைகண்டா லாவிக்குஞ் செம்பியர்கோன் செங்கண்
தானைகண் டார்தா மவர். [விழித்

சோழனுந் தேவியும் பாடியவை.

(இது தேவி பாடியது)

*காடுமீ னம்பட்டக் கண்டகங் கண்டன்மேற்*
*கோடுமேய் துறையுறைக் கொண்டலும் பின்கொளத்*
*தேடுநீடுங் கொடித் தேருநா முய்யவந்*
*தாடுமே பாடுமே யன்னமே யின்னமே.* (162)

இது சோழன் பாடியது.

*மலையினுங் கானினும் போயினர் வருவரே*
*முலையினும் பலபொரி முழுநிறங் கொள்ளுமே*
*துலையிலங் கியகொடைச் சோமன்வாழ் புவனியிற்*
*றலையிலங் கியதடத் தன்னமே யின்னமே.* (163)

(இது கேட்டுச் சோழன் மடியில் வைத்தான்)

*கானேந்தேன் வந்தேன் கடுக வழிநடந்தேன்*
*யான்வந்த தூர மெளிதன்று—கூனன்*
*கருந்தேனுக் கங்காந்த காவிரிசூழ் நாடா*
*விருந்தேனுக் கெங்கே யிடம்.* (164)

குருநமச்சிவாயர்.

*அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்கும்*
*சித்த மகிழ்ந்தளிக்குந் தேசிகா—மெத்தப்*
*பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி*
*யெரிக்குதையா காரோண ரே.* (165)

(காரோணர் அமுது கொடுத்தார்.)

## [ஏகம்பவாணன் விஷயம்]

வாணன், தாதிமேற் கோபமாய்
விலங்குகொண்டுவா என்றபோது பாடியது.

*அலங்க லணிமார்ப னுறையர்கோன் வாணன்*
*விலங்கு கொடுவருக வென்றா—னிலங்கிழையீர்*

சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு. (166)

நாலு தாதியரைப் பாண்டியன்மாலைவாங்கிக்கொடுப்ப அனுப்ப, அவர்கள் பாடியவை.

தென்னவா மீனவா சீவலமா றுமதுரை
மன்னவா பாண்டி வரராமா—முன்னஞ்
சுரும்புக்குத் தாரளித்த தூயதமிழ் நாடா
கரும்புக்கு வேம்பிலை கண். (167)

மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தார்க் கல்லவஞ்சி
வேப்பந்தார்க் காசைகொண்டு விட்டாளே - பூப்பைந்தார்
சேர்ந்திருந்த நெல்வேலிச் சீவலமா றுதமிழை
யாய்ந்துரைக்கும் வீரமா று. (168)

வேம்பா கினுமினிய சொல்லிக்கு நீபுனைந்த
வேம்பா கினுமுதவ வேண்டாவோ—தேம்பாயும்
வேலையிலே வேலைவைத்த மீனவா நின்புயத்து
மாலையிலே மாலைவைத்தாள் மான். (169)

இந்த மூன்று கவிக்கும் மாலைகொடானாகப் பின்னொருத்தி பாடியது.

இலகு புகழாறை யேகம்ப வாண
வலனை வரும்வருமென் றஞ்சி—யுலகறிய
வானவர்கோன் சென்னியின்மேல் வண்ண வளையெறிந்த
மீனவர்கோன் கைவிடான் வேம்பு. (170)

(இதுகேட்டு மாலைகொடுத்தான்)

வாணனுடையபாணன் மதுரையிற் போனபோத டாண்டி
யன்கொடுத்த தியாகம் வாணன்கையினுலேற்ற வலது
கையாலல்லாமல் இடக்கையாலேற்கப் பாண்டி
யன் உள்வனென்று இகழ்ந்தபோது
பாடியது.

*சேனை தலையாக்கிச் செங்குருதி நீர்தேக்கி*
*யானை மிதித்த வருஞ்சேற்றில்—மானபரன்*
*மாவேந்தன் வன்கண்ணன் வாணன் பறித்துநடு*
*மூவேந்தர் தங்கண் முடி.* (171)

திருக்கண்ணபுரத்துத்தாதி முனையதரையனுக்கு
எழுதிவிடுத்த பாட்டு.

*இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு*
*நின்று வரிலதுவு நீயறிவை—வென்றி*
*முனையா கலவி முயங்கியவா றெல்லா*
*நினையாயோ நெஞ்சத்து நீ.* (172)

திருவழுந்தூர்த்தாதியைச் சோழன் எந்தஊரென்று
கேட்டபோது பாடியது.

*கம்பன் பிறந்தவூர் காவேரி தங்குமூர்*
*கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத்*
*தாதகத்து நான்முகனுந் தாதையுந்தே டிக்காணு*
*வோதகத்தார் வாழுமழுந் தூர்.* (173)

பரிசில்பெற்றுக் கிராமப்பிரதக்ஷிணம்வரும் புலவன்
உப்பரிகைமேற் பார்த்த ஒருத்தியைக்கண்டு
விரகமாய்ப் பாடியது.

*என்னெஞ்சு மென்விழியுங் கொண்டோ விலங்கேசன்*
*பொன்னஞ் சிகாமணியும் பொன்முடியும்—மன்னெஞ்சச்*
*சிந்துங் கொடைச்சிவந்தான் றென்கோடை யான்கழங்கும்*
*பந்துஞ்சா தித்த படி.* (174)

கண்டு பணியக் கடவேனோ காதலுடன்
றெண்டை யிதழருந்தித் தோய்வேனோ—கொண்டற்
கொடைச்சிவந்தான் கோடைக் குளிர்காவி லன்ன
நடைச்சிவந்தா ளென்செய்கே னென். (175)

(இந்தக்கவியை ஒருபுறனாய் மூவராயின் கேட்டிருந்து வரைந்துகொண்டு அவளைக் கொடுத்தான்).

உத்தரநல்லூர் நங்கை பிராமணரைப் பாடிய வசை.

சந்தன மரமும் வேம்புந் தனித்தனிக் கந்த நாறும்
அந்தணர் தீயில் வீழ்ந்தா லதுமண நாறக் காணேன்
செந்தலைப் புலைய னூர்க்குத் தீமண மதுவே நாறும்
பந்தமுந் தீயும் வேறோ பாச்சலூர்க் கிராமத் தாரே. (176)

திருவாரூர் நாகரசநம்பி செய்த்குற்றங் கிள்ளைக்குச்
சொல்லுவித்துத் தலத்தார் இராயருக்குச்
சொல்லி யறிவித்தது.

முன்னொ ளறுபத்து மூவிருந் தாரதனி
லிந்நா ளிரண்டுபே ரேகினார்—கன்னா
நருக்கின்றான் வந்துவிட்ட நாகரச நம்பி
யிருக்கின்றான் கிட்டினரா யா. (177)

புங்கனூர்க் கிழவனைக் கல்யாணத்து ஒருவன் பாடியது.

[மெய்யிற்பட்ட
வெண்ணெயும் பார்த்தன்னை கண்ணையும் பார்த்துத்தன்
புண்ணையும் பார்த்த திருநெடு மால்புங்க னூர்க்கிழவன்
பண்ணையுஞ்சேனுக ளுந்தடநீள்கயல் பாயுநெடுங்[வர்க்கே
திண்ணையுங் கெண்டை புரட்டுங்கல் யாணத்திற் சென்ற

(இது கேட்டுப் பிராணத்தியாகம்
பண்ணினான்.)

வெறும்புற்கையுமரிதாய்க்கிள்ளைசோரவென்வீடுகெட்டே
னெறும்புக்குமாற்பதமில்லைகண்டாயென்னிருங்கலியின்

குறும்பைத் துரத்துங்குடிதாங் கியைச்சென் றுகூடியபின்
தெறும்புற்கையானைகவளங்கொள்ளாமற்றெவிட்டியதே
(இது பாதிகேட்டுப் பாதி பரிசுகொடுத்தபின் பாடியது.)

கச்சிராயன் கண்டியதேவனைப்பாடிய கவி.

[குப்பாச மிட்டுக் குறுக்கே கவசமிட்டுக்
கைப்பாச மிட்டுவருங் கண்டியதே, வாவுனது
தொப்பாரத் தின்கீழ் மயிர்.] (179)

இதுகேட்டுக் கண்டியதேவன் விருதெறிந்துபோட்டுக்
கச்சிராயர்க்குச் சரக்கறை திறக்கக் கொடுப்பிக்க
வந்த நீலகங்கனைக் கண்டியதேவன் பாடியது.

அலைவளைத்த திருப்பாற் கடலிலை
யராடராவி னணையிலை பச்சையா
லிலைவளைத்த மணிமண் டபமிலை
இங்கு நீவந்த வாறே தியம்புவாய்
கொலைவளைத்த விலங்கேசன் மாமலர்க்
கொத்துமாமுடி பத்துக்கு மன்றொரு
சிலைவளைத்த கரநீல கங்கனே
திங்கள் வெண்குடைச் சிற்றம் பலவனே. (180)

(இதுகேட்டு அவன் குதிரைகொடுக்கவந்தேனென்று
குதிரை கொடுத்தான்)

விண்ணரவின் மணிகொடுத்தபோது ஒருபுலவன் பாடியது.

கூர்ந்த வறுமையிடைக் கோளரவ மீன்றமணி
சார்ந்த புலவன் றனக்களித்தான்—வார்ந்ததரு
மேலைவிண்ணின் மண்ணின் விளங்கும் புகழ்படைத்த
சாலைவண்ணா னுக்கிணையார் தாம். (181)

பிணமுடி அன்னமிட்டபோது ஒருபுலவன் பாடியது.

தன்னுடன் கூடப் பிறந்தவரி ராகிய தம்பியையு [ன்
மந்நிலை மாண்டதுந்தோன்றாமல்முடிவைத் தன்னமிட்டா
மன்னவர் போற்றிட வாழ்செங்க லங்கை வடுகனுக்குக்
கன்னனுஞ் சோமனு மோங்கி ராயினிக் காண்பதுவே.

கச்சியப்பனை உதைத்த புலவன் பாடியது.

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வெப்போதுங் கற்றவர்க்குப்—பண்புடனே
மெச்சியப்பா லுங்கொடுக்கும் வீறுவல்லைக் காளத்திக்
கச்சியப்ப னையுதைத்த கால். (183)

வண்டியூர்க்கெழுந்தருளப் பண்ணுகிற மண்டபத்திற்
சொல்லியவை ; இதுகேட்டு வேம்பதூர்ப் பிராமணப்
பிள்ளையன் பாடியது.

அடும்போதுஞ் சொல்லில்லை யென்று மடுஞ்சோ
றிடும்போதுஞ் சொல்லில்லை யென்றுங்—குடும்பமெனும்
பேய்க்கொளித்துப் போகின்றேன் பேரையூ ராதிபனே
தாய்க்கொளித்த சூலுண்டோ தான். (184)

ஒன்று மறியோராம் மும்மாணை யப்பரே
சென்று தொழில்புரியுஞ் சீர்பதியார்—கன்றக்
கயிற்றினாற் கட்டிக் கதவுவடத் தேற்றி
யியற்றினா லென்செய்வோம் யாம். (185)

[காளமேகப்புலவர்]

பிராமணர், அம்மைச்சிவீட்டைப் பிடுங்கியபோது பாடியது.

பெருமா டிருநாளைப் பேயாக்க வென்றே
வருமாண்டு தோறுமிந்த மாண்பா—வொருநாளு
மாக்குதிரை யேறறியார் மாசனங்கா ளாமணக்குஞ்
சாய்க்குதிரை யேறினார் தாம். (186)

பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர்
தேப்பெருமா ளேகச்சிச் செல்வரே—கோப்பமைந்த
கொம்மைச்சிங் காரலங்கைக் கோட்டையென்று கொண்
அம்மைச்சி வாழ்வா ளகம். [டரோ

சீரங்கத்திற் பிள்ளையார் வருவாரென்றதற்குப் பாடிய
வெண்பா.

தந்தை பிறந்திறவாத் தன்மையாற் றன்மாமன்
அங்கம் பிறந்திறக்கு மாதலான்—முந்துமனி
நாணிக்கு வில்வேளு மேகலால் நன்மாமன்
காணிக்கு வந்திருந்தான் காண். (188)

பாகவதரிட்ட சமுத்திக்குப் பாடியது.

தடக்கட லிற்பள்ளி கொள்ளுவம் யாமதைச் சங்கரனு
ரடற்புலிக் குட்டிக் களித்தன ராலது கேட்டுநெஞ்சம்
நடுக்கமு துற்றது கைகா லெழுாநளி னத்தியென்னை
யிடுக்கடி பாயைச் சுருட்டடி யேறடி யம்பலத்தே. (189)

சைவர்கட்குந் தாதர்கட்குஞ் சண்டையானபோது பாடியது.

சீரங்கத் தார்க்குந் திருவானைக் காவார்க்கும்
போரங்க மாகப் பொருவதே—னோரங்கள்
வேண்டா மிதெல்லாம் விகற்பந் தெரியாதோ
வாண்டாருந் தாதருமா னால். (190)

ஞானவரோதயர் மதுரைக்குப் போனபோது எழுதி
யனுப்பின கவிதை.

முதிரத் தமிழ்தெரி நின்பாட றன்னை முறையறிந்தே
யெதிரொக்கக் கோப்பதற் கேழெழு பேரில்லை யின்றமிழி
பதரைத் தெரிதரக் கோவில்லை யேறப் பலகையில்லை[ன்
மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞான வரோதயனே.

திருமலைராசன் சபையிற் கங்கைகுடத்திலடங்கச்
சொன்னபோது பாடியது.

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமன்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கையடங் கும். (192)

இந்திரன் கலையா யென்மருங் கிருந்தா னக்கினி யுத ரம்விட் டகலான் - எமனெனைக் கருதா னரனெனக் கருதி நிருதிவந் தென்னையென் செய்வான், அந்தமாம் வருண னிருகண் விட்டகலா னகத்துறு மக்களும் யானு மநிலமதாகு மமுதினைக் கொள்வோ மாரெனை யுலகினி லொப்பார், சந்த தமிந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர ராசனை வணங்கித் - தலைசெயு மென்னை நிலைசெய்கல் யாணிச் சாளுவத் திருமலைராயன், மந்தர புயனுங் கோப்பய னுதவு மகிபதி விதரண ராமன்-வர்க்கிறைக் குபேர னுக்கிறை னிவனே மாசிலா வீசனு வானே. (193)

அதிமதுரக்கவிராசன் பின்னே காணவரப் பாடியது.

கோக்குதிரை நின்குதிரை கோவல்மது ராவொன்றூர்
மாக்குதி ரையெல்லா மண்குதிரை—[தூங்கக்
கரைக்குதிரை சேரக்கனைகுதிரை
துரங்கக் குதிரைகளேயாம்.] (194)

ஆரூரில் அதிமதுரக்கவிராசனுடன் வந்து கோவிலிலே ஒரு கவிபாடுகேனக் காளமேகம் பாடியது.

சேலை யுடையழகா தேவரகண் டாகழுநீர்
மாலை யழகா மணிமார்பா—வேலை
யடங்கார் புரமெரித்த வாரூரா வீதி
விடங்கா பிரியா விடை. (195)

அதிமதுரக்கவிராசன் பாடியது.

*நாணென்று னஞ்சிருக்கு நற்சாபங் கற்சாபம்*
*பாணந்தான் மண்டின்ற பாணமே—தாணுவே*
*சீரார் வாரூருஞ் சிவனேய தெப்படிநீர்*
*நேராரூர் செற்ற நினைவு.* (196)

(இதில் இரண்டாமடி காளமேகம்)

மாவலிவாணனைப் பாடிய வசை.

*சொக்கன் மதுரையினிற் றெண்டற்கு முன்விழ்த்த*
*பொய்க்குதிரை சந்தைக்குப் போகுமதோ—மிக்க*
*கரசரணு வந்தக் கரும்புரத்தார்க் கெல்லா*
*மரசரணு மாவலிவா ணு.* (197)

தெண்டிக்கு வரதன் விடுத்த சீட்டுக்கவி.

*நள்ளாற்றுத் தெண்டிக்கு நல்வரதன் றீட்டுமயல்*
*விள்ளாம லெத்தனைநாள் வெம்புவேன்—கள்ள*
*மதனப் பயலொருவன் வந்துபொருஞ் சண்டைக்*
*குதவக் கடுகவர வும்.* (198)

தெண்டி நள்ளாற்றினின்று திருக்குடந்தை வந்தபோது பாடியது.

*தேற லமிர்தந் தெவிட்டிடி னுங்கனிவா*
*யூற லமிர்த முவட்டாதே—வீறுமதன்*
*றன்னனை நள்ளாரூர் தம்மானை யும்மானை*
*யென்னனை தெண்டியா ரே.* (199)

வேளாளன் வீட்டிலிருந்ததில்லை என்று சொன்னபோது பாடியது.

*பாலல்கை யன்று பரிந்தளித்த கோத்திரத்துக்*
*காலமென வந்த வடைக்கலவன்—சூலந்*
*திருக்கையிலே யேந்துஞ் சிவனிருக்க வேளா*
*ணிருக்கையிலே சாகலா னன்.* (200)

நாகபட்டணத்துச் செட்டி (கடை) யடைப்பித்துப் பாடச் சொன்னபோது பாடினதில் ஒருபாட்டு.

*முற்றாத காஞ்சியினு முல்லையினும் பாலையினுங்*
*கற்றான்பின் சென்ற கருணைமால்—பெற்றான்சே*
*ராலைப் பதித்தா ரளகத்தி யார்க்கயனார்*
*வேலைப் பதித்தார் விழி.* (201)

சவையப்ப நாயனைப் பாடியகவி.

*சொருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப்*
*பொருக்கெழுந்த வாயா புலையா—திருக்குடந்தை*
*நாயா நரியாவுன் னயகமுஞ் செய்வடிவுந்*
*தாயார்தான் கண்டிலரோ தான்.* (202)

*தருக்குலவு கண்ணமங்கைத் தானத்தா ரெல்லாந்*
*திருக்குளத்து மீனொழியத் தின்றார்—குருக்கொடுக்கு*
*நம்பிமா ரென்றிருந்தோ நாட்டி லழிகூத்தி*
*தம்பிமா ராயிருந்தார் தாம்.* (203)

கண்ணபுரந் தீத்தானைப் பாடிய வசைகவி.

*கந்த மலரயன்றான் கண்ணபுர மின்னாருக்*
*கந்தவிள நீரைமுலை யாக்கினான்—சந்ததமுந்*
*தோற்றமுள தீத்தாட்குத் தோற்பைமுலை யாக்கினா*
*னேற்றமெவர்க் காமோ வினி.* (204)

குடவாசல் விண்ணாள் வசைதானேபாடச்சொல்லப்பாடிய கவி.

*செக்கோ மருங்குல் சிறுபய றோதனஞ் சிக்களகம் [றாங்*
*வைக்கோல் களின்கற்றை யோகுழி யோவிழி வாவிதொ*
*கொக்கேறி மேய்குட வாசல்விண் ணாள்வரைக் கோம்பி*
*ரெக்கோ படைத்தது நீரே நெருப்பி லெரிந்தவரே [யணி*

புலிக்குட்டி சிங்கனைப் பாடிய வசை.

போனபோன விடந்தொறுந்தலை பொட்டெழப்பிறர் குட்டவே - புண்படைத்த மனத்தனாகிய பொட்டிபுத்திர னத்திரன், மானவீன னிலச்சைகேட னொழுக்கமற்ற புழுக்கையன் - மாசனும்புலிக் குட்டிசிங்கன் வரைக்குளேறி யி[illegible]விர், பேனுமீரு மெடுக்கவோசடை பின்னிவேப்ப நெய் வார்க்கவோ - பீவிழிக்கரி யெழுதவோ வொருபீறு துண்டமுடுத்தவோ, கானகந்தனில் வைக்கவோவிரு கால்விலங்கிடுவிக்கவோ - காதகங்கொடு சாடவேரவொரு காரியந்தனை யேவுமே. (206)

முச்சங்கந் திருவிளையாட்டு மதுரைச்சொக்க ரெல்லாமடங்கப் பாடிய கவி.

நாலார்நா லாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான்
பாலார்நா னூற்றுநாற் பத்தொன்பான் —மேலாநாற்
பத்தொன்பான் சங்கமறு பத்தினா லாடலுக்குங்
கத்தன் மதுரையிற்சொக் கன். (207)

தூதைந்து நாழிகையி லாறுநா ழிகையினிற்
 பலசந்த மாலை சொலவுஞ்
சூழ்லா வந்தாதி யேழுநா ழிகையினிற்
 றொகைபெற வகுத்தோதவும்
பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழிகையினிற்
 பரணியொரு நாண்முழுதுமீள்
பாரகா வியமுழுது மீரிரு தினத்திற்
 பகரக் கொடிக்கட்டினேன்
சீதஞ் செயுந்தொங்கல் மார்பினா னியலிசை
 தெரிந்த திருமலை ராயன்முன்

சீறியே வாதுகவி பர்டுதற் கெதிர்வரு
திருட்டுக் கவிப்புலவரைக்
காதும் பிடித்துக் கவிழ்த்துக் கதுப்பிற்
கரத்திட்டடித்து முதுகிற்
கல்லைவைத் தேழுகக் கடிவாள மிட்டேறு
கவிகாளமேக நானே. (208)

அதிமதுரக் கவிராசன் பாடிய கையறம்.

வாசவயல் நந்தி வரதா திசையனைத்தும்
வீசு கவிகாள மேகமே—பூசுரனே
விண்டின்ற வெவ்வழலில் வேவதே பாவியேன்
மண்டின்ற பாணமென்ற வாய். (209)

[குமாரசரசுவதி]

குமாரசரசுவதி ஒட்டியனை (கிருஷ்ணராயர்) செயித்த போது பாடியது.

கலிங்க மிழுந்து நுதிக் கைச்சங்கந் தோற்று
மெலிந்துகட கந்நழுவ விட்டாள்—மலிந்தமலர்ப்
பொன்னிட்ட மானகிருட்ண பூபாலா வுன்றனுக்குப்
பின்னிட்ட வொட்டியன்பொற் பெண். (210)

அபிராமன், நாலுபாஷையிலும் பாடுகிறவரோ என்றபோது பாடியது.

கூத்தாடி லஞ்சக் கொடுக்கா வொரேபொட்டி
சோத்தெட்டா வைவேசித் தொண்டனே—ஆத்தான
அந்த விழுப்புர மம்பிநக ருங்கெடுக்க
வந்தகுலா மாரவபிரா மா. (211)

[தத்துவப் பிரகாசர்]

திருவாரூர்க் கோடியிறக்காமற் றகைந்தது.

மருவுபுகழ்க் கிர்ஷ்ண மகராச ராணை
அரிய வடமலையா ராணை—திருவாரூர்ப்

பாகற் கொடியறுப்பார் பாதத் திருவாணை
த்யாகக் கொடியிறக்கா தே. (212).

ஊழித் துலுக்கல்ல வொட்டியான் றுமல்ல
வீழித் துலுக்குவந்து மேலிட்டே—யாழி
சிறந்ததே ராரூர்த் தியாகருடைப் பூசை
யிறந்ததே கிட்டிணரா யா. (213)

இதுகேட்டு ராயர் சிலபட்டரை மாற்றியபோது
தத்துவப் பிரகாசர் பாடியது.

உண்ட வயிற்றி லுமிக்சாந்த விட்டதே
தொண்டரே வீழித் துலுக்கரே—பண்டெல்லாம்
அப்ப மவலென் றதிரசமுந் தோசைகளுங்
கப்புவது போச்சே கவிழ்ந்து. (214)

சாளுவநாயக்கர் படுத்துக்கொள்ளச் சொன்னபோது
பாடிய கவி.

மூட்டை கலம்புழுதி முக்காலுஞ் சுத்தப்பாழ்
வீட்டை விடுதியாய் விட்டாயே—போட்ட
தடுக்கெல்லாம் பீறல் தலையணையோ வைக்கோல்
படுக்கலா மோசொல்லப் பா. (215)

தத்துவப்பிரகாசர் பாட்டு.

ஆயிரவர் புலவோரி லொருவன் ப்ரபந்தகவி
யவனு யிரர்க்கு ளொருவ
னந்தாதி தூதுலா பரணிகோர் வைக்கமக னவனு
யிரர்க்கு ளொருவன்
போயிடம் பொருளுடை கப்புரா ணிகனவன்
போலா யிரர்க்கு ளொருவன்
பொருட்பெருங் காப்பியம் புலவர்க்கு மற்றவன்
போலா யிரர்க்கு ளொருவன்

பாயிரந் தருபஞ்ச லட்சணவி தரணனிப்
படியா யிரர்க்கு ளொருவன்
பாசமை வதற்குநற் பகர்வாதி மற்றுமப்
படியா யிரர்க்கு ளொருவன்
தேயமெண் டிசைபரவு தேசிகோத்தமன் தவஞ்
சேரா யிரர்க்கு ளொருவன்
சிவனைத் துதித்துண் டுடுத்துக் கொடுத்திடுந்
தெய்வச் சிவஞ்ஞானியே. (216)

இதுகேட்டுத் திருத்தோணியப்பர் பாடியது.

குட்டுதற்குப் பிள்ளைப்பாண் டியனு மில்லை
குறும்பியளா வாக்காதைக் குறித்துத் தோண்டி
யெட்டிநா வறுப்பதற்கு வில்லி யில்லை
யிரண்டொன்றாய் மயிரைமுடிந் திறங்கப்போட்டு
வெட்டுதற்குக் கவியொட்டக் கூத்த னில்லை
விளையாட்டுக் கவிப்பாட்டு விரைந்து பாடித்
தெட்டுதற்குத் தமிழறியாத் துறைகளுண்டு
தெல்லடித்துப் புலவரெனத் திரியலாமே. (217)

நினைவுகவி சொல்வோ மெனச்சொலிப் பலகவிதை
நினைவினை திருடி வையோம்
நீடுலகின் மனிதரை பாடிலோம் நாமென்று
நீள்வசைகள் பாட வறியோம்
பினையிளைய நாவலருடன்பங்கு பேசிப்
ப்ரபந்தங்கள் பாடிக் கொடோம்
பேசுவது தேவார மேயலால் வாய்க்கெளிய
பேய்க்கிரந் தங்கள் பேசோம்
யினிமைதரு குலத்துக் குருக்களை மறந்தெட்
டிடத்தினிற் றீட்சை போகோம்

இட்டசிறு பேர்மாற்றி மாதமொரு பேரிட்
டழைக்கநா மிறுமாந் திரோம்
தனியிருந் தெம்மைப் புறங்கூறு வார்பாடு
தயனியக் கவிபாடுவோம்
சமநூல் களைப்பொரு ளெனக்கொளோந் திருஞான
சம்பந்த ரடியர் நாமே. (218)

கூத்தனூரப்பன் வாலகோகிலங் கவிக ளெப்படி என்று கேட்கச் சொல்லியது.

மன்கவி தாவும்பொழிற்கூத்தனூரப்பன்வாழ்தலைவன்
றன்கவி தெள்ளிய பால்வால கோகிலந் தானுரைத்த
நன்கவி பாலுக் கிடுசர்க் கரைக்கவி நாங்கள் சொல்லும்
புன்கவி யுப்பொடுகாயமென்றேசொல்லிப் போற்றுவரே

ஒட்டக் கூத்தன் என்றொரு புலவன் வரச் சொல்லியது.

பறியாரோ நின்வாயிற் பல்லதனைப் பாவோர்
முறியாரோ நின்முதுகின் முள்ளைச்—சிறுகவொரு
மட்டப்பேர் போதாதோ வாக்கிதுவே யானக்கால்
ஒட்டகூத் தன்றா னுனக்கு. (220)

ஒருவன் புடவைதரப் பார்த்துச் சொல்லியது.

வெற்றிப்பாடுங் குணப்பாடும் வீரப்பாடு மொருகவியிற்
தெறிப்பாடு வதுகேட்டுச் சீநக்கரசர் துகிலீந்தார் [தார்
பற்றிப்பார்க்க வதனுள்ளே பலதேவிசர் வீற்றிருந் [மே
சுற்றிப்பார்க்கப்பயப்பட்டுத்தூரவைத்துத் தொழுதோ

உலோபரைப் பாடியது.

குரங்குமாய் நண்டுகெட்டித் தேளுங் கொட்டிக்
குடியாத மதுக்குடித்துப் பேயு மேறி
யிரங்கவருங் காஞ்சொரியின் பொடியுந் தூவி
யிஞ்சிதின் று கொள்ளிபிடித் தெழுந்தாற் போலத்

தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்விற்
றண்டிகையி லேயேறிச் சம்பத் தேறிக்
கருங்கைமதக் களிறேறிக் கழுவிலேறிக்
காடேறி நாடேறித் திரிவார் கண்டீர். (222)

பாம்புகடித் தாலதுவு மீட்க வல்லோம்
பசாசறைந்தா னீறிட்டுப் பார்க்க வல்லோம்
வேம்புகசப் பறக்கறியு மாக்க வல்லோம்
விறல்வேழத் ததிகமதந் தணிக்க வல்லோம்
சாம்பொழுது திடமாகப் பேச வல்லோம்
தரணியின்மேற் கல்லாத தொன்று மில்லை
தீம்பரைநல் லவராக்கிக் குணமுண் டாக்குந்
திறமறியா தேநின்று திகைக்கின் றோமே. (223)

தத்துவப்பிரகாச பண்டாரத்துக்கு இலக்கணம் வருமோ
என்றபோது பாடியது.

கவடிகளா கத்திரியுங் கள்ளர்கா ணன்னூற்
சுவடியிருந் தாவதென்ன சொல்வீர்—குவலயத்துக்
காட்டுக் கெறித்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான்
வீட்டுக் கெறித்த விளக்கு. (224)

[ஆசுகவிராச சிங்கம்]

ஆசுகவிராசசிங்கம் கடிகையாரைப் பாடியது.

செந்தமிழோர் தங்கள் சீர்பாத தூளிபொர
வந்த புலவோர்க மார்பாணி—கந்த
னடிகையா ரப்பர்வு மாசுகவி ராசன்
கடிகையார் கோலா கலன். (225)

பாண்டியராசா ஆரென்றுகேட்டபோது பாடியது.

தென்பா ராளு மறிவிற் குறுமுனி
தெக்கிண கயிலையில்வாழ்

செங்குந்தக்குல வேங்கட ராயன்
திருவா சற்புலவ,
னென்பேர் வண்ணக் கட்சிய தன்றி
யெதிர்த்தவர் மார்பாணி
யிந்தத் தேசப் புலவர் மனத்துக்
கிடியென வந்தேன்கா
ணுன்பால் யான்வர வாசற் காரர்க்
குத்தாரம்பண்ணி
யுள்ளுக் கென்னை யழைப்பித் தாசி
லுரைக்குங் கவிதைகள் கேட்
டென்பால் வரிசைகள் பரிசில்கள் ணல்கி
யிரட்சித் திடவேணு
மிராமா சீவிலி மாறு பாண்டிய
ராச வரோதயனே. (226)

திருவண்ணுமலையின் பரமேசுரப்புலவன்
பாடியது.

கண்ணுய் மதிக்குங் கவிராச சிங்கங் கடந்துதிரு [கொண்
வண்ணு மலையப்பர் மேல்வண்ணம் பாடிமுத் தால்த்தி
டெண்ணு யிரமட வார்சூழப் பல்லக்கி லேறிவந்தா
னுண்ணு முலையெல்லன் மூலைகடோறு மொதுங்கினனே.

முல்லையெல்லப்பநயினுர் பாடியது.

பாழ்ப்பா மடத்துப் பரமாவுன் பாழ்ங்கவிதை
கேட்பாரெல் லாம்புத்தி கெட்டபேர்—தோட்பாவு
மோணுன் விழுந்தானு முண்டுபெரி காரமிது
வாணு ளளவே வரும். (228)

## [கவி வீரராகவ முதலியார்]

கவிவீரராகவன் காஞ்சிபுரத்திலே படித்தபோது கந்தப் புராணம் கச்சியப்பர் பாடியது.

*பொங்குதமி ழயோத்தியில்வாழ் தசரதனென்*
*பானிடத்தும் பூதூர் வேந்தன்*
*துங்கவடு கன்னிடத்தும் வீரரா*
*கவரிருவர் தோன்றி னூரால்*
*அங்கொருவ னொருகலைமா னெய்திடப்போய்*
*வசைபெற்றா னவனி யின்பா*
*லிங்கொருவன் பலகலைமா னெய்திடப்போய்க்*
*கல்வியினா லிசைபெற் றானே.* (229)

பரராசசிங்கம் பொற்பந்தங் கொடுத்தபோது பாடியது.

*பொங்குமிடி யன்பந்தம் போயதே யென்கவிதை*
*யெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்*
*வெற்பந்த மானபுயன் வீரபர ராசசிங்கம்*
*பொற்பந்த மின்றளித்த போது.* (230)

இராமாயணம் அவதானித்துச் சொன்னபோது ராசா பாடியது.

*இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்*
*பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணிய*
*மன்னன் சயந்தன் கவிவீர ராகவன் கச்சியிலே [மோ*
*தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே.*

வண்ணம் பாடியபோது ராசா பாடியது.

*விரகன்முத் தமிழ்க்கவி வீர ராகவன்*
*வரகவி மாலையை மதிக்கும் போதெலா*
*முரகனும் வாணனு மொப்பத் தோன்றினாற்*
*சிரகர கம்பிதஞ் செய்ய லாகுமே.* (232)

சீவில்லிபுத்தூரிற் பாடியகவி.

வேசையரே மல்குவிழா வீதியிலார் வந்தாலும்
பேசிவலை வீசிப் பிடிக்குமூர்—ஆசைமயல்
பூட்டுமூர் கையிற் பொருள்பறித்தே யோடுகொடுத்
தோட்டுமூர் சீவிலிபுத் தூர். (233)

அரியலூர் மழவராயன் படிகோடுத்ததுக்குப் பாடியகவி.

சேயசெங் குன்றை வருமொப்பி லாதிக்குச் செங்கமலத்
தூயசெங் கண்ண னிணையொப்ப ளேதண் டுழாயணிந்த
மாய னளக்கும் படிமூன் று கிர்ஷ்ணை யமர்மழவ
ராய னளக்கும் படியோத நாளைக் கிலக்கமுண்டே. (234)

குமார - ஒப்பிலாதான் சங்கீதத்தைக் கேட்டுப் பாடியது.

வாழொப் பிலாதவன் சேயோப் பிலாத மழவதிசை
யாழிக் கடல்விட்டு நீபாடுங் காலத் தரிசெலுங்கால்
நீழற் கவுத்துவ நீத்துச்செல் வானந்த நீண்மணிதான் [றே
காழொப் பினுநின் னிசைகேட்குங் காற்கரைந் தேகுமென்

தீத்தான் சங்கீதத்தைக் கேட்டுப் பாடியது.

வாவிய பொற்பரி யாவூரில் வீரையன் மைந்தபஞ்ச
காவியந் தேர்கின்ற தீத்தான்சங் கீதத்திற்காவலர்தழ்றின்
மோவிய சாலையெல்லாங் [கொல்லியாமுள்ளுருகுமொற்
மேவிய கூடமெல்லாந் திரிகூடத்தின் மேற்படுமே. (236)

செழியதரையன் பரிசில் சோடுத்தனுப்பியபோது சில
போருள்வேண்டிப் பாடியது.

சாலப் பழுத்த மரம்பார்த் தெறிவர்தண் ணீர்சுரக்கும்
ஞாலத் தகழ்வர் கறக்கின்ற வாவைகற் கா றளைவர்
நீலக் கடல்விட்டுப் பாலாழி மத்திட்டு நிற்பரெண்ணீர்
சேலத்து வேந்த னகத்தாகத்தீர்த்த செழியனுக்கே. (237)

ஏடா யிரங்கோடி யெழுதுவன் றன்மனத் தெழுதித் தரித்த விரகன் - எதுசொலினி மதுவே யெனச்சொலுங் கவிவீர ராகவன் விடுக்கு மோலை, சேடா திபன்சிர மசைக்குங் கலாஞான த்ரிபதகை குலசேகரன் - றென் பாலை சேலஞ் செனித்ததா கந்தீர்த்த செழியனெதிர் கொண்டு காண்க, பாடாத கந்திருவ மெறியாத கந்து கம் பத்திகோ ணுதகோணம் - பறவாத கொக்கனற் பண் ணுத கோடைவெம் படையாய்த் தொடாத குந்தஞ், சூடாத பாடலம் பூவாத மாவொடு தொடுத்துமுடி யாத சடிலஞ் - சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன் றெங் குந் துதிக்கவர விடவேணுமே. (238)

சந்திரவாணன் கோவைபாடியபோது பாடியது.

மின்னுமாளிகை யணைத்தை யாதிபதி சந்த்ரவாண மகி பாலன்முன் - வீரராகவன் விடுக்குமோலைதன் விருப் பினல்வலிய வேயழைத், துன்னுகாவிய மதிற்பெருந் தசொரு கோவையோதுகென வோதின - ஞேதிமாத மொரு மூன்றுபோகியொரு நாலுமாதமள வாகவு, மின்ன முந்தனது செவியிலே றவிலை யென்ன விந்தவுல கெண் ணுமோ - விராசராசர்திறை கொள்ளுமென் கவிதை யிங்கு வந்துகுறை வாகுமோ, தன்னையென்சொலுவ ரென்னை யென்சொலுவர் தான்றமிழ்க்கு மணமல்லவோ - தன் புகழ்க்குமிது நீதியோகடிது தானிநேரம்வர வேணுமே.

எருமைவரவிடப் பாடியது.

இனிதினி தெனச்சேர சோழபாண் டியர்மெச்சு மிச்சித்த மதுரவாக்கி - யீழமண் டலமளவு திறைகொ ண்ட கவிவீர ராகவன் விடுக்கு மோலை, வனிதையர் விகாரமன் மதராச ரூபனம் மயிலையாதிபதிசக்ர - வாளத்

தியாகிநங் காளத்தி க்ருஷ்ணப்ப வாணனெதிர்கொண்டு காண்க, கனமுற்ற முத்தமிழ்த் துறையறி மரக்கலங் கன்னிகா மாடநன் னூற்-கட்டுபொற் கொட்டாரம் வாணி சிங்காதனங் கவிநா டகஞ்செய் சாலை, வினவுசிவ காதை யின் சரக்கறையெனத் தக்கவிஞனையே னுடம்பு நோயான்-மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்ததொரு மேதி வரவிடவேணுமே. (240)

திருக்கழுக்குன்றப் புராணம் பாடியபோது பாடியது.

இந்நா ளிருந்தபேர் புதியபா கம்பண் டிருந்தபேர் பழையபாக - மிருபாகமும்வல்ல லக்கணக் கவிவீர ராகவன் விடுக்குமோலை, அன்னதி தானப்ரவாகன் ப்ரசங்கத் தனந்தசே டாவதாரன் - அகிலப்ரகாசன் திம் மையவப் பைய னகமிக மகிழ்ந்துகாண்க, தன்னுரு மோலையும் வரக்கண்டு நாம்வேத சயிலப் புராணத்தையித் - தனைநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது தான்வந் தலாம லில்லை, நன்னுவ லோருடனிதைக்கேட் டெனச்சோழ நாட்டுக் கனுப்ப வேணும் - நவிலோலை தள்ளாமலேசுக்ர வாரத்து நாளிங்கு வரவேணுமே. (241)

(இப்படியெழுதின தீட்டுக்கவி அநேகமுண்டு)

தீட்டுக்கவிக்கு நிரஞ்சனநாதர் பாடியது.

தீட்டுக் கவியென்று சொல்வர் சிலரந்தத் தீட்டுக்கவி
காட்டுக் கெறிந்த தில்லாகிப் போஞ்செங் கனகரத்னச்
சூட்டுக் கிரீட முடிவேந்த ரேற்பத்தி சூறைகொள்ளும்
நாட்டுக் கிலக்கியங் கவிவீர ராகவ னற்கவியே. (242)

ஆருருலாக் கேட்டுப் பரராசசேகரன் பாடியது.

புவியோர் பெறுந்திரு வாரூ ருலாவைப் புலவர்க்கெலாஞ்
செவியோர் சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானவனு

பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத பேர்கவி கற்கவியே. (243)

கயத்தாற்றுராசா உலாப்பாடியபோது பாடியகவி.

ஓட்டக்கூத் தன்கவியு மோங்கியகம் பன்கவியும்
பட்டப் பகல்விளக்காய்ப் பட்டவே—யட்டதிக்கும்
வீசுங் கவிவீர ராகவனும் வேளாளன்
பேசுங் கவிகேட்ட பின். (244)

விசயராசன் பல்லக்கின்பின் வந்தபோது பாடியகவி.

திருமாலு மீசனும் பின்போயுந் தூது செலத்துணிந்து
மருமா துரியத் தமிழ்வளர்த் தாரவ ரோடுபங்காய்
வருமா மறையவன் பேர்சாதித் தேமிக வண்டமிழ்க்குப்
பெருமான்சிவிகைப்பின்சென்றான்விசயப் பிரமனுமே.

இடும்பாவனத்திற் பாடியகவி.

பசிமுடுக லோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்த்த
கொசுகுகடி யாலுங் குலைந்தோ—மிசையில்
நெடும்பாவம் யான்செய்தா னீரென்ன செய்வீ
ரிடும்பா வனநாத ரே. (246)

நாகதேவனைப் பாடியது.

வாயிலொன்று கல்லுமொன்று நெல்லதான வண்ணமும்
வாடலாக வாறுமாதம் வைத்திருந்த கத்தரிக்
காயிலுப்பி லாதகஞ்சி யைக்கலந்த வண்ணமும் [மும்
காம்பொடிந்த தோரகப்பை கைப்பிடித்த வண்ண
[மீன்கள்வந்து மோலுமோ யென்றசட்டியும் மோரு
தாக விடக்கொணர்ந்தநெழுவனிட்டாலுனைநா மறப்ப
தில்லை...............] (347)

தினகரனைப் பாடிய வசை.

சிறையன் றினகரனைச் செந்தமிழ்க்கு நல்ல
துறையென் றுநாங்கவிதைசொன்னேஞ்—சுரையுண்ணும்
வண்ணமே செய்தான் வரகவிக்கு வண்மையெனு
மெண்ணமே செய்தா னிலே. (248)

நந்திய மாணிக்கத்தைப் பாடியது.

[மாதாவைப் போற்பிறக்கத் தந்தையைப்போற்
செனிக்கவிந்த வையந்தன்னி - லேதேனு மொன்றல்லா
நந்தியமாணிக்கமிவ ளேற்றம் பாரீர் - பாதாதி கேசமெல்
லாந் தன்றுயைப்போற்பிறந்தபதுமை தானே.] (249)

கயத்தாற்றுராசா பாடிய கையறம்.

இன்னமுதப் பாமாரி யிவ்வுலகத் திற்பொழிந்து
பொன்னுல கிற்போய்ப் புகுந்ததால்—மன்னும்
புவிவீர ராகமன்னர் பொன்முடிமேற் சூட்டுங்
கவிவீர ராகவமே கம். (250)

தோற்று தொழிந்திருந்த தூலக் கவிகளெல்லா
மேற்று ரகையின் விளங்கியவே—யேற்றுலுங்
கன்னுவ தாரன் கவிவீர ராகவனும்
பொன்னுருஞ் செங்கதிரோன் போயபின். (251)

சடையாண்டியைப பாடிய விசை.

கொடையாண்டமன்னரிற்கச்சிநல்லானைக்குறுகியன்றேன்
றொடையாண்டமுல்லைபுயவரைச்சாயலிற்றுன்னிமுப்பா
னுடையாண் டிருந்து கவிமத மாக்க ளுடன் பொருத்
சடையாண்டி கையிற்குசங்காண வாமுத்தமிழ்ச் சிங்கமே

[கள்ளாதிச்சூட்டு மூளையா மாடத்திலிட்டவூண்
மறக்கச் சடையபெரியதேவனுக்கு விண்ணப்பத் .தீட்
டெழுதவைத்த தெய்வமே] (253)

தென்குடந்தைப் பயணந்தரத் தெருவில் தாதி
நிமித்தமாயிருந்தபோது பாடியது.

மணந்தான் றளந்தார்க்கு வாயுண்டோ கச்சி
யணந்தா புதனுன் கலவோ—சினந்து
வடித்தெடுத்த வேற்கண் மணியிரண்டு கொண்ட
கொடித்தடுத்தா லாரே குவார். (254)

(ஆகப்பாடல்—261).

தமிழ் நாவலர் சரிதை முற்றும்.



# அநுபந்தம்.*

ஔவையார் அங்கவை சங்கவையைத் தெய்வீகனுக்குக் கல்யாணம் பண்ணுவிக்கிறபோது ஓலையெழுத விநாயகனை அழைத்த வெண்பா.

ஒருகை யிருமருப்பு மும்மதத்து நால்வாய்க்
கரியுருவக் கங்காளன் செம்மல்—கரிமுகவன்
கண்ணால வோலை கடிதெழுத வாரானேற்
றன்னுண்மை தீர்ப்பன் சபித்து. (1)

சேர சோழ பாண்டியர்க்கு விநாயகனெழுதப் பாடிய வெண்பாக்கள்.

சேரலர்கோன் சேரல் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக உட்காதே—பாரிமகள்
அங்கவையைக் கொள்ள வரசன் மணமியைந்தான்
சங்கியா தேவருக தான். (2)

புகார்மன்னன் பொன்னித் திருநாடன் சோழன்
தகாதென்று தானங் கிருந்து—நகாதே
கடுக வருக கடிக்கோவ லூர்க்கு
விடியல் பதினெட்டா நாள். (3)

வையைத் துறைவன் மதுராபுரித்தென்னன்
செய்யத் தகாதென்று தேம்பாதே—தையற்கு
வேண்டுவன கொண்டு விடியல் பதினெட்டாநாள்
ஈண்டு வருக விரைந்து. (4)

* இது முதல் வரும் ஏழுபாடல்களும், 42-வது 'பாரி பறித்த பறியும்' என்ற வெண்பாவுக்கு முன் வரவேண்டியவை; தவறி விட்டமையால் அவ்விடத்திற் சேர்த்துப் படித்துக்கொள்க.

மூவரும் வந்தபோது பனந்துண்டத்தைப் பாடியது.

திங்கட் குடையுடைச் சேரனுஞ் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்துநின் றூர்மணப் பந்தரிலே
சங்கொக்க வெண்குருத் தீன்றுபச் சோலை சலசலத்துக்
கொங்கிற் குறத்தி குவிமுலை போலக் குரும்பைவிட்டு
நுங்குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே. (5)

அந்தக் கலியாணத்தில், பெண்ணையாற்றைப் பாடியது.

முத்தெறியும் பெண்ணை முதுநீ ரதுதவிர்ந்து
தத்திவரு நெய்யா றலைப்பெய்து—குத்திச்
செருமலைதெய் விகன் திருக்கோவ லூர்க்கு
வருமளவிற் கொண்டாடி வா. (6)

அப்போது வருணனைப் பாடியது.

கருணையா லிந்தக் கடலுலகங் காக்கும்
வருணனே மாமலையன் கோவற்—பெருமணத்து
நன்மாரி தாழ்க்கொண்ட நன்னீ ரதுதவிர்த்துப்
பொன்மாரி யாகப் பொழி.



# விசேடக் குறிப்புக்கள்.

1. சிந்தாசமுத்தி என்பது, கொடுப்பவன் கருத்து வெளிப்படப் பாடுவதுபோலும். பாண்டியன் கருத்தை இறையனார் இப்பாடலால் விளக்கித் தருமி என்னும் ஆதிசைவப் பிரமசாரிக்குப் பொற்கிழியளிப்பித்த சரிதம், திருவிளையாடலால் அறிக. "பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக் - கொங்குதேர் வாழ்க்கைச் செந் தமிழ் கூறிப் - பொற்குவை தருமிக் கற்புட னுதவி.. அளிக்கும்... கருணையெம்பெருமான்" என்றார் **கல்லாடத்தும்**. இப்பாடல் குறுந்தொகையுள் இரண்டாவதாகக் கோக்கப்பட்டுள்ளது.

2. இது, திருமுகப்பாசுரம் எனப் பதினோராந்திருமுறைமுதலிற் சேர்க்கப்பட்டுள்ளது. "குடக்கோச் சேரன் கிடைத்திது காணெனு-மதிமலி புரிசைத் திருமுகங் கூறி-அன்புருத் தரித்த வின்பிசைப் பாணன்-பெறநிதி கொடுக்கென வுறவிடுத் தருளிய-மாதவர் வழுத்துங் கூடற் கிறைவன்" என்றார் **கல்லாடத்தும்**. இவ்வகவலுள் 'உரிமையி னுரிமையி னுதவி' 'குருமா மதியுரை குலவிய குடைக்கீழ்' 'யாழ்வல' 'அன்பன் றன்பால்' என்பன பழைய பாடங்கள்.

3. என்றூழ்-கோடை. இவ்வெண்பாவுள் 'என்றும் புலராது' 'தேன்பிலிற்றும்' 'தெய்வத் திருமலர் போன்ம்,' என்பனபாடபேதங்கள்.

4—5. பொய்யாமொழியார், இவற்றுக்குப் பிரதியாக இறையனாரையும் முருகவேளையும் முறையே பாடிய பாடல்களை, இந்நூல் 60, 61-ஆம் பாடல்களிற் காண்க.

6. 'எள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறனே' என்றும் பாடம்.

7—8. இவ்வெண்பாக்களிரண்டும் மந்திரச்செய்யுட்குப் **பேராசிரியரால்** (தொல். பொருளதி. 491)மேற்கோள் காட்டப்பட்டிருப்

படோடு,"இவை தெற்கண் வாயில் திறவாப் பட்டிமண்டபத்தார்(வடமொழிச்சங்கத்தார்) பொருட்டு நக்கீரர் ஒருவன்வாழவும் ஒருவன் சாவவும் பாடிய அங்கதப்பாட்டாயின" என்ற குறிப்பும் எழுதப்பட்டுள்ளது. •இதனால், கொண்டான் என்னுங் குயவன் மதுரையில் வடமொழிச் சங்கமொன்றில் தலைவனாயிருந்து, தமிழை இகழ்ந்தனனென்பதும், நக்கீரர்,அவனைச் சாகவும் பின்வாழவும்பாடித் தமிழின் பெருமைபுலப்படச் செய்தார் என்பதும் விளங்கும்.(ஆனந்தம்-சாவு) 'அரணிய' 'வேட்கோக் குயக்கோடன்' என்பன பழையபாடங்கள்.

9. குறிப்பில், கபிலர்பாடிய தென்றிருத்தல் வேண்டும். (**புறநானூறு** 109) பாரியின் பறம்புமலை பாண்டிநாட்டில் இப்போது பிரான்மலை எனவழங்கும் கொடுங்குன்றமே என்பர். (**வேளிர்வரலாறு,** பாரிவரலாறு) "ஓரி - தேன் முதிர்ந்தாற் பரக்கும் நீலநிறம்; முசுக்கலை எனினும் அமையும்" என்பது பழையவுரை.

11. **புறநானூறு**-164. இப்பாடல் பிற்காலத்து மிகச் சிதைந்தும் 'ஒப்பிலாமணிப் புலவர்பாடியது'என்று மாறுபட்டும் வழங்கும். ஆம்பி-காளாம்பி. இல்லி-பால்வருதுளை. 'பெருக்கற்றருந்திடர்' 'வறுமைமாற்ற' என்பன பாட பேதங்கள்.

13. புறநானூறு—45. ஆர்—ஆத்தி.

14. "இளந்தத்தனைக் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்றுவந்தானென்று கொல்லப்புக்குழிக் கோவூர்கிழார் பாடியது" என்பது புறநானூற்றுக் குறிப்பு. புறநானூறு - 47.

16. புறம். 82.

17. இவ்வகவல், பாண்டிநாட்டில் நேர்ந்த பெரும்பஞ்சங் காரணமாகச் சங்கப்புலவரெல்லாம் சோணாடடைந்து' **ஆலஞ்சேரி மயிந்தன்** என்னும் பிரபுவால் ஆதரிக்கப்பெற்றிருந்தபோது, அன்னோர் க்ஷேமத்தை அறிந்துவருவதற்குப் பாண்டியன் தூதுவிட, அத்தூதன்மூலம் சங்கத்தார் தாங்கள் மயிந்தனால் காக்கப்பெற்றுவருதலைப்பற்றி எழுதியனுப்பியதென்பர். "பயந்தமழைநீர் பெய்யாது பன்னீராண்டு - பஞ்சமெலாம் - வியந்தசங்கத் தமிழோர்க்கு வெவ்வேறு

தவி விடிந்தவுடன் - நயந்தகலை யெனுந்தமிழை நாட்டுந்துரையா லஞ்சேரி-மயிந்தனுயர்பாண் டியன்புகழ வாழ்ந்தோன்சோழ மண்ட லமே'' என்றார் **சோழமண்டலசதக** முடையாரும். **நச்சினார்க்கினி யர்** தொல்காப்பிய அகத்திணை 30-ம் சூத்திரவுரையில் 'ஆலஞ்சேரி மயிந்தன் - ஊருண்கேணி நீரொப்போன்' எனவும் சான்றோர் செய்-யுட்செய்தார்'' என்று எழுதியது, இவ்வகவலைக் கருதிப்போலும். "குணமொருநான்கும் கொடுத்துறவாண்ட'' "இடர்கடர்ந்தனமே'' என்பன பாடபேதங்கள்.

18. 'தேவர்கள், ஊர்த்துவ நடனத்துக்குக் காரணம் யாது, எனக்கேட்டதற்கு வள்ளுவர் விடையாகப் பாடியதென்பர்' பிற் காலத்தார்.

19. வேம்பத்தூராரியற்றிய **திருவாலவாயுடையார் புராணம்**, ஞானோபதேசஞ்செய்த திருவிளையாடலில்(4)"நீதியார் மதூக நீழல் **நெட்டிலையிருப்பை** யென்றோர் - காதல்கூர் பனுவல்பாடுங் கபிலனார் பிறந்தமூதூர் - சோதிசேர் வகுளநீழற் சிலம்பொலி துலங் கக்காட்டும் - வேதநாயகனார் வாழும் வியன்திரு வாதவூரால்'' என் றுள்ள பாடலால் கபிலர் திருவாதவூரிற் பிறந்தவர் என்பது புலப் படும். 'வட்டவொண்பூ' என் றும் பாடம்.

20. புறநானூறு - 91.

21. இப்பாட்டால், அதிகமானிடம் ஔவையார் செல்வதற்கு முன், புள்வேளூர்ப்பூதனால் உபசரிக்கப்பெற்றவரென்பது விளங்கும்.

22. இப்பாட்டிலும் இதன் குறிப்பிலுங் காணப்பட்ட செய் திகளை, "சொல்லாரு மௌவை பரிவாய்த் தனக்கிட்ட சோறுலக-மெல்லாம் பெறுமென்று பாட்டோதப் பெற்றவ னின்னருளாற்-கல்லாரச் சுற்றிக் கிணறேறிப் பாயுங் கழனிபெற்றான் - வல்லாளன் பூதனெனு மிபா லனுந்தொண்டை மண்டலமே'' எனத் **தொண்டைமண் டலசதகமுங்** கூறுதல் காண்க. 'புல்வேளூர்ப்பூதன்' என் றும்பாடம்.

23. இப்பாடல் இக்காலத்து மாறுபட்டு வழங்குகிறது.

24. சிரத்திற்பாரையும் மணிமுடியையுமுடைய என்க. சுரப்பு ஆடு - சுரத்தலையுடைய ஆடு.

25. "தண்ணீர்விரவுங் காவேரி தார்வேந்தனுமே தகுஞ்சோழன் - பெண்ணைவளம் பர்ச்சிலம்பி பிறங்குமலையு மேருவென்றே-யெண்ணுரௌவை யுரைத்தமுறை யேழுபுவியி லெண்டிசையில்-மண்ணுவதுதண் டலைவேலி வளஞ்சேர்சோழ மண்டலமே" எனச் **சோழமண்டலசதக** ஆசிரியரும் இப்பாடற்கருத்தை விளக்கியிருத்தல் காண்க. இதனால் பிற்காலப்பாடமுறை பிறழ்ச்சிபெற்றமை விளங்குவதோடு, இது கம்பர்வாக்கல்லாமையும் தெளிவாம்.

26. பத்தம்பிற் பாதியுடையான் - பஞ்சபாணமுடைய மன்மதன். இரண்டம்பு கண்கள்.

27. 'மானை வருத்த' என்றும் பாடம்.

29. மூழக்கு உழக்கு - மூன்றுழக்கு உழக்கு என்பதன்விகாரம்; ஒருபடி என்றபடி. உழக்கு - காற்படி. நாழி - ஒருபடி.

30. 'கருத்தொருமித்து' என்றும் பாடம்.

31. இது ஔவைபாடியதன்றி நாஞ்சில்வள்ளுவனை மருதனிளநாகனார் பாடியதாகும். (புறநானூறு-140) படப்பை - மனைப்பக்கம். கண்ணுறை - மேல்தூவுவது. கடறு-சுரம்.

32. இவ்வெண்பா "ஏழிற்கோவை ஔவை முனிந்து பாடியது" எனப் **பேராசிரியரும் நச்சினார்க்கினியரும்** கூறுதலுங் காண்க. (தொல். செய். 125) **ஏழில்** என்பது நன்னனுடைய மலை. "நன்னனேழில் நெடுவரை" (**அகம்**. 152) 'நன்னனுட் டேழிற் குன்றத்துக் கவாஅன்' (அகம்.349) என்பர். இம்மலை,இப்பெயருடன் மலைநாட்டிற் கண்ணனூருக்கு வடக்கே 18வது மைலில் உள்ளதென்றும், (ஸப்தசைலம்) என்று வழங்கப் பெற்ற ரயில்வே ஸ்டேஷனையுள்ளதென்றும் தெரிகின்றன. (**நற்றிணைப்** பதிப்பு. முகவுரை. பக். 91) இந்நன்னன் மரபினனொருவன் பாடுவார்க்குக் கதவடைத்து வந்த காரணத்தாற் புலவர்களால் இகழப்பட்டானென்று 151ம் புறப்பாட்டால் தெரிவதலால், ஔவையால் முனியப்பட்டவன் அங்ஙனம் கதவடைத்தவன்போலும். 'மருடீர்ந்த' (தனிச்சீர்) எனவும் பாடம்.

35. துச்சில் - ஒதுக்கிடம்.

37. உறும் - நன்று.

38. இச்செய்யுள் பிற்காலத்தவரொருவர் வாக்குப் போலும். இராமசந்திர கவிராயர் பாட்டென்பர் இக்காலத்தார். பாடபேதங்களு முண்டு.

39. இப்பாட்டை வசைச்செய்யுட்கு உதாரணமாகப் பேராசிரி யர் மேற்கோள் காட்டினர். (தொல். செய். 125) சில அடிகளுந் தொடர்களும் முன்பின்னுகமாறிப் பாடபேதங்கள் காணப்படுகின் றன. [ ] இதனுள் அடங்கிய தொடர்கள் தெளிவாகவில்லையே னும், உற்றுநோக்கி ஒருவாறு அமைக்கப்பட்டன.

41. அங்கவை சங்கவை இருவரும் வேள் பாரியின் மகளிர்; 'பாரிமகளங்கவையை' எனப் பின்வருதல் காண்க. பாரி மூவேந்தராற் கொல்லப்பட்டபின் அவனன்பரான கபிலர் இம்மகளிரைப் பார்ப்பா ரிடம் அடைக்கலப்படுத்தித் துறந்து உயிர் நீத்தனர். பின் ஔவை யார் திருக்கோவலூரில் இவர்களைக்காண நேர்ந்தபோது அவர்கள், இவரை உபசரித்ததைப் புகழ்ந்து பாடியனவே, இதுவும் கீழ் வெண் பாவும் எனக்கூறுவர் (வேளிர் வரலாறு.)

42. ஔவையார் பாரிபாற் பரிசில்பெறச் சென்றபோது, அவ் வள்ளல் இவரதருமைபெருமையறிந்து இவரைப் பிரிதற்கு இயலாது பரிசில் நீட்டித்தனனாக, இவர் அவனைப் பரிசிலீந்து விடும்படி வற் புறுத்த அவ்வேண்டுதலை அவன் மறுத்தற்கியலானாய் வேண்டியவற் றைஅளித்துவிடுத்தும்இவர் பிரிவாற்றாது தன்பால்இவர் திரும்பிவரச் சூழ்ச்சிசெய்து இவர் செல்லும் வழியிற் சிலரைப்போக்கித் தன்பாற் பெற்ற பொருள்களைப் பறித்துவரும்படிச்செய்ய, அதனால் பெற்ற பரிசில்களையிழந்த ஔவையார், பாரியெண்ணியபடியே மீண்டுவந்து அவ்வள்ளலிடம் நிகழ்ந்ததை அறிவிக்க, அவன் முகத்தால் நொந்து, அவர் மீண்டமைக்கு அகத்தால் உவந்து நெடுங்காலம் அளவளாவிப் பெருமகிழ்வெய்தி, முன்னினும் மிகுதியாக அரும்பொருள் நல்கி விடுத்தனன் எனவும்.

பழையனூர்க்காரி என்பவனிடம் சென்றிருந்த இவர், அவன்பாற் பரிசில்பெற்று வேற்றூர்போகவெண்ணிக், கொல்லைப்புறத்தே களை யெடுக்குமிடத்தில்நின்ற அவன்பாற் சென்றாராக, இவரது உள்ளத்

குறிப்பை உணர்ந்த அக்காரி, இவர்பிரிதற்கு உடம்படாது சிலகாலம் தங்கும்படி சூழ்ந்து, அக்களையெடுத்த விடத்தை அளத்தற்குரிய கோலொன்றை இவர்பாற் கொடுத்து இதனை 'அளந்துவருக என்று கூறி, அவன் வேறுதொழில்மேலிட்டுச்செல்ல இவரும் அங்ஙனமே அளந்து அன்று விடைபெறக்கூடாமையால், பின்னும் அவன்பாற் சிலகாலந் தங்கினர் எனவும்.

சேரன் அரண்மனையில், விருந்திற்குவந்த பலருடன் ஔவையா ரும் உண்டற்கு இருந்தபோது, ஆங்கு வேறு பெரியவிருந்தினனொ ருவன் புகுந்தானாக, சேரமான் அவனுண்ணத்தக்க இடம் ஒழிக்க நினைந்து, ஆண்டுள்ள பலரும் வேற்றோராதலின் ஒன்றுஞ்சொல்ல இயலானாய்த், தன் அன்பிற்குரிய பெருந்தமர் இவ் வௌவையாரே யாயிருந்தமையால், இவரைநோக்கி 'ஔவையே! வாராய்.' என ஆண்டுநின்று வருமாறு அழைக்க, இவர், வந்தவனுக்குத் தம்மிருப் பிடத்தைக்கொடுத்துப் பின் அச் சேரனுடன் உண்டனர் எனவும் கூறுவர்; இம்மூன்றும் எவ்வாறு பேரன்பேயடியாகப் பிறந்தனவோ, அவ்வாறே நீலச்சிற்றாடை, கொடுத்ததும்: ஆதலின், இவை தம்முள் ஒக்கும் என்றவாறு. இப்பாட்டில், 'கலனும்' எனவும், 'களைக் கொட்டும்' எனவும், 'வாராய் எனவழைத்த வாய்மொழியும்' எனவும் பாடங்களுள்ளன.

44. "தாழப்புதைக்குந் திருத்தங்கி தடங்காவாழை தனிபழுப் பப் - பாழிப்புயமா லைமருத்தன் பலர்க்குமுதவும் பான்மையினாற் - காழிப்பொலியு மிலையரிதாய்க் காயுமரிதாய்க் கனியுமின்றி- வாழைக் குருத்துங் கிடையாத வளஞ்சேர்சோழ மண்டலமே" என்ற பாட்டில் இக்கதை கூறப்படுதல் காண்க.

50. கம்பர் இளமையிற் பாடியதென்பது பிற்காலவழக்கு.

51. பொய்யாமொழிப்புலவர், மதுரையிற் பழையசங்கத்தைப் புதுப்பிக்கவெண்ணிப் பாண்டியனைக்காண மதுரைசென்று, ஆலவா யடிகள் கோயிலில் அரசன் தண்டனிட்டு வணங்கிநின்றபோது, அவ னைக்கண்டு இப்பாட்டைக் கூறினர் என்பர்.

54, 55. கோயிலில், பாண்டியனுடன் அளவளாவித் தாம்வந்த கருத்தைப் புலவர் வெளியிட்டபோது சங்கத்தார் சந்நிதி எதிர்ப்

ப்பட்டவளவில், பாண்டியன் புலவரைநோக்கி, "இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்யும்படி நீர் பாடலியற்ற வல்லீரேல், இறந்த சங்கத்தை எழுப்பவல்லீர்தாம்" என்று கூற, அப்போது இதுவும் அடுத்தபாட்டும் அவராற் பாடப்பட்டன என்பர்.

57. "பொய்யா மொழியார் பசிதீரப் புளியஞ்சோறு புகழ்ந்தளித்த - செய்யாரரசூர்ச் சீநக்கர் செய்தசெவ்வருஞ் செய்தாரோ - கையாருதவி பொறையுடைமை காணியாளர் கடனன்றே - மையார்புவியின் முதன்மைபெற்றோர் வளஞ்சேர் சோழமண்டலமே" என்ற பாடலுள்ளும் இக்கதை விளக்கப்படுதல் காண்க.

58. "இறையின்முறையென் றுலகறியச் செப்பும்பொய்யாமொழிதமிழ்க்காத் - துறையினளகை ராஜேந்த்ர சோழன் வரிசை தொகுத்தளித்தே - அறையும்பெருமைச் சீநக்க ரரசூர்முதலா வேழூரும் - மறுவிலாது விளங்கியது வளஞ்சேர் சோழ மண்டலமே" என்றபாட்டில், பொய்யாமொழியார் பாடிக்கொடுத்த வெண்பாவால் சீநக்கர் அரசூர்முதலிய ஏழூரை ராஜேந்த்ரசோழன்கொடுக்கப் பெற்றார் என்றவிஷயம் கூறப்படுதல்காண்க. ஏழூர் ஆவன:—"சிற்றரசூர் பேரரசூர் தென்மாவை பூந்துருத்தி - கொத்தமல்லி கண்டி குருகாவூர்" என்பன. இவ்வெண்பாவுள் "இறையு முறைகழிக்க வொண்ணு" எனவும் பாடம்.

59. வாசமலர்க் கண் நங்கை - இலக்குமி போன்றவள். நங்கையின் கண், அங்கை, கொங்கை, முகம், கால் இவை கடிக்கமலம் என்க. கொங்கை முகங்காலுங் கடிக்கமலம் - தேனைத் தன்னிடம் வெளிப்படுக்கும் மணமிகுந்த தாமரை. கொங்கு-தேன்.

60. புலவர் மதுரைக்கு வரும்வழியில் பாலைவனத்தைக் கடந்து இளைப்புடன் செல்லும்போது, முருகக்கடவுள் ஒரு வேடவுருக் கொண்டுவந்து, நீவிர் யார் என்று கேட்பத், தாம் புலவரெனலும் 'ஆயின் என்மீது ஒருகவிபாடும்' என்று கேட்கப் புலவர் இப்பாடலைப் பாடினர் எனவும், இப்பாடல் கேட்ட முருகவேள் மகிழ்ந்தனராயினும் 'பொன்போலும்' என்று பாலையைச் சிறப்பித்தது பொருந்தாதென்றுகூறி; புலவர்பாடிய அச்சுரம் போக்குத் துறையிலேயே,

'விழுந்த துளி' என்ற பாடலைப் புலவர்மேற்பாடினர் எனவுங் கூறுவர். "முற்றித்திரி வெற்றிக்குருபர முற்பட்ட முருட்டுப்புலவனை முட்டைப்பெயர் செப்பிக்கவிபெறு பெருமாளே" என்று அருணகிரி நாதரும் பிறரும் இச்சரிதத்தை எடுத்தோதிப் பாராட்டினர்.

**62.** இது புலவர் பசியால் வருந்தி நடுநிசியில ஓரூரில் உள்ள கூத்தாள் என்பவள் வீட்டையடைய அவ்வீட்டில் அவளும் அவள் தமக்கையும் தாயும் பாட்டியும் குருடர்களாய் வருந்துவது கண்டு இரங்கி அந்நால்வர்க்குங் கண்டெரியப்பாடியது. இக்கதையைக் காளமேகத்துக்குப் பிற்காலத்தார் வழங்குவர்.

**63.** அறமுரைத்தான் — தக்ஷிணாமூர்த்தி; 'அன்றாலின்கீழங் கறமுரைத்தான் காணேடி' என்பது **திருவாசகம்.** ஈண்டுத் தலைச்சங்கப் புலவரான சிவபிரான் என்ற மாத்திரையாய் நின்றது. முப்பால் — திருக்குறள்.

**64.** புலவர் சீநக்கன் படுக்குங் கட்டிலில் ஒருநாளிரவில் அயர்ச்சிமிகுதியால் நித்திரைபோயினர். சீநக்கன் சிறிதுநேரங்கழித்துப் படுக்கைக்கு மீளுமுன்னே அவன்மனைவி கட்டிலிற்படுத்துறங்குகின்றவரைத் தன் கணவனென்றெண்ணி அதில் ஒருபக்கத்துப் படுத்து உறங்கினாள். பின்பு சீநக்கன் அங்குவந்து புலவருடன் தன் மனைவிபடுத்துறங்கலைக் கண்டு, அறியாமையால் நேர்ந்ததவறென்று விகற்பமாகக் கருதாமல், புலவரைச் தட்டியெழுப்பித் தாமும் ஒருபுறம் படுத்துக் கொள்ளும்படி சிறிது இடந்தருமாறு புலவரை வேண்ட, அவர் எழுந்து அயலிற்பார்க்க, சீநக்கன் மனைவி உறங்குவது கண்டு அஞ்சி திப்பிரமை கொண்டார். சீநக்கனே புன்முறுவல் கொண்டு புலவரைக் குற்றமில்லையென்று சமாதானப்படுத்த, இதற்கிடையில் சீனக்கன்மனைவி விழித்துக் கொண்டு தான் செய்த தவற்றையறிந்து வெட்கி ஓடினாள். இச்செய்தி ஊரிற்பரவி அபவாதமாகமுடிய, அப்போது புலவர் இயற்றியது இப்பாடலாம். இதனைக் கம்பர்வாக்காகப் பிற்காலத்தார் தவறாகக் கருதினர்.

**65.** குலோத்துங்கச்சாவகன் என்று கூறிய என்னை அவன் ஒறுத்தமையால், கோதில் குலமங்கையாகிய அவன் மாது கண்ணீர்

பெருக்கினுள் என்க; என்னை ஒறுத்தலால் அவனுடல் வெடிக்க அதனுல் அவன்மனைவி கண்ணீர் வடித்தாள் என்பது குறிப்பு. துளையாத முத்துவடம், விளையாடாச்செப்பு இரண்டும் முறையே கண்ணீர்த் துளிகள், தனமென்பவற்றை வெளிப்படையாய்க்குறிக்கும்.

66. அன்று கட்டிலில் யான் உன் மனைவியுடன் அறியாதுறங்கியபோது, என்னை நோக்கி "சிறிது விலகு; ஒருபுறம் யானும் படுப்பேன்' என்றாய்; அத்தகைய நீ இன்று இவ்வெரியில் நின்னுடன் யானும் படுக்கும்படி சிறிது விலகுதி" என்பது கருத்து.

இவ்வாறு புலவர் தீப்புகுந்த அருஞ்செயலை, முன்னம் புலவர் மேல் சீநக்கன்மனைவிசம்பந்தமாக அபவாதங் கூறிய ஊரரெல்லாம் கேள்வியுற்று, இப்பெருந்தகைபால் அபராதம் விளைத்த எமக்கு உய்வின்மையால் யாமும் இறப்பதே கருமம் என்று, அவர்களிற் பலரும் தீப்பாய்ந்து குற்ற நீங்கினர்; இதனையே "சிற்றரசூர் பேரரசூர் தென்மாவை பூந்துருத்தி - கொத்தமல்லி கண்டி குருகாவூர் - இத்தனையும் - வாய்ப்பா யமர்ந்தருளு மன்னுகுடி யத்தனையுந் - தீர்ப்பாய்ந்த நல்ல திறம்" என்னும் பழையவெண்பாவும் "புரைதீரரசைப்பதிபுகுந்து பொய்யாமொழியார் புகழ்தமிழ்க்கா - அரசூர்முதலா வேழுருமழலிற்புகுந்த தரிதாமோ - தரைசூழ்மதிய மறுவாற்றுஞ் சான்றோரங்கிதாற் றாரெனுஞ்சொல் - வரையாதுலகிற் பெற்றோரும் வளஞ்சேர் சோழமண்டலமே" என்னும் செய்யுளும் கூறுதல் காண்க. "நன்று நன்று' (தனிச்சீர்) 'பூண்மடவார்' என்பன பாடங்கள்.

67. சரராமன் என்பது வெண்ணெய் நல்லூர்ச் சடையனுக்கு ஒருபெயர். "மழையென் றுசங்கைகொண்ட கொடைமீளியண்ணல் சரராமன் வெண்ணெயனுகும்" என இவரே இராமாயணம் நாகபாசப் படலத்திற்(263) கூறுதல் காண்க.

68, 69. சேதிராயனை இவ்வாறு விடந்தீண்டிய செய்தி **தொண்டை மண்டலசதகத்தில்** "அழுவதுங் கொண்டு புலம்பாது நஞ்சுண் டதுமறைத்தே - ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்ப நாட னெழுப்பவிசை - முழுவதுங் கொண்டு" என்றும், திருக்கைவழக்கத்தில் "பாவலர்தாம் - ஏரெழுபதோதியரங்கேற்றுங்களரியிலே - காசி

விட நாகங் கடிக்குங்கை'' எனவும் கூறப்பட்டிருத்தல் காண்க. இங்ஙனம் விடந்தீண்டப்பட்ட புதுவைச் சேதிராயன் என்பவன் வெண்ணெய்நல்லூர்ச்சடையன்மகன் என்பது ''புதுவைவாழ் சடையனுதவுசேய் - பூதலம்பரவு சேதிபன்'' ''பேரோசைப் பிள்ளைப் பெருமாளைச் சேதிபனை'' எனவும்வரும் பாடல்களால் அறியப்படு கிறது. (செந்தமிழ்தொகுதி 5. பக் 59) பூழியான் - திருநீறுதரித்த சிவபிரான்.

70. இப்பாட்டு மூவலூர்ச் சிவன்கோயிலிற்கண்ட சிலாசாஸன மொன்றினும் எழுதப்பட்டுளது. ''நீர்போதுங் காவேரி'' 'புதுவையா னில்லறத்தை' என்பன அதனுட்கண்ட பாடங்கள். (செந்தமிழ். தொகுதி 4. பகுதி 5)

71. கன்னி என்பது குமரியாறு. அதனை முன்னரே கடல்கொண்டதாகலின் அழிந்தனள் என்றார். கங்கைதிறம்பினள் என்பது வானுகிய மேனிலையிலிருந்தவள் பாதாளம்வரை சென்றிழிந்தனளாதலால் கங்கை மாறுபட்டனள் என்றவாறு.

73. வாணியன்தாதன் என்பவன், செக்கார்குலத்துதித்த, கம்பர் காலத்துப் பெரும்புலவன். இவனைச்சோழன் அபிமானித்து விருதுகாள முதலியன அளிக்க, அப்போது கம்பர் இக்கவிபாடினர். இவனுக்கும் கம்பர்க்கும் பகைமையிருந்ததென்பது, கம்பர்பாடிய மும்மணிக்கோவை யொன்றில் குற்றங்கண்டு இத்தாதன் கூறிய வசைச் செய்யுள் பின்வருவதால் (92) விளங்கும். இத்தாதனுக்கு அடிமைப் பட்ட கூவம் என்ற ஊர்வழியே கம்பர் ஒருகால் சிவிகையேறிச் சென்றபோது,அவ்வூரார் வந்து தம்மைப்பாடும்படிவேண்ட, "தாதனுக்கு அடிமைப்பட்ட அவ்வூரைத்தாம் பாடுவதில்லை' என்று இவர் மறுத்தனராக, அவர்கள் விடாமல் இவர் சிவிகையை நெடுந்தூரந்தாங்கியும் அடைப்பையிட்டும் வழிபட்டதற்குவந்து அவரைப்பாடினரென்பது, ''பேணிய செந்தமிழ்த் தாதனுக் கேயன்பு பெற்றமையா - னணிய கம்பன் சிவிகையுந் தாங்கி நயந்த தமிழ் - பூணிய நின்றதும் பொருச்சாப்பிலாது புகுந்துபினும் - வாணியன் தாதற்குத் தாதா னதும்தொண்டை மண்டலமே'' என்றும் ''ஓங்கிய செந்தமிழ்த் தாதற்கடிமையவ் வூரத

னல் - நாங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப னுடன்செல்ல - ஆங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடைப்பையிட்டுந் - தாங்கவி கொண்டது கூவந் தியாக சமுத்திரமே" என்றும்வரும் பாடல்களால் தெரிகிறது. கம்பரோடு ஒட்டக்கூத்தரை விரோதியாக்கிப் பிற்காலத்தார் கூறிய கதைகளுக்கு இந்நூலிலேனும் சதகங்களிலேனும் ஆதாரங் கிடையாமையால், இவ்வாணியன் தாதனுடன் கம்பர்க்கிருந்த பகைமையையே அவ்வாறு மாறிக் கூறினர்போலும். வேள் அம்பு இடித்த கண் வெள்ளம் பிடிக்க - மன்மதனது அம்பைவென்ற கண்கள் நீர்த்துளி கொள்ள. காளம் - திருச்சின்னம்.

**74.** இவன், முற்கூறிய வாணியன்-தாதனன்றி வேறொரு பிரபு போலும்.

**76.** சோழனுடன் கோபித்துப் பாண்டியனிடஞ் சென்று அவனாற் பெரிதும் உபசரிக்கப்பெற்றுக் கம்பர் இருந்தபோது, அப்புலவர் பெருமானது பிரிவாற்றாது சடையன் தம்பியாகிய இணையாரமார்பனை யனுப்பிச் சோழன் அவரை அழைத்துவருமாறு விடுத்தனன் என்க. "தீரம்பெரிய தென்னர்பிரான் சிங்காசனத்திற் சேர்த்தியவ - னூரென் றுரைப்ப நம்பியிணை யாரமார்ப னடியேற்குஞ் - சாருஞ்சராசமனுக்குமொரு தம்பியெனக் கம்பன் புகழும் - வாரம்பெறுவெண்ணையர்பெருமான் வளஞ்சேர்சோழ மண்டலமே" என்னும்பாடல் அறியத்தக்கது. கம்பர் இணையாரமார்பனைத் தமக்குந்தம்பி என்றது சடையற்குந் தமக்குமுள்ள ஒற்றுமைபற்றி. 'மன்னும் - கணையாழி முத்துதிர்க்குங் காவிரிசூழ் சோணாட்டு' என்பது, சோழமண்டல சதகத்துக்கண்ட பாடம்.

**77.** "பலர்புகழ் கம்ப னுமையுட னீயுமொப் பாயென்றதும்" என்றார் **பாண்டிமண்டல சதகமுடையார்**. 'பாண்டியனுன் ஆகந்தோய்ந் தாண்டானரசு' என்றும் பாடம்.

**78.** இரண்டாமுறை இவர் கோபித்தது, சோழன்மகளை விரும்பிய தம் மகன் அம்பிகாபதியை அரசன் கொன்றதுபற்றியென்றும், கம்பர் மகளான காவேரி என்பவளை அரசன் காமிக்க அதனால் அவள் உயிர்துறந்தது காரணமாகவென்றும் கூறுவர். கம்பர்

வழிசத்தவருள், கம்பர்மகள் காவேரியைத் தெய்வமாக வைத்து இன்றும் வணங்கிவரும் வழக்குள்ளதாம்.

79. **பிரதாபருத்திரன் என்பவன்,** ஓரங்கல்நகரிலிருந்து ஆட்சிபுரிந்த காகதீய கணபதி அரசருள் பிரசித்தன். இவனாட்சிக் காலம் கி. பி. 1162—1197 என்று தெரிகிறது. பிரதாபருத்ரீயம் என்னும் வடமொழி யலங்கார நூலிற்குரிமைபெற்றவனாதலால் வித்வான்களை ஆதரித்தவன் இவனென்பது விளங்கும். இவனால்தென்னாடு முழுதும் ஒருகாலத்து ஜயிக்கப்பட்டதாகத்தெரிதலால் கம்பன் இவனைக்கொண்டு சோழன்மேலிருந்த தம் செற்றத்தைப் போக்கக் கருதினரென்பது பொருந்தும். சேரனிடம் கம்பர் சென்று அவன் தனக்கு அடைப்பை கட்டிவரச்செய்து சோழனை அஞ்சவைத்தாரென்று மாறிப் பிற்காலத்தார் கதையெழுதுவாராயினர். அவனியிலுள்ளார் அனைவரும் போந்துண்ணலாலும், அயிராவதம் போன்ற யானைமேல் நீ உலாவரும்போது நின்னைத்தொழும் பருவமாதர்கள் காம வெப்பம் ஆற்றாமல் குளிர்ச்சிக்காகப் பரப்பிப்படுத்தலாலும். நின் நாட்டில் வாழைக்குழாங்கள் குருத்திராவாயின என்பது கருத்து.

81. மூன்றாம் ராஜராஜசோழன் திருவொற்றியூருற்சவமொன்றுக்குச் சென்றிருந்தபோது, சைவமதாசாரியராகிய சதுராநன பண்டிதரும் வாகீசபண்டிதரும் உடனிருந்தனர் என்று ஒருசாஸனங் கூறுகிறது (Ep. Report. 1911-14). கம்பர் கூறியபடி, திருவொற்றியூர் மடாதிபதியான சதுராநனபண்டிதர் இவர்போலும்.

82. விடைதழுவிக் கோடுழுத புண் - இடையர் முறைப்படி ஏறுதழுவுதலால் உண்டான புண். தென் புழல்மான் - தெற்கிலுள்ள புழற்கோட்டத்துப் பெண். சுந்தரப் பொற்றோன்றல் - காளிம்பன்.

83. துப்பு வில் பாணம் - வாய் புருவம் கண். நடந்து உப்பு விற்பாள் என்க. இங்ஙனம் தட்டான்மேற்பாடியது தன் தாசியாகிய வல்லிக்கு நகைகள்செய்து கொடுத்தற்காக என்பர்.

86. இதனால், கம்பர் தம் இராமாயணத்தை 'சடையன்வெண்ணெய்நல் லூர்வயிற் றந்ததே' என்றவாறு வெண்ணெய் நல்லூரிற் பெரும்பாலும் பாடினராயினும், திருவொற்றியூரிலுமிருந்து சிறு

யானைப் பாடினவரென்பதும், இரவிலும் தம் நூலையியற்றி வந்தாரென்பதும், மாணுக்கர்பலர் உடனிருந்து எழுதி வந்தனரென்பதும், பிறவும் அறியப்படும்.

87. பார்க்கும்போது பற்றும்போது சேர்க்கும்போது, விண்ணவர்கோமானை சேடனை வாணனை முறையே நினைப்பேம் என்க; ஆயிரங்கண்ணுந் தலையும் கையுமில்லையே என்று வருந்துவேம் என்பது குறிப்பு.

88. "நிச்ச முறவே நெற்பயிராய் நீளுந்தமிழ்க்கு நென்மலிவாழ் - தச்சன் பொலியா யிரக்கலநெற் றந்தானுலகிற் றுதாவாய்-மெச்சுமவன தாண்மையினால் வென்றேகொடியின் விருதுகட்டி - வைச்சதொடையின் றரமெளிதோ வளஞ்சேர்சோழ மண்டலமே" என்னும் பாடல் இங்குநோக்கத்தக்கது. இதன் குறிப்பாக 'உழுமாறு பாட்டு' என்று ஏட்டுப்பிரதியிற் காணப்படுகிறது, விளங்கவில்லை. 'நெற்பயிர் நெல் விளையும்' 'கற்பணிவேலை செய்வான்' 'விற்படு' என்பன பாடங்கள். இப்பாடல் தனிப்பாடற்றிரட்டில் 'கம்பர் வெள்ளாட்டி பாடியது' என்ற குறிப்போடு மிகவும் வேறுபட்டுக்காணப்படும்.

89. இதனாலும் அடுத்த பாட்டாலும், கம்பரிடம் வைத்த பெருஞ் செற்றத்தால் சோழன் அவர்வரும்போது புலியை அவிழ்த்துவிடச்செய்து அப்புலியை எய்வதுபோல புலவரை எய்து கொன்றான் என்பது உணரப்படும். கம்பனைக் கொன்றான் என்று பாண்டியன் பழிகூறினான் என்ற செய்தியும் பின்வருதல் காண்க. (159) சோழனுக்கும் கம்பர்க்கும் இத்தகைய கொடும்பகை நிகழ்ந்ததற்கு, அக்காலத்துப் பெருவீரனை பிரதாபருத்திரனைக்கொண்டு கம்பர் சோழனைப் பயமுறுத்தியதும், சடையவள்ளலிடத்து இவர் வைத்த பேரபிமானமுமே, காரணமாகவேண்டும் என்று கருதுவர், பிரம்மஸ்ரீ **ரா. இராகவையங்கார் அவர்கள்.** அம்பிகாபதியை அரசன் யானையின் காலில் இடறச்சொன்னபோது அவ்வம்பிகாபதி பாடியதாகக்கொண்டு பாட்டைமாற்றி வழங்கினர் பிற்காலத்தார்.

91. "ஆன்பானறுந்தேன் முக்கனிநீ டமுதிற்சுவையா றுடனருந்தித்-தான்பாலணைய மறப்பதிலைச் சடையாவென்று தமிழ்தோர்தும்-

தேன்பாயலங்கற் கம்பனுக்குச் செழும்பாரிடத்திற் செய்தநன்றி-வான்பாலிருக்கச் செய்துநலம் வைத்தார்சோழ மண்டலமே" என்னும் பாடலும் காண்க. கம்பரது முதற்பாட்டாகிய மோட்டெருமை என்பதும் கடைசிப்பாடலாகிய இதுவும் தம்மையாதரித்த சடையனைப்பற்றியதாகவே அமைந்து கவிச்சக்கரவர்த்தியின் செய்ந்நன்றியறிதலென்னும் உத்தமகுணத்தை வெளியிடுதல் குறிக்கத்தக்கது.

92. தாதன்-முன்கூறிய வாணியன்தாதன். கைம்மணிச் சீர்-கையின் மணியோசை; காளிகோயில் முதலியவற்றிற் பூசைபுரியும் உவச்சர்மரபிற் கம்பர் பிறந்தவராதலின் இவ்வாறு வசைகூறினன். "சீரணிசோழநாட்டுத் திருவழுந்தூருவச்சன்" என்று ஏடுகளிற்காணப்படும் இராமாயணத் தனியன்பாடலும் நோக்கற்பாலது. கம்பர் பாடிய மும்மணிக்கோவை யாரைப்பற்றியதென்பது விளங்க இடமில்லை.

93. இதன் வரலாறு விளங்கவில்லை.

94. தொல்காப்பியதேவர் என்பவர், இரட்டைப்புலவர்க்கு முற்பட்ட ஒரு பெரும்புலவர். திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் இயற்றியவர். இவர், ஜிநாலயமொன்றற்குச் செங்கலறுக்கச்சொன்னபொழுது திருப்பாதிரிப்புலியூர்க் கோயில் விசாரணைக் கருத்தர் கோபங்கொண்டு இவரைநோக்கி, நீர் இங்ஙனம் செய்வித்தல் முறையோ என்று கேட்டார்; உடனே இவர் 'வேதமொழி' என்ற இவ்வெண்பாவைக்கூறி அதன்முகமாகத் தம்முடைய கருத்தை வெளிப்படுத்தினர். கேட்டவர்கள், இவருடைய கருத்தை யறிந்து ஆறுதலுற்று இவர் சிறந்த வாக்கியாயிருத்தலைக்கண்டு 'இவ்வெண்பாவையே இடையில்வைத்துத் திருப்பாதிரிப்புலியூர்க்குக் கலம்பகமியற்றித்தரல் வேண்டும்' என்றுவேண்ட, அவ்விதமே புலவர் இந்நூலைப்பாடி முடித்தனர் என்று இப்பாட்டாலும் குறிப்புகளாலும் விளங்குகின்றது. திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் மஹாமஹோபாத்யாயர். சாமிநாத ஐயரவர்களால் 1908-ம் வருஷத்தில் பதிப்பிக்கப்பட்டுளது. 'வேதமொழி' என்ற வெண்பா, அக்கலம்பகத்தில் இரண்டாஞ் செய்யுளாகக் காணப்படுகிறது. பரம அம்பரமாம் படு கடல் - மேலான ஆடையாகும் ஒலிக்கின்ற கடல்.

95. இரட்டையர் ஒருவர்முடவரும் ஒருவர்குருடருமாயிருந்த சகோதரப் புலவர். குருடர் முடவரைத் தூக்கிச்செல்ல,முடவர் குருடர்க்கு வழிகாட்ட இவ்வாறே நாடெங்குஞ் சஞ்சரித்துப் பாடிப் பெருமைபெற்றவர். இவர்க்கு **இளஞ்சூரியர் முதுசூரியர்**என்னும் பெயர்களும் முன்னூளில் வழங்கிவந்தன என்பது பின்வரும் குறிப்பால் விளங்குகிறது. இவர் ஆமிலந்துறையிற் பிறந்தவரென்று **சோழமண்டலசதகம்** கூறும்.

மஹாமஹோபாத்யாயர் பிரமஸ்ரீ **சாமிநாத ஐயரவர்கள்** இக்குறிப்புவிஷயமாக ஊகித்தெழுதியிருப்பவை அடியில் வருமாறு:—(திருப்பாதிரிப்புலியூர்க்) "கலம்பகம் சிறந்த கவிஞர்களாற் பாராட்டிப்படிக்கப் பெற்றுத் தமிழ்நாடெங்கும் பரவி வழங்கலாயிற்று. அக்காலத்தில் சிதம்பரத்துள்ள அடியார் குழாங்கள் அங்கே தரிசனத்துக்கு வந்த இரட்டையர்களை நோக்கி, 'திருப்பாதிரிப்புலியூர்க்குத் தொல்காப்பியதேவரியற்றியதுபோலச், சிதம்பரத்திற்கு நீங்கள் ஒரு கலம்பகம் இயற்றியருளவேண்டும்' என்று வேண்டினர். இரட்டையர்கள் 'தொல்காப்பிய தேவர் சொன்ன'" (இந்நூல். 102-ம்பாட்டு) என்னுஞ் செய்யுளைக் கூறி, 'சிவபெருமான்மீது கலம்பகம்பாடுதற்கு யாம் வல்லேமல்லேம்' என்றார்கள். கேட்டவர்கள் அதனால் தடைப்படலின்றி, அங்ஙனங் கூறினமை பற்றியே நன்குமதித்துக் கலம்பகம் பாடும்படி பின்னும் வற்புறுத்த, புலவர் அப்பொழுதும் துணிவின்றி இக்கலம்பகப்புத்தகத்திற் கயிறுசார்த்திப் பார்த்தார்கள். பார்த்தபொழுது, "பாடுவார்பாடும்" (16-ம் செய்யுள்) என்னும் பாடல் அகப்பட்டது. அதனைக் கண்ணுற்ற இரட்டையர்கள் அச்செய்யுளின் பின்னிரண்டடியின் பொருளையறிந்து மனமுருகி, தம்மைப் பாடும்படி ஸ்ரீ ஆனந்தநடராஜர் கட்டளையிட்டருளியதாகவே நினைந்து துணிந்து செய்யத் தொடங்கிச் சிலதினங்களில் தில்லைக்கலம்பகத்தைப் பாடிமுடித்தார்கள்" என்பதே. பாடுவார் ஓரிருவர்-கம்பளர், அசுவதரர்; 'காதிரண்டுபேர்' என்பது **தில்லைக்கலம்பகம்**.

96. திருவக்கைக் கொங்கராயனுகிய ஆட்கொண்ட நாயன் என்பவன், வில்லிபுத்தூரரைக்கொண்டு பாரதம் பாடுவித்த பிரபு

என்பது, அப்பாரதத்தாலும் அதன் பாயிரத்தாலும் நன்கறிந்தது. (திருவக்கை--திருவக்கரை என்ற சிவஸ்தலம்) .இதனால் வில்லிபுத்தூராரும் இரட்டையரும் ஒருகாலத்தவராதலால் பெறப்படும். சாணார் சதுரர்; விழுப்புண்பட்ட தழும்புடைமைபற்றி சாணர் வீரர் எனினும் அமையும். சாணம் - தழும்பு.

97. இவன்பால் ஒருகாரியமாகப் புலவர் சென்றபோது, தலைமுண்டிதமாகச் சௌளம்பண்ணிக்கொண்டிருந்த இவன் தன் வித்யாகர்வத்தால் அலக்ஷ்யமாயிருந்ததோடு அந்த நிலையில் தன்மேல் ஒருபாடலியற்றும்படியும் கேட்டனனென்றும், அப்போது அவன் கர்வமடங்க இதுபாடினரென்றுங் கூறுவர். இதனைக் காளமேகப் புலவர்க்குரியதாக பிற்காலத்தார் வழங்கினர்.

98. இச்சம்பராசனை 'புலிக்கொடியான்' என்று கூறுவதால் இவன் சோழனைச் சேர்ந்த சிற்றரசனென்பது விளங்கும். இரட்டையரியற்றிய ஏகாம்பரநாதருலாவில், இவன், 'மல்லிநாதன்' 'சம்புகுலத்தொருவன்' 'பல்லவன்' 'சம்பன்' என்ற பெயர்களால் வழங்கப்படுதலோடு, ஏகாம்பரநாதர்க்கு மணிமகுடம் தேர் துலா மண்டபமிவைகள் செய்துவைத்தானென்றும் புகழப்படுகின்றான், மூன்றும் ராஜராஜசோழன் காலத்தில், ராஜகம்பீரச் சம்புவன் என்ற சிற்றரசனொருவன் பிரசித்தனாயிருந்தானென்று சாஸனங்களால் (S. I.I. Part I. p. 108, 105) விளங்குவதால், இச்சம்புவன் அவன் வமிசத்தவனாகக் கருதப்படுகின்றான். சம்பனது புயத்தை விரும்பி, அது கிடையாமையினுண்டான வருத்தத்தால், பெண்ணின் கொங்கையில்விழுந்து தெறிக்கும் கண்ணீர்ப் பெருக்கின் துளிகள், அவளது நெற்றித்திலகத்தை அழிப்பன என்பது கருத்து.

99. கைதவனே! உன் மீனமுத்திரைபொறித்தற்கு, வாயுவால் அலைக்கப்பட்டும், திருமாலால் கடையப்பட்டும், சிவபிரானால் வளைக்கப்பட்டுமுள்ள மேருவை நீ இடமாகக்கொண்டதுபோலச், சம்பன்மலை அமையாது என்பது கருத்து. மந்தரகிரியின் கதை மேருவுக்குரியதாகக் கொள்ளப்பட்டது, அதனுள் அடங்கிய தாகலின்.

100. திருவாமாத்தூர்க் கலம்பகத்தை இரட்டையர்பாடி அரங்கேற்றும்போது 'ஆற்குழையோ' என்ற பாடல்வர, பம்பையாற்றுக்குக் கீழ்க்கரையிற் கோயில் கொண்டருளிய சிவபிரானை 'பம்பை மேற்கரைக்கோயில்கொண்டார்' என்று புலவர் பாடியிருப்பதைக் கேட்ட சபையோர் நகைத்து, பாடினவர்க்குக் கண்ணுங் காலும் இல்லாமற்போயினும் கேட்பவர்க்கும் அவையில்லாமற் போகவில்லை என்று எழுந்துபோய்விட்டனரென்றும், அங்ஙனம் போனவர் காலையில் ஆற்றங்கரைக்கு வந்துபார்க்க, அன்றிரவில் உண்டான பெருவெள்ளத்தால், ஆற்றின்கதிமாறி, புலவர் கூறியவாறே மேற்கரைக் கோயிலாகவிருத்தல்கண்டு யாவரும் புலவர்களது வாக்கின் தூய்மைக்கு அதிசயித்து அவரைப்போற்றிப் புகழ்ந்தனரென்றும் கூறுவர். இதுபற்றியே 'ஆறு விலகிய பாட்டு' என எழுதப்பட்டிருத்தலுங்காண்க. சிவபிரானது திரிபுரமழித்த அம்புக்கு (திருமாலுக்கு). உறையுந் தூணி (இடம்), ஆற்குழையோ.........தம்பமோ என்க. ஆற்குழை - ஆலந்தளிர்.

101. தொல்காப்பிய தேவர் சொன்ன தமிழ்ப்பாடல்-திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம். 'மானுரைத்த தேறுமோ' 'பல்காற் பொருமிரக்குப்' என்பன பாடங்கள். பொருள் அழற்கும்-பிள்ளையாகிய உபமந்யு அழுதலுக்கும். சங்கு-சங்கநிதி. கோ-காமதேநு.

102. 'மறமுந்தவிர' என்றும் பாடம். தீபங்குடி என்று திருவாரூர்ப்பக்கத்தில் மூன்று மைல் தூரத்தில் ஒன்றும், திண்டிவனம் பிரதேசத்தில் ஒன்றும் உள்ளது. அறநூல் செய்தார்-அருகக்கடவுள். இப்பாட்டிற்கண்ட அபயன் என்பவன், கலிங்கத்தைச் செயித்த முதலாங் குலோத்துங்கன். (கி. பி. 1070—1118.)

103. புகழாம் ஏகாப்பொருள் - கலிங்கத்துப்பரணி பாடித் தாம் நிலைநிறுத்திய அபயன் புகழ்.

105. 'அரும்பகைத் தொள்ளாயிரம்' என்றும் பிரதிபேதம். **இலக்கணவிளக்கப்** பாட்டியல் 88-ம் சூத்திரவுரையில், 'அரும்பைத் தொள்ளாயிரம்' என்று காட்டப்பட்டிருப்பது இதுவேபோ

னும். இது, முத்தொள்ளாயிரம், வச்சத்தொள்ளாயிரம் போல்வதொன்றும். 'செண்டா லடித்தது பொற்கிரி' என்பது, கரிகாற்சோழன் உலகமுழுதுந் தன்னடிப்படுத்திவரும்போது, இமயமலை "தன்னோடு எதிர்த்து விலக்குதலின், அதனைப்புறங் காண்டற்கும், அதன் வடபாலுந் தனதாணை சேறற்கும் சாத்தனருளால் தான் பெற்ற செண்டினாலே அதனையடித்துத் திரித்துப் பொறித்து மறித்து நிறுத்தான்" என்பர். (சிலப்). "செண்டுகொண்டுகரி காலனொருகாலிலிமயச் சிமையமால்வரை திருத்தருளி மீளவதனை" என்றார் செயங்கொண்டாரும்.

107. முத்துப்பந்தரில் நிற்குங் குருளை-திருஞானசம்பந்தர்.

108. இதன் முதலடியிரண்டும் விக்ரமசோழனுலாவில் உள்ளன. இவ்வுலா செந்தமிழ்ப்பத்திரிகை மூலம் வெளிவந்துளது.

110. 'பரிநெருக்கால் மண்டுளங்காதே' என்றும் பாடம். உரவிதாயல்ல-வலிதானமையால் அன்று. புரவி தாவிய வகையால் பூமி அசையவில்லை என்பது கருத்து.

112. துலாபுருடதானம் - அரசன் ஒருதட்டிற்பொன்னும் ஒருதட்டில் தானுமாகவிருந்து நிறுத்து, அந்நிறுத்த பொன்னைத் தானஞ் செய்கை.

114. பேது ஆட்டுக்கு அடற்புலியஞ்சல் எனப்பிரித்துப் பொருள்கொள்க. பேது-பேதைமை.

115. கோ-சக்ரவர்த்தி.

117. பேராசிரியர்-தொல்காப்பியம் திருக்கோவையார் குறுந்தொகை இவற்றுக்கு உரையெழுதியவர். நச்சினார்க்கினியரால் ஆளப்படுபவர். இவர், ஒட்டக்கூத்தர் காலத்தவரென்பது, இக்குறிப்பால் விளங்குகிறது. நேமிநாதர் என்பவர், சின்னூலரகிய நேமிநாதமியற்றிய ஆசிரியர்போலும், அபங்க-பங்கமில்லாதவனே.

118. திரிபுவனம்-சோணாட்டுள்ள ஒரு சிவதலம். இது முற்காலத்து சோழர்களது ராஜதானிகளுள் ஒன்றாக இருந்தது. சோழன் - அவ்வூரிலிருந்த ஒரு பிரபு.

119. செங்குந்தர்கள் தங்கள்மீது ஒருபிரபந்தம் பாட ஒட்டக்கூத்தரை வேண்டினராக, தம் குலத்தைத் தாமே சிறப்பித்தல் புகழன்றென்று புலவர் வாளாவிருந்தனர். அதற்குச் செங்குந்தர் பெருங்கோபமுற்று இவர் குலாபிமானமற்றவராதலால் இவரைக் கொல்வதே தகுதி என்று திரண்டுவர, இவர் ஓடித் திருபுவனத்திருந்த சோமனிடம் அடைக்கலம் புகுந்தார். பழிகாரர் சோமன் வீட்டைச்சூழவும்,அப்பிரபு தன்மகனைப்பேழையுள் அடக்கி, அதனைப்பழிகாரர்க்குக்காட்டி,'இதனுள் உள்ள புலவரை நும் விருப்பப்படி செய்மின்' என்றளிக்க, அதனை ஓரிடத்துக்கொண்டுபோய் அவர்கள் திறந்து பார்க்க, அதனுள் புலவரன்றிச் சோமன்மகன் இருக்கக்கண்டு அவனுடன் திரும்பிவந்து சோமனைநெருக்கினர். அப்போது உங்கள் வீரத்தை இப்போது காட்டுவீராயின், புலவர் உங்களைப்பாடாதிரார் என்று கூற, அவர்களெல்லாம் தங்கள் தலைகளை அரண்மனைமுன் அறுத்து வைத்தனரெனவும்; அத்தலைகளையே ஆசனமாகக் கொண்டு வீற்றிருந்து புலவர் அரசன்முன் ஈட்டியெழுபதுபாடி அறுபட்ட தலைகளை ஒட்டச்செய்தனரெனவும் கூறுவர். வந்து உஞ்சோம் (உய்ந்தோம்) எனப்பிரித்துப் பொருள் கொள்க.

125. அரசன் புகழேந்தியை யார் எனவினவ, ஒட்டக்கூத்தர் 'இவன் பித்தன்' என்றபோது பாடியதென்பர். "புலவர், என்னைக் கண்டால், வாழைத்தோட்டத்துட் புகுந்தொளிக்கும் பித்தன் என்று என்னைச் சொல்வர்" என்பது கருத்து. பித்தர் வாழைத் தோட்டத்துக்குள் பித்தசாந்தியின் பொருட்டுச் செல்வது வழக்கு.

126. விக்ரமசோழன்,கலிங்கங்கொண்ட முதற்குலோத்துங்கசோழன் மகன். இவன் காலம் கி. பி. 1118-1132 வரைஎன்பர்.

129. (114-ம்)செய்யுளும், இதுவும், ஒரேசமயத்தில் ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் பாடியனவாகத் தெரிகின்றது. கூத்தர் வாக்கில் சோழன் தட்டு உயர்ந்ததாகவும் புகழேந்தி வாக்கில் அவன் தட்டுத் தாழ்ந்ததாகவும் வைத்துப் பாடப்பட்டுள்ளவற்றின் நயங்கள் ஆராயத்தக்கவை.

131. இதுமுதல் 137 வரையுள்ள பாடல்கள் இன்னாரியற்றியவை என்பது தெளியப்படவில்லை. புகழேந்திவாக்கின் தொடர்ச்

சியாயிருத்தலால், அவர் வாக்காகக் கருத இடமுண்டு. சாருவபூம பாண்டியன்' என்றும் பிரதி பேதம். இப்பாட்டின் குறிப்புக்குரிய கதையும் விளங்கவில்லை.

.134. இது இராமசந்திர கவிராயர் வாக்காகச் சிலபாடபேதங் களுடன் தனிப்பாடற்றிரட்டிற்காணப்படுகிறது, பொருத்தமில்லை.

136. யாழ்ப்பாணத்தை ஆண்ட ஆரிய சக்கரவர்த்தி என்ப வன் கி.பி. 1288 ல் சிங்களவர் தலைநகரைப்பிடித்துப் பொக்கிஷங் களைக் கவர்ந்து பாண்டியனுக்கு அனுப்பினனென்றும், 1290 ல் இலங்கையாண்ட பராக்கிரமபாகு சமாதானத்தின்மேல், பாண் டியனிடமிருந்து அவற்றைப் பெற்றுன் என்றும் தெரிகின்றன. (Sketches of Ceylon History. p. 47). இவ்வாரிய சக்கரவர்த் தியே ஆரியசேகரன்போலும்.

137. குரங்குகளில், ஓரிடத்துக்குரியவை மற்றோரிடத்துக் குரியவற்றோடு சேரா என்பதும், சேர்ந்தால் கலகம் விளைவதும் கண்கூடாதலால், 'இந்தப் புன் குரங்கு வராவனம் விட்டிங்கு வந்த தென்னே' என்றார்.

139—141. நீலியென்பவள் பழையனூரிலிருந்த ஒருவணிகன் மனைவி. இவள் விவாகமாகிச் சிறிது காலத்தில் இறந்து திருவாலங் காட்டிலே பேயாய்த்திரிவாளாயினாள். ஒருநாள் அவளுடைய நாய கன் அக்காட்டு வழியே தனித்துச்சென்றபோது இந்நீலிப்பேய் அவனுடைய இரண்டாம் மனைவியைப்போல் வடிவங்கொண்டு ஒரு கள்ளிக்கட்டையைப் பிள்ளையாக்கி இடையிலே தாங்கிக்கொண்டு அவனைத்தொடர, அவன் அவ்வடிவத்தைப் பேயென நிச்சயித்து அப்பேயினது வஞ்சமொழிகளுக்கு இணங்காதோடினான். பேயும், "இது முறையோ; இது முறையோ; என்னைக்காட்டில் விடுத்து அக லக்கருதினீரே" என்று அழுதுகொண்டு தொடர்ந்து காஞ்சீபுரத்தை யடைந்து, அங்கே அம்பலத்திற்கூடியிருந்த வேளாளரிடத்துச் சென்று தன் வழக்கைச் சொல்லிற்று. அம்பலத்து வேளாளர் இருவர் வழக்கையுங்கேட்டுப் பேயைப்பார்த்து, நீ கூறுவதற்குச் சாக்ஷியாதென் றுவினவ, பேய் இப்பிள்ளையைவிடுக்கின்றேன்; அஃது

அப்பாவென் றழைத்துத் தந்தை மடிமீதேறுதோ பாருங்கள் என்று கூறிவிடுப்ப, அப்பிள்ளை அவ்வாறு செய்ய, வணிகன், இது பேய்க் கூத்தென்றான். அது கேட்ட வேளாளர் 'அஃதுண்மையானால் நாங்கள் பிணையாவோம். நீயும் இவனுமாக இவ்வறையினுட்போய்ச் சிறிது நேரம் பேசிவாருங்கள்' என்று சொல்ல வணிகன் அவ்வுரை மறுக்க இயலாதவனாய், அறையினுட்செல்லப் பேயுந் தொடர்ந்துள்ளே புகுந்து கதவடைத்து அவனுயிரைப்பருகி மறைந்தது. வேளாளர் எழுபதின்மரும், கதவைத்திறந்து பார்த்துத் தம்மாலிறந்த வணிகன்பொருட்டுத் தாமும் தீப்பாய்ந்து உயிர் விடுத்தார்கள். இந்தச் செய்தி "வஞ்சம் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்டஞ்சும் பழையனூர் ஆலங்காட்டெம் மடிகளே" எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரத்தும், "மாறுகொடு பழையனூர் நீலி செய்த வஞ்சனையால் வணிகனு ரிழப்பத் தாங்கள் - கூறியசொற் பிழையாது துணிந்து செந்தீக் குழியிலெழு பதுபேரு முழுகிக் கங்கை - யாறணிசெஞ் சடைத்திருவா லங்காட்டப்ப னண்டமுற நிமிர்ந்தாடு மடியின் கீழ்மெய்ப் - பேறுபெறும் வேளாளர்" எனப் பெரியபுராணத்தும் "இன்னும் புகழ்நிற்க ஓற்பழிக் காமற் றெழுபதின்மர் - துன்னுந் தழல்புக் கொளித்ததெல் லாஞ்சுரு திப்பொருளா- யுன்னும் புரிசைத் திருவாலங் காட்டி னுறைபதிக - மன்னுந் தமிழில் வகுத்ததன் றோதொண்டை மண்டலமே" எனத்தொண்டை மண்டலசதகத்தும் பிறவிடங்களிலும் கூறப்பட்டிருக்கின்றது.

**142.** உணங்குதல் - உலருதல்,வருந்துதல். தினை செந்நெல்களை விளைத்தவர் முற்றங்களில் அவை உலருதல்போல, அச்சுதன் முற்றத்தில் அரசுலரும் (வருந்தும்) என்க.

**144.** நிறையறு திங்கள்—நிறைந்த ஆறுமாதம். 'இறை' என்று பாடமாயின் வாசமாக எனப் பொருள் கொள்க. இராமவிறை என்று பாடமோதுவாரு முளர். வாலிக்கிளையோன் வரை—சுக்ரீவன் தங்கிய ரிசியமுக பர்வதம். (குறிப்பு) மேற்குறித்த பாண்டியன் பாட்டில், தன்னை ராமனாகவும் அச்சுதனைச் சுக்ரீவனாகவும் வைத்துத் தாழ்த்தினமையே ஒரு விலங்குகூட இட்டதற்குக் காரணமெனை அறிக.

146. புறநானூறு—74. "சேரமான்கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு போர்ப்புறத்துப்பொருது பற்றுக் கோட் பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்று அந் நூலில் குறிப் புக் காணப்படுகின்றது: இந்நூலிற் கண்ட குறிப்பிற்கு முன்னூ லாதாரம் காணப்படவில்லை.

147. மருதனார் என்றபுலவர், இந்நெடுஞ்செழியனை மதுரைக் காஞ்சியாற்புகழ்ந்தவர்.

148. இக்கதையைத் **தொண்டமண்டல சதகத்தில்,** "பா கொன்று சொல்லியைப் பார்த்தமை யாலன்று பாண்டியன்முன் - நோகின்ற சிற்றிடை வேழம்பக் கூத்தி நொடிவரையிற் - சாகின்ற போது தமிழ்சே ரயின்றைச் சடையன்றன்மேல் - மாகுன் றெனச் சொன்ன பாமாலை யுந்தொண்டை மண்டலமே" என்னும் செய்யு ளாலும் அறிக. புழற்கோட்டம் - தொண்டைமண்டலத்து 24-கோட்டங்களுள் ஒன்று; சென்னை இக்கோட்டத்தைச் சார்ந்தது; இக்கோட்டத்துள்ள தோர் ஏரி 'புழலேரி' என இன்றும் வழங்குவது காண்க. 'பாகொன்று சொல்லியை' 'புழற்கோட்டம் புகுதவி ரேல்' என்பன பாடங்கள்.

149. இக்குறிப்பால், பாண்டியன் விடுத்த வேவுகாரர் அயுன் றைச் சடையினிடம் யாசகத்துக்குச் சென்று, கர்ப்பிணியாயிருந்த அவன் மனைவி முதுகில் வடித்த சுடுசோற்றைப் படைக்கும்படி யாசிக்க அவன் அப்படியே செய்தானென்றும், அஃதறிந்து பாண் டியன் 'இரவலாளரே' என்ற அகவலை அவன் விஷயமாகப் பாடி னான் என்றும் புலப்படுகின்றன. "சூலி முதுகிற் சுடச்சுடவப் போது சமை—பாலடிசி றன்னைப் படைக்குங்கை" என்றார் **திருக்கை வழக்கமுடையாரும்**. 'உறுதியுள்ளீரே' என்றும் பாடம்.

150. இப்பாட்டின் முதலடி, புகழேந்திப்புலவர், செஞ்சிக் கொற்றந்தை பேரிற் பாடிய கலம்பகத்துள், "நையும்படியே நாந் கொற்ற நங்கோன்செஞ்சி வரைமீதே—வையம்பெறுதுண் ணிடை

மடவார் யகிலின் றூப முகிலன் று - பெய்யுந் துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது - வையம்பெறினும் பொய்யுரைக்கமாட் டார் தொண்டை நாட்டாரே" என்றபாடலுட் பயில்வதுகாண்க. (தொண்டைமண்டலசதகம் "காரார்களங்கை" என்ற பாடன்மேற் கோள்.)

151. சகவருடம்1433 - ல் சந்திரகிரியாண்ட கிருஷ்ணராயர் மந்திரியாக விளங்கிய - அம்பி அறம்வளர்த்த முதலியார் என்பவர் ஒருவர் உளர் (அபிதான சிந்தாமணி). இப்பாட்டின் இரண்டாமடி சிதைவுற்றுளது.

153. இப்பாட்டிற்கண்ட வரதுங்கராமர் பிற்காலத்தில் தென் காசியாண்ட பாண்டியருள் ஒருவர். நைடதம் பாடிய அதிவீர ராம பாண்டியரது சகோதரரென்பர். இவர் பாடிய நூல்கள், பிர மோத்தர காண்டம், கூர்மபுராணம், கருவையந்தாதி என்பனவாம். காசிநாடு - தென்காசிநாடு. இப்பாண்டியன் மனைவிவாக்காக வேறு சில பாடல்களும் வழங்குகின்றன.

156. இக்கதையை, "நினையுங்கழற்காற் சிலம்பலம்ப நின்ற பெருமா னிலைநாடிப் - பனையின்கிழங்கு பிளந்ததன்ன பவளக்கூர் வாய்நாரையென்றே-புனையுமுதனூற் சத்திமுற்றப் புலவனமுது பொ சிந்தூர - வனையுமதுரத் தமிழ்வாடை மணக்குஞ்சோழ மண்டலமே" என்னுஞ் செய்யுளினுங்காண்க. இப்பாடலுள், 'நீயுநின்மனைவியும்' 'பாடுபார்த்திருக்குமனைவி' 'பேழையுளிருக்கும்பாம்பென' என்பன பாடபேதங்கள்.

157. பாவியேன் - இரக்கச்சொல். குடைவேல் - குடை போற் கவிந்த வேலாமரக்காடு.

158. மேல் உயர் ஓர் கான் ஓடினான்; பழியை அவன் குடை யாக மேலோர் பாடினார் என்க.

164. இது ஔவைவாக்காகப் பயில்கின்றது.

165. இவர் குகை நமச்சிவாயருடைய மாணக்கர். சிதம் பரத்தில் அநேகந்திருப்பணி செய்தவர். பல அற்புதச் செயல்களு டையவர். திருப்பெருந்துறையில் ஈசுவரவருஷம் வைகாசிமாதம்

சித்தியடைந்தவர். இவர் செய்த நூல்கள் பரமரகசியமாலை, சிதம்பரவெண்பா, அண்ணாமலைவெண்பா முதலியனவாம். காலந்தெரியவில்லை. சாளுவவேங்கடபதிமஹாராயர் (1508 – 1535 கி. பி) காலத்தில் சக வரு 1514, நந்தன வரு தைமீ 6உ சிதம்பரம் குருநமசிவாய மூர்த்தி அடியார் ஆனந்த நமச்சிவாய பண்டாரத்துக்கு மடங்கட்ட நிலமுதலிய தர்மங்களை வேலூர் மாயநாயக்க ரளித்ததாக ஒரு சாஸனங்கூறுகிறது; அதாவது, இற்றை 322-வருஷமாகிறது. (South Indian Inscriptions. Vol. I. P. 85)

166. இவ்வாணன், மகதநாடென்று வழங்கும் நடுநாட்டிலிருந்து ஆண்டவர்களாகிய மாவலிவாணர் வமிசத்தைச் சேர்ந்தவன். 'ஆறையர் கோன்' 'மகதேசன் ஆறைகாவலன் வாணபூபதி" (தனிப்பாடல்) என்னுந் தொடர்களால், இவன் தலைநகர் ஆறைநகர் என்பது விளங்கும். இவன், பெருவீரனென்றும் புலவரபிமானி என்றும் தெரிகின்றன.

168, 170. சேரசோழர்களை அடக்கிய வாணன் பாண்டியனையடக்கமுடியாமல் தாசிகள் நால்வரை அனுப்பி அவனையடக்கிவரச் சூழ்ச்சி செய்தானென்றும், அப்பாண்டியன் "சீவலமாறன்" "வீரமாறன்" என்ற பெயர்கள் தரித்துத் திருநெல்வேலிப் பிரதேசத்தையாண்டவனென்றும் தெரிகின்றன. சீவலமாறன் ஆகிய வீரமாறன் சகவருஷம் 1486-ல் முடிசூட்டப் பெற்றவனென்பது "சகன்கால மாயிரத்து நானூற்றெண் பத்தாறிற் சலதி சூழ்ந்த – செகங்காண விரத்தாக்ஷி சித்திரையி லிருபதாந்தேதி வேந்தர் – புகழ்ந்தேவல் செய்பூர்வ திதியாறில் முதல் வாரம் புனர்பூசத்தில் – சுகந்தாதி புனையழகன் சீவலவே ளௌமகுடஞ் சூடினானே" என்னும் சாஸனப்பாடலாலும், இவனுக்கே வீரமாறனென்ற பெயருமுண்டென்பது 'வீரமாறன் செழியன்" என்னும் மற்றொருவெண்பாவில் வருவதாலும் தெளிவாகின்றன. ஆகவே, இன்றைக்கு 340 – ம்வருஷங்கட்குமுன் விளங்கிய சீவலமாறன் காலத்தவனே ஏகம்பவாணன் என்பதும், இவனைக் கம்பர் காலத்தவனாகக் கொண்டு பிற்காலத்தார்கூறுங் கதைகளெல்லாம் உண்மையுடையனவல்லவென்பதும் அறியத்தக்கன.

170. பாண்டியன் வேம்பைக் கைவிடாமைக்கு, வானுருகிய அலகை வரும் என்றஞ்சியதே காரணம் என்பது கருத்து.

172. முனையதரையர் என்பவர் சோழனது படைத்தலைவருள் ஒருவர். இவர் திருக்கண்ணபுரத்தில் அரசனது தண்டத்தலைவராயிருந்து, திருமாலடிமையிற் சிறந்து வாழுங் காலத்தில், கணிகையொருத்திபாற் காதல்கொண்டு அவளின்பத்தில் மூழ்கினர். அக்காலத்துப் பெரும் பஞ்சமொன்று நேர, உயிர்களெல்லாம் வருந்துவது கண்டு சகியாது, அரசனது இறைப்பொருள்களை தானதர்மங்களிற் செலவிட்டனர். பின்பு, நாடு செழித்தபின், அரசனுக்கு இறுக்க வேண்டியதைச் செலுத்தவியலாமையால், சோழன் சினங்கொண்டு இவரைச் சிறைப்படுத்தினன். முனையரது காதற்கணிகை தன் காதலர்க்கு நேர்ந்த துன்பத்துக் காற்றாது திருமாலை நோக்கி ஓலமிட்டழுது, "இன்னும் ஐந்துநாளில் என் காதலரை யானடையாவிடில் எரியில் மூழ்கியிறப்பேன்" என்று விரதம்பூண்டு ஊணுறக்கமின்றியிருந்தனள். இவ்வாறாக, திருக்கண்ணப்புரத்துத் திருமால், சோழன் கனவிடைத்தோன்றி, நிகழும் விஷயங்களைக்கூறி முனையரைச் சிறைநீக்குமாறு கட்டளையிட்டுச்செல்லச் சோழன் திருமால் பத்தியிற் சிறந்த அவரைச் சிறைநீக்கி மன்னிப்புக்கொண்டு, 'உம்முடைய காதற் கணிகை தீப்பாயுமுன் அவளிடம் விரைந்து செல்லுதிர்' என்று அனுப்பினன். ஐந்தாநாள் தீப்பாயச்சித்தமாயிருந்த அக்கணிகை தன் கணவருக்கு இறுதியாக எழுதிய பாட்டிது என அறிக. இவளுயிர் நீங்குந் தருணம், சோழனால் அனுப்பப்பட்ட முனையர் தம் காதலியைக்கண்டு மகிழ்ந்து அவளுடன் திருமாளிகை புகுந்தனர். அப்போது நெடுநாள் தக்கவுணவின்றிச் சிறையில் வருந்திய தன் காதலர்க்குக் கணிகை, பால் அரிசி பயறு நெய் சர்க்கரை கலந்தட்ட பொங்கலன்னத்தையாக்கிப் பணிமாற, அது அமிர்தமயமாயிருந்தமையால், 'எம்பெருமான் சவரிராசர்க்கே இது ஏற்றது' என்று உள்ளன்புடனேதி உண்டனர் என்றும், மறுநாள் அருச்சகர் திருக்காப்பு நீக்கிப் பெருமாள் திருமேனியை நோக்கியபோது, நெய்யுடையடிசில் வழிந்திருப்பது கண்டு, அதனை விசாரிக்க முனையதரையர் அன்றிரவு உண்ட பொங்கலைப் பெருமாளுக்கு அர்ப்பித்

தந்தே காரணமென்று தெரிந்து வியந்தனர் என்றும், தம்பொருட்டு எம்பெருமான் இத்தகைய திருவிளையாட்டை நிகழ்த்தியமையால், அன்று அர்ப்பித்த பொங்கலமுது திருக்கண்ணபுரம் சவுரிராஜப்பெருமாளுக்கு என்றும் நிகழ்ந்துவருமாறு முனையர் திட்டஞ்செய்தனர் என்றும், அக்காலமுதல் இன்றுவரை அப்பொங்கலமுது, **"முனையோதனம்"** என்ற பெயர்பெற்று, திருக்கண்ணபுரத்தில் பிரபலமாக நடந்துவருகின்றதென்றுங்கூறுவர். இவ்வரலாற்றையே, **சோழமண்டல சதகமுடையாரும்** "புனையுங்குழலாள் பரிந்தளித்த பொங்கலமுதும் பொரிக்கறியு - மனையசவுரி ராஜருக்கே யாமென்றருந்து மாதரவின் - முனையதரையன் பொங்கலென்று முகுந்தற்கோது முதுகீர்த்தி - வனையும்பெருமை யெப்போதும் வளஞ்சேர் சோழ மண்டலமே" என்று கூறுவாராயினர். இக்கதை, திருக்கண்ணபுரமான்மியத்துக் கூறப்பட்டுளது.

173. ஓது அகத்தார் - ஓதுகின்ற உள்ளமே இடமாகக்கொண்டார்.

175. சிவந்தான் என்ற பிரபுவின் **'கோடை'** என்ற ஊரிலுள்ள அன்னம்போன்ற நடைச்சி என்க.

176. உத்தரநல்லூர் நங்கை இன்னாள் என்றேனும், இவட்குப் பிராமணரிடத்து வெறுப்புவந்ததற்குக் காரணமின்னதென்றேனும் விளங்கவில்லை. "பாச்சலூர்ப்பதிகம்" என்ற பதிகமொன்று அச்சிடப்பட்டுள்ளது. இதன் பாடல்கள் முழுதும் "பாச்சலூர்க் கிராமத்தாரே" என்றதொடரே இறுதியிற்பயில்கின்றது. அப்பதிகத்துள், சில பாடபேதங்களுடன் 9 - ம் பாட்டாக இச்செய்யுள் காணப்படுகிறது.

178. 'திண்ணையுங்கெண்டை புரட்டும்' என்றது, புங்கனூர்க் கிழவனடத்திய கல்யாணத்தில், பசியாற்சிலர் வருந்தியதைக் குறிப்பதுபோலும். இப்பாடல்கேட்டுப் பிராணத்தியாகம் பண்ணினான் என்ற கீழ்க்குறிப்பாலும் இப்பொருள் உய்த்துணரப் படுகிறது. **சோழமண்டலசதகமுடையாரும்**—"அறங்கூர் பெரியோர் மாசுவரி லாற்றூரம்மே யமைகவினிக்—கறங்கூர் கெண்டை புரட்டு

மெனக் கலியாணத்திற் கவிகேட்டுப்-புறங்கூர்பவளக் கடல் முழு கும் பொன்னங்கலத்திற் புடைசோர்ந்த-மறங்கூர்புங்க னூர்கிழவன் வளஞ்சேர்சோழ மண்டலமே" எனப்பாடுதல் காண்க. 'பண்ணை யுஞ்சேலு களும்வாவி யோகயல் பாயும்' என்றும் பாடம்.

179. இது சத்திமுற்றப்புலவர் தம்மையறியாமலே தம் மூரிற் பாண்டியன் செய்த பெருவரிசைகளைக்கண்டபின் பாடிய தாக வழங்குவராயினும், முன் குறித்த (156) சத்திமுற்றப்புலவர் வரலாற்றோடு சேரக்காணமையாலும், இதன்கீழ்க்குறிப்பாலும் வேறொருபுலவர் குடிதாங்கி என்பவனைப்பாடியதாகவே தோற்று கிறது. **சோழமண்டலசதகமுடையாரும்,** சத்தி முற்றப்புலவர் வரலாறு கூறுமிடத்தன்றி வேறாகவைத்து "உலகிலிலமென் றுரை யாம லுதவல்குலத்தோர்க் குளதாமே - யிலகுமெறும்புக் காற் புதம்வே றில்லையெனயா வதுமீந்தான்-புலவன்மகிழ்ந்து பிறபாதி புகலக்கேட்ட புகழாளன்-மலைகொள் புயத்துக் குடிதாங்கி வளஞ் சேர் சோழமண்டலமே" எனப்பாடுதலுங்காண்க. 'கின்னை சோர வும் வீடுமன்றி' 'ஆற்பதமில்லை முன்னாள்' 'இருங்கலியைக் குறும் பைத்தவிர்த்த' என்பன பாடபேதங்கள்.

181. அரவின் மணியைப் புலவர்க்களித்தவன் **சாலைவண் ணன்** என்பவனென்று இதனால் தெரிவதால், காளத்தி முதலி யார்க்கு இக்கதை கூறுவது, முற்காலவழக்கில்லைப்போலும்.

182. இக்கதை, "நேயத் துடன்பிறந் தோன்பிண மூடி நெருப்பவித்துத்-தாயொப் பெனவெதிர் கொண்டழைத்தே தன் னுடனெனவே - யாயத் தமிழ்கொண் டருங்கவி ராயனுக் கன்பு செய்த - வாயற் பதியில் வடுகனும் வாழ்தொண்டை மண்டலமே" என்னுஞ் செய்யுளாலுமுணர்க. 'சகோதரத் தம்பியையும்' 'சேர் மனு மோவிணை யாகக் கழறுவதே' என்பன பாடங்கள்.

183. இக்கதையை, "வில்லைச் செருப்பிட்ட காலாலுதைத்து வியனுலகிற் - சொல்லற் கரிய புகழ்கொடுத் தோன்றுட்ட வீரன் றன்றூற் - பல்லக்கி லேயன்றி மண்படு மோவெனும் பாடல் கொண்ட - வல்லைப் பதிக்கச்சி யப்பனும் வாழ்தொண்டை மண்

டலமே'' என்னுஞ் செய்யுளாலும் அறிக. இங்ஙனம் உதைத்த புலவன் பெயர் "துட்டவீரன்" என்பது இப்பாட்டாற் பெறப்படுகின்றது. 'கண்படுமோ வன்பாகக் கற்றவர்க்கு—மண் புகழ—மெச்சியப்பா லும்புகழும் வீறுவல்லை யாளவந்த" என்றும் பாடம்.

186—187. அம்மைச்சி என்பவள் ஒரு பெண் புலவரென்றும் கச்சிவரதராஜப்பெருமாள் தேர் செல்வதற்குத் தடையாயிருந்த இவள் வீட்டை இடிப்பதற்குத் திரண்டுவந்த பிராமணரை நோக்கி புலவர் இக்கவிகள் பாடவும், தேர் நகர்ந்து வீட்டையிடியாமலே சென்றுவிட்டதென்றுங் கூறுவர். இரண்டாம் வெண்பாவை, அந்தகக்கவி வீரராகவ முதலியார் வாக்காகச் சில பாடபேதங்களுடன் பிற்காலத்தார் வழங்கினர்.

188. "தன் மாமன் வந்து பிறந்திறக்கும் வண்மையினன்—முந்தொருநாள்—வீணிக்கு வேளை யெரித்தான் மகன்" என்பது பிற்காலப்பாடம்.

189. கடையடியைக் கொடுத்துப்பாடச் சொல்ல, புலவர் அதனைச் சமர்த்தித்தனரென்க. பிறவும் இவ்வாறே கொள்க. புலிக்குட்டி—வியாக்ரபாதர் புத்திரராகிய உபமந்யு. இவர்க்குச் சிவபிரான் குழவிப்பருவத்தில் திருப்பாற் கடலை உணவாக அளித்த கதை பிரசித்தம்.

191. ஏழெழுபேர்—சங்கத்தார் நாற்பத்தொன்பதின்மர்.

193. உடுத்த ஆடை பல துளைக்கண்களுள்ளன என்பது தோன்ற இந்திரனைக் கலையாயென்றும், பசி வயிற்றை விட்டொழியவில்லை யென்பார் அக்கினி உதரம் விட்டகலானென்றும், துக்கத்தால் வரும்நீர் கண்களை விட்டொழிந்திலதென்பார் 'வருணன் இருகண் விட்டகலான்" என்றும், வாயுவே தங்களுக்கு ஆகாரமென்பார், அநிலமதாகுமமுது என்றும், இவ்வாறு அஷ்டதிக்பாலரும் தம் வசமாயிருத்தலின் 'ஆறெனை உலகினிலொப்பார்' என்றும் கூறினர். இப்பாட்டுள் காளமேகப்புலவரை ஆதரித்த திருமலைராயன் தந்தை **சாளுவ கோப்பயன்** என்று கூறப்படுதல் அறியத்தக்கது. சாஸனங்களிலும்; விஜயநகரவரசர் தேவராயர் (II) காலத்தில்

(1423—1446. கி. பி.) தென்னாட்டில் அவர் பிரதிநிதியாக சாளுவ கோபருடைய மகன் திப்பர் (திருமலை என்பதின் திரிபு) என்பவர் ஆண்டனரென்பர் (Ep. Rep. 694 of 1905) கல்யாணி - சாளுவ வரசரது பூர்வகுடிப்பெயரும், விதரணராமன் - அவர்க்கு வழங்கியப்பட்ட பெயருமாகச் சாஸனங்களிற் காணப்படுகின்றன. (கல்யாணி - பம்பாய்க்கு அடுத்துள்ள ரயில்வே ஜங்ஷன்) பிற்காலத்தார் இக்கவியைச் சொக்கநாதப்புலவரதாகப் பாடபேதங்களுடன் பொருத்தமின்றி அச்சிட்டனர்.

194. அதிமதுரக் கவிராசன் ஊர், திருக்கோவலூர் என்பது இப்பாட்டாற் புலப்படுகின்றது. தனிச்சீரிலிருந்து பாடல் சிதைந்து காணப்படுகிறது.

195. தேவரகண்டர் - திருவாரூர்த் தியாகராஜர் திருநாமங்களுள் ஒன்று. "தேவரகண்டப் பெருமா டியாகப் பெருமாள்" என்றார் கவிவீரராகவரும் (திருவாரூருலா. 28)

196. இதனை இரட்டையர் வாக்காகப் பிற்காலத்தார் மாறிக் கொண்டனர். மண் தின்ற பாணம் - திருமால்.

197. கரும்புரத்தார்—நரகலோக வாசிகள்; பாபிகளென்றபடி. கரும்புரத்தார்க்கு அரசும் அரணும் ஆகிய என்றும், கரும்புரத்தார்க்கெல்லாம் அரசு (மகாபாவி) அரணு? என்றும் பிரித்துப் பொருள்கொள்ளலாம். கரசரணு - கைகால்களுடையவனே! வெறும் உருவினனென்றபடிபோலும்.

198. தெண்டி, காளமேகத்துக்கு மிகப்பிரியமாயிருந்த ஒரு தாசி. காளமேகப் புலவர்க்கு இயற்பெயர் வரதன் என்பது இப்பாட்டால் விளங்கும். இவர் சாவைப்பற்றி அதிமதுரக்கவிராயர் பாடிய கையறத்திலும் "வாசவயல் நந்தி வரதா" என்று, இவ்வியற்பெயர் வழங்குதலாலும் இது தெளியப்படுகின்றது. காளமேகம் என்பது இவர்க்கு வழங்கிய சிறப்புப்பெயரென்க.

201. பலசரக்குக் கடைவைத்துச் சீவனஞ்செய்யும் ஆலைப்பதிப் பெற்றான் என்ற ஒரு வணிகன் காளமேகப்புலவரால் பாடல் பெறப் பலவாறு முயன்றும், மன்னரைப்பாடிவரும் அப்புலவர் அவ்வேழை வணிகன் விருப்பத்தை நிறைவேற்றவில்லை. அவ்வணிகனே

இவரால் எப்படியும் பாட்டுப்பெறவிரும்பி, அப்புலவர் மிகக் காதலித்திருந்த அவ்வூர்த்தாசி தனக்கு வேண்டிய வளாதலால் அவளிடந்தன் கருத்தைக்கூறி நிறைவேற்ற வேண்டினர். அவளும் சம்மதித்து, அன்றிரவில் அவ்வணிகனைக் கடைமூடாது காத்திருக்கக் கற்பித்து அனுப்பினள். புலவர், அத்தாசி வீட்டுக்கு வழக்கம்போல் நிசியில்வர, அவள் பலநோய்களால் வருந்துவதுபோலப் பாசாங்கு செய்ததுகண்டு, புலவர் உண்மையெனநம்பி, "'என்ன பரிகாரஞ் செய்யவேண்டும்' எனவினவ, அத்தாசி சில மருந்துச் சரக்குகளைச் சொல்லி, அவற்றை உடனே வாங்கிவரச் சொன்னாள். புலவர் உடனே விரைந்துசென்று, கடைத்தெருவெல்லாம் அந்நிசியில் மூடியிருப்பினும், ஒருகடைமட்டுந் திறந்திருக்கக்கண்டு, அக்கடைக்குச் செல்ல, அக்கடைவியாபாரி தன்னால் அலக்ஷியஞ் செய்யப்பட்ட வணிகனாயிருந்தான். ஆயினும், புலவர் அவனை மருந்துச்சரக்குக் கொடுக்குமாறு கேட்க, அவன் 'நான் இப்போது கடையடைக்கப் போவதால், கொடுக்க முடியாது; மன்னரையேபாடும் நீர் அவரைத் தேடிப்போம்' என்றான். அவன் குறிப்பறிந்து, புலவர் அவ்வணிகன்மேல் இச்செய்யுளையும், பாலனைப் பழித்தற்றுறையில் "கஞ்ச முகையுங் களிற்றின் யின்கொம்பு—மஞ்சுமுலை நாலுமுலையானதுவும்—மிஞ்சுபுகழ் பெற்றான்றன் மாலை பிறர்க்களித்த துங்குதலை - கற்றான் பிறந்தபின்பு காண்" என்ற பாடலையும் பாடி அவனை உவப்பித்து அவன்கருத்தை நிறைவேற்றினர் என்பர்.

**209.** இதனை இரட்டையர்வாக்காகப் பிற்காலத்தார் மாறுகக் கொண்டனர். இச்செய்யுளால், காளமேகப் புலவரூர் **நந்தி** என்பது விளங்கும். இது, நந்திபுரவிண்ணகரம் என்னும் விஷ்ணுஸ்தலம்போலும். இத்தலம், கும்பகோணத்துக்குத் தென்மேற்கே 3-மைலில் உள்ளது. வரதனென்பது, காளமேகத்தின் இயற்பெயரென்பது முன்னரும் (198) குறிக்கப்பட்டது. இவர் பெயரும் ஊரும், இவர்முன்பு வைஷ்ணவராயிருந்தனரென்பதைக் குறிக்கின்றன. பிற்காலப்பாடம் பிறழ்ந்துளது.

**210.** விஜயநகர அரசர் கிருஷ்ணதேவராயர் (கி. பி. 1509—1530) ஒட்டரதேசத்தைக் கடகநகரிலிருந்தாண்ட கஜபதி வும்சத்த

வனை வீரருத்ரனை சுமார் 1520-ல் வென்று, அவன் மகள் ஸ்ரீக் காவை மணம்புரிந்தகாலத்தில் இப்பாட்டு பாடப்பட்டதாகும். ஒட்டியன் - ஒட்டரதேசத்தரசன். இப்பாடலில், ஒட்டியனைப் போல், அவன் பெண்ணும், கலிங்கம், கடகமுதலியவற்றைத் தோற்றாள் என ஒருகுறிப்புத் தோன்றுதல் அறியத்தக்கது. பெரான் இட்டமான - திருமகள் விரும்பத்தக்க. இப்பாடலாலும் கிருஷ்ண தேவ ராயரைப்பற்றிய மற்றப்பாடல்களாலும், அம்மன்னர் பெருந்தகை, தமிழ்க் கவிகளையும் மிக அபிமானித்து வந்தவரென்பது நன்கு விளங்கும்.

211. கூத்தாடி லஞ்சக் கொடுக்கா - கூத்தாடும் தேவடியாள் மகனே. பொட்டி - ஓர் இழிவான தெலுங்கு வசை. அம்பி நகர் - ஹம்பி (Hampi) என்ற இராயர்களுடைய ராஜதானி; பல்லாரிஜில்லாவிலுளது.

212. "பங்குனியுத்ஸவத்தில் ஆழித்தேரினின்றும் இறங்கிய பின்பு, ஸ்வாமி, திருவாரூரிலிருந்து பலிபுலத்துக்கு மேற்கேயிருக்கும் வேலங்குடியிலுள்ள மண்டபத்திற்கு எழுந்தருளி, அதற்கு எதிர்த் தோட்டத்திலுள்ள பாகற் கொடிகளை அறுத்தருள்வது தொன்மையான வழக்கமென்று தெரிகின்றது. இது பாகல் வேட்டையென்று வழங்கும். இவ்வெண்பாவும், "ஆடாது மாடிப் பாகற் கொடியறுத்தார்" என்று வழங்கும் பழமொழியும் இதனை வலியுறுத்தும்" என்று, மஹாமஹோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ சாமிநாத ஐயரவர்கள் எழுதிய குறிப்பு இங்கே நோக்கற்பாலது. (திருவாரூருலா, அரும்பதவுரை, பக். 51). "தியாகக் கொடியே தனிவளரச் செய்தொருநாட்—பாகற் கொடியே பலவறுப்பான்" என்ற அந்தகக் கவிவீரராகவர் வாக்கும் அறியத்தக்கது (திருவாரூருலா. 421) இப்பாட்டில்வரும், வடமலையார் என்பவர், கிருஷ்ண தேவராயருடைய மஹாமதி மந்திரியாகிய திம்மப்பர் (திருமலையப்பர்) என்று உய்த்துணரப்படுகிறது.

213. ஆழிசிறந்ததேர் - 'ஆழித்தேர்' என்பது திருவாரூர்த்தேர்க்குப்பெயர். கிருஷ்ணதேவராயர் பட்டத்துக்கு வருவதற்குமுன்,

இராயர்க்குப் பகைவர்களான ஒட்டியரும் துலுக்கரும் சேர்ந்து பிரவேசித்துத் தென்னாட்டையழித்தசெய்தி சாஸனங்களாலும் கோயிலொழுகு முதலிய நூல்களாலும் தெரியவருகிறது.

215. சாளுவநாயகர், இராயர்களுடைய பிரதிநிதியாய்த் தென்னாட்டை ஆண்டவர். இம்மடி நரசிம்மன் என்றும் வழங்கப்படுவர். பிரான்மலை முதலியவற்றிற் கண்ட இவர் சாஸனங்களால் சக-1422-(கி. பி. 1500) இவர் காலமென்று தெரிகிறது. (Ep. Rep. 134, 151, of 1903) அச்சுத தேவராயரால், இவர் செய்த அக்ரமத்தால், கொல்லப்பட்டார்.

217. இதனைப் படிக்காசுப் புலவரதென்றும், காளிமுத்துப் புலவரதென்றும் பிற்காலத்தார் பாடபேதங்களுடன் கொண்டனர்.

219. கூத்தனூரப்பன் கவி பால், வாலகோகிலங்கவி பாலுக்கிடு சர்க்கரை, எங்கள் கவி உப்பொடுகாயமென்க.

225. இவர், சேறைக் கவிராசபிள்ளை, வண்ணக்களஞ்சியம் என்றும் வழங்கப்படுவர். செங்குந்தர் மரபினரான திருக்காளத்தி-வேங்கடாசல முதலியார் என்ற பிரபுவின் அருமைப்புலவராயிருந்தவர். அவராலும் பிறகொடையாளிகளாலும் பல்லக்கு முதலியவரிசைகள் பெற்றவர். அந்தகக்கவி வீரராகவ முதலியார் தம் சேயூர் முருகன் பிள்ளைத்தமிழில் இப்புலவர் செய்த சேயூர் முருகனுலாவைப் பாராட்டி "கவிராச னிப்பிரான் மிசைசெய்த திருவுலாக் கலிவெள்ளை கற்றருகலாம்" (அம்புலி. 10) என்று பாராட்டி யிருத்தலாலும், இந்நூலில், இப்புலவரையடுத்தே அந்தகக்கவியின் வரலாறு காணப்படுவதாலும், இக்கவிராசர், வீரராகவமுதலியார்க்கு முற்பட்டவரென்பது விளங்குகிறது. திருவண்ணாமலைநாதர்மீது வண்ணம் பாடிக்கொண்டு, அரங்கேற்றுதற்கு அத்தலம் செல்ல, இவர் வருகையறிந்த அவ்வூர் உண்ணாமுலை எல்லப்ப நயினார் என்ற புலவர் ஒதுங்கிமறைந்தனரென்றும், பரமேசுவரப் புலவர் அதனையறிந்து அந்நயினாரை இகழ்ந்தாரென்றும் பின்வரும் பாடல்களால் புலப்படுகின்றன. தென்காசியாண்ட சீவல்லமாறன் காலத்தவர் இவரென்பது 'தென்பாராளும்' என்ற பாட்டால் வெளி

யாம். இச்சீவிவிமாறன் சகாப்தம் 1486-ல் (கி. பி. 1564) பட்டமெய்தியவன். இவரியற்றிய நூல்கள்:—திருக்காளத்தி நாதருலா, தெடியார் கட்டளைக்கலித்துறைமாலை, சேயூர் முருகனுலா, திருவாட்போக்கி நாதருலா, திருவண்ணாமலையார் வண்ணம் என்பன. இவற்றுள் திருக்காளத்திநாதருலா, மஹாமஹோபாத்யாய பிரம்மஸ்ரீ சாமிநாத ஐயரவர்களால், பதிப்பிக்கப்பட்டுளது. இப்புலவரது விசேடங்களை, ஐயரவர்கள் அப்பதிப்பில் எழுதிய "நூலாசிரியர் வரலாறு" என்பதிற் கண்டுகளிக்கலாம்.

229. இதன் குறிப்பால், கந்தபுராணம் பாடின கச்சியப்பரும் கவிவீரராகவரும் சமகாலத்தவரென்ற அரியவிஷயம் புலப்படும். பூதூர் என்பது, பொன்விளைந்த களத்தூருக்கு அடுத்துள்ளது: இதுபற்றி அக்களத்தூரையும் இவரூராகக் கூறுவர். இப்பாட்டால், இவர் தந்தை பெயர் வடுகன் (வடுகநாதமுதலியார்) என்பதும், காஞ்சிபுரத்தில் கல்வியயின்றவரென்பதும் விளங்கும். "கவிவீரராகவன் கச்சியிலே - தன்னெஞ்சமேடெனக்கற்றான்கன் முத்தமிழையுமே" எனப் பின்வருவதுங் காண்க. பிறவிக்குருடரானமை பற்றி இவர் 'அந்தகக்கவி' எனவிசேடிக்கப்படுவர்.

230. இப்பரராச சிங்கம் அல்லது பரராசசேகரன் யாழ்ப்பாணத்தையாண்ட அரசன் என்றும், 16-ம் நூற்றாண்டினனெனவும் கூறுவர். பொற்பந்தம் - பொன் தீவட்டி. இவனால், யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்து, தம்மனைவியின் கருத்தை நிறைவேற்றி மகிழ்வித்தனரென்று பற்பல கதைகளுடன் கூறுவர். "யாழ்ப்பாணவைபவமாலை"யில், அந்தகக்கவி வந்து பரிசுபெற்ற விஷயம் காணப்படுகிறது. (செந்தமிழ். தொகுதி-11-பக். 152).

235. குமார-ஒப்பிலாதான் என்பவன், முற்கூறிய அரியலூர் மழவராயன் மகனென்று புலப்படுகிறது. அரியலூர் - திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள ஒரு ஜமீன். இச்சமீன் தலைவர்கள், பழைமையாகவே, தமிழபிமானிகள்.

238. 'ஏடாயிரங் கோடி யெழுதாது தன்மனத் தெழுதிப்படித்த விரகன்' என்றும், பாடம். கந்தருவம்-இசை, குதிரை.

கந்துகம்-பந்து, குதிரை. கோணம் - வளைவு, குதிரை. கொக்கு-ஒரு பறவை, குதிரை. கோடை - வேனிற்காலம், குதிரை. குந்தம்-சூலம், குதிரை. பாடலம் - பாதிரிப்பூ, குதிரை. மா-மாமரம், குதிரை. சடிலம்-சடை, குதிரை. கிள்ளை-கிளி, குதிரை. இப்பதங்கள் தத்தம் அடைமொழிகளால், முன்னைய பொருள் நீங்க பின்னதாகிய குதிரைக்கு வெளிப்படை ஆயின.

241. திம்மையவப்பய்யர் என்பவர். 1509-முதல் 1530-வரை விஜயநகர ராஜ்யத்தை ஆண்ட கிருஷ்ணதேவராயர் மந்திரி திம்மராஜா அப்பாஜியாயிருக்கலாமென்றும் (செந்தமிழ். தொகுதி 11-பக்-154) 1680-ம் வருஷம் செங்கற்பட்டில் விளங்கிய திம்மய நாயக்கரா யிருக்கலாமென்றும் கருதுவர். பிற்கூறியது பொருந்தும். (சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ். நூலாசிரியர் வரலாறு.)

242. சிலர் தீட்டுக்கவி வேந்தர் வமிசத்துக்கு அழிவைப் பயக்கும் என்பது கருத்து.

243. இது, மஹாமஹோபாத்யாயர் சாமிநாதஐயர்வர்களால், செந்தமிழ்ப்பத்திரிகை மூலம் குறிப்புரையுடன் வெளிவந்துளது.

245. இப்பாட்டால், புலவர் சிவிகையின் பின் வந்த விசயராசன் பிராமணனென்பது விளங்கும்.

246. மிசையில்—ஜன்மாந்தரத்தில்.

247. இப்பாட்டின் மூன்றுமடிமுதல் சிதைந்துளது.

254. ஒருமணிகொண்ட கொடி (காகம்) தடுத்தாற் போகாதவர், இரண்டுமணி கொண்ட கொடி தடுத்தால் போவரோ எ - று. கொடி - காக்கை, பெண்.

[அநுபந்தம்.]

1. இதுமுதல் 'கருணையால்' என்பது வரையுள்ள பாடல் ஔவையார் வாக்காம். 'பாரிமகள் அங்கவை' யைத் திருக்கோவலூர் மலையமானாகிய தெய்வீகனுக்கு மணம் பேசித் தம் தெய்வத்தன்மையால் அத்திருமணத்திற்கு வேண்டுவனவெல்லாம் உண்டாக்கி, மூவேந்தர்க்கும் பாரிகுடிக்குமிருந்த பகைமையும் போக்கி அம்மூ

வரையும் டீ மணத்திற்கு வரும்படி செய்து, விவாகத்தை விமரிசையாக நிறைவேற்றிய விஷயங்கள் அறியப்படும், இச்சரித்திர விரிவை, வேளிர் வரலாறு, பாரி என்ற பகுதியுட் காணலாம்.

2. 'சங்கவையுங் கூடத்தான்!' என்பது இக்காலத்துப் பாடம்.

3. அறுகிடுதல்—ஒருமணவினை என்பர்.

6. "ஔவைபாடலுக்கு நறுநெய்யால் பெருகி யருந்தமிழறிவிறைற் சிறந்து—தெய்வமா நதிநீர் பரக்குநாடந்தத் திருமுனைப் பாடிநன்னாடு" என வில்லிபுத்தூரர்மகனார் வரந்தருவாராலும் பெண்ணையாறு நெய்பால் கொணர்ந்த செய்தி குறிக்கப்படுதல் காண்க. திருக்கோவலூரென்பது தற்காலம் ரயில்வே ஸ்டேஷனாகவுள்ளது.

98. சம்பராசன், **மல்லிநாதன்** என்ற பெயருடையவனென்பதும், ஏகாம்பரநாதர்க்கு இவன் திருத்தேர் ஒன்று செய்துவைத்தனனென்பதும் "வடித்தசுடர் வேற்சம்பன் வாழ் **மல்லிநாதன்** கொடுத்த திருத்தேர்மேற் கொண்டு" என்றும், "செம்பதுமை கேள்வன் **திருமல்லிநாத** னுயர் - சம்புபதி நல்குந் தடந்தேர்மேல்" என்றும் இரட்டையர் தம் ஏகாம்பரநாதருலாவிற் பாடுவதால் தெரிகின்றன. சோழராதிக்கம் தென்னாட்டில் நிலைகுலைந்த பிற்காலத்தில், தொண்டைமண்டலத்தைச் சம்புவாராயர் என்ற அரசர் ஆண்டுவந்தனரென்றும், இவர்களில் ஒருவரான **மல்லிநாத சம்புவாராயர்** என்பவர், விஜயநகர அரசரது தளகர்த்தரான கம்பணவுடையாரால் வெல்லப்பட்டு அவ்விஜயநகரத்தார்க்கு அடங்கிய சிற்றரசராயினரென்றும், இம்மல்லிநாதர், படுவூர்க்கோட்டத்துக் காவேரிப்பாக்கமாகிய விக்ரமசோழச்சதுர்வேதிமங்கலத்தில் சக. ௲ 1295 (கி. பி. 1373)ல் சில பூதானஞ் செய்தவிஷயம், டீயூர் வரதராஜப்பெருமாள் கர்ப்பக்கிரகத்தின் தென்மதிலில் பொறிக்கப்பட்டிருக்கிறதென்றும் தெரியவருகின்றன. (Ep. Rep. No. 390 of 1905) இம்மல்லிநாதனே இரட்டையர் காலத்தவனாயின் அப்புலவர் காலம் இற்றைக்கு 543 வருஷத்துக்கு முற்பட்டதாகும்.

# செய்யுள்முதற் குறிப்பு அகராதி.


| பாடல். | பக்கம். |
| --- | --- |
| **அ** | |
| அளிதோ | 7 |
| அற்றதலையி | 14 |
| அரியதுகேட்கின் | 20 |
| அளிகொளுந் | 22 |
| அங்கம்புலியத | 23 |
| அறமுரைத்தானும் | 23 |
| அன்று நீ | 24 |
| அவனிமுழுது | 27 |
| அண்ணறிருவாலி | 27 |
| அன்றையினு | 34 |
| அடையென்பார் | 36 |
| அரசர் குலதிலக | 41 |
| அத்திமுதலெறும் | 48 |
| அலங்கலணி | 46 |
| அலைவளைத்த | 52 |
| அடும்போதுஞ் | 53 |
| **ஆ** | |
| ஆரியநன்று | 7 |
| ஆடுநனிமறந்த | 8 |
| ஆறுபெருக்கில்லா | 9 |
| ஆழியான்பள்ளி | 24 |
| ஆன்பரிலுந் | 29 |
| ஆற்குழையோ | 31 |
| ஆடுவதுஞ் செக்கே | 32 |
| ஆடுங்கடைமணி | 35 |
| ஆரேயெனுமொன்று | 37 |
| ஆஅவிதியோ | 39 |
| ஆறெல்லாஞ் | 47 |
| ஆயிரவர்புலவோரில் | 60 |
| **இ** | |
| இரும்பனை | 9 |
| இருமர்மணி | 15 |
| இல்லென்பார் | 27 |
| இன்றோரங்கம்ப | 29 |
| இடுக்கட்புண்பட | 33 |
| இன்னங்கலிங்கத் | 34 |
| இந்துநுதலழகோ | 40 |
| இரவலாளரே | 44 |
| இலங்கிலைவேற் | 47 |
| இலகுபுகழாறை | 49 |
| இன்றுவரி | 50 |
| இந்திரன்கலையா | 55 |
| இன்னங்கலைல் | 65 |
| இனிதினிதெனச் | 67 |
| இந்நாளிருந்த | 68 |
| இன்னமுதப்பாமாரி | 70 |
| **ஈ** | |
| ஈதலறந் | 14 |
| **உ** | |
| உங்களிலே | 21 |
| உடைய்யவளுநீயு | 26 |
| உங்கள்மனக் | 44 |
| உண்டவயிற்றி | 60 |
| **ஊ** | |
| ஊழித்துலுக்கல்லை | 60 |
| **எ** | |
| என்றாழ் | 16 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| எம்மிகழாத ... | 17 |
| எறிக்கும்புகழ் ... | 31 |
| எண்ணீர்மை ... | 40 |
| எல்லைபலகடந் ... | 41 |
| என்னையிவ்வா ... | 45 |
| எண்டிசாமுகத்தி ... | 45 |
| என்னெஞ்சு ... | 50 |
| என்னுடையதம்பி ... | 26 |
| **ஏ** | |
| ஏருமிரண்டு ... | 20 |
| ஏகாவடமெ ... | 37 |
| ஏடாயிரங்கோடி ... | 67 |
| **ஒ** | |
| ஒற்றியூர் ... | 28 |
| ஒன்றாகக்காண் ... | 20 |
| ஒன்றுமறியோா ... | 53 |
| ஒட்டக்கூத்தன் ... | 69 |
| ஒருகையிருமரு ... | 71 |
| ஒருதிசை ... | 8 |
| **க** | |
| கரும்புமிள ... | 1 |
| கல்லாதவொருவனை ... | 16 |
| கன்னியழிந்தனள் ... | 52 |
| கண்டன்பவனி ... | 34 |
| கரத்துஞ்சிரத்து ... | 35 |
| கவியரசர் ... | 39 |
| கயக்காவி ... | 39 |
| கம்பன் பிறந்தவூர் ... | 50 |
| கண்டுபெணியக்கடவே ... | 51 |
| கந்தமலரயனூர் ... | 57 |
| கலிங்கமிழந்து ... | 59 |
| கவடிகளர்கத் ... | 63 |
| கண்ணும்மதிக் ... | 64 |
| கருணையாலிந்த ... | 72 |
| **கா** | |
| காவலரீகை ... | 32 |
| காலை ஞாயிறு ... | 11 |
| காதமிருபத்து ... | 26 |
| காற்றலைப்புண் ... | 31 |
| காடுமீனம்பட ... | 48 |
| காணெஞ்சேதேன் ... | 48 |
| **கு** | |
| குழற்காலரவி ... | 21 |
| குறையுளார் ... | 42 |
| குழவியிறப்பினு ... | 42 |
| குட்டுதற்கோ ... | 61 |
| குரங்குமாய்நண் ... | 62 |
| குப்பாசமிட்டு ... | 52 |
| **கூ** | |
| கூரியவாளாற் ... | 14 |
| கூழைப் பலாத்தழைக்க ... | 14 |
| கூத்தாண்முகத் ... | 25 |
| கூளம்பிடித் ... | 23 |
| கூர்ந்தவறுமை ... | 42 |
| கூத்தாடிலஞ்ச ... | 59 |
| **கை** | |
| கைம்மணிச்சீர் ... | 24 |
| கையுமலரடி ... | 39 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| **கொ.** | |
| கொங்குதேர் ... | 5 |
| கொங்கர்கோமான் ... | 30 |
| கொலையைத்தடவிய ... | 37 |
| **கோ.** | |
| கோட்டாற் ... | 6 |
| கோதில் குலமங்கை. ... | 23 |
| கோக்கண்டு ... | 35 |
| கோக்குதிரை ... | 55 |
| **கை** | |
| கைம்மணிச்சீர் ... | 29 |
| கையுமலரடியு ... | 34 |
| **ச** | |
| சத்தம்பயிலும் ... | 37 |
| சந்தனமரமும் ... | 51 |
| **சா** | |
| சாறுதலைக் ... | 10 |
| சாணர்க்கு ... | 30 |
| சாலப்பழுத்த ... | 66 |
| **சி** | |
| சிரப்பார்மணி ... | 13 |
| சிறுக்கீரை ... | 19 |
| சிரையன்றின ... | 70 |
| **சீ** | |
| சீரங்கத்தாருஞ் ... | 54 |
| **செ** | |
| சென்றுழுது ... | 15 |
| செட்டிமக்கள் ... | 25 |
| சென்னிவிளை ... | 28 |
| செங்கான்மட ... | 93 |
| செப்பாருமுகி ... | 45 |
| செக்கோமருங்கில் ... | 77 |
| செந்தமிழறி ... | 26 |
| செய்யும்வினையும் ... | 33 |
| **சே** | |
| சேனைதழையா ... | 50 |
| சேலையுடையழகா ... | 55 |
| சேய செங்குன்றை ... | 66 |
| சேரலர்கோன் ... | 71 |
| **சொ** | |
| சொல்லியை ... | 28 |
| சொக்கன் மதுரை ... | 56 |
| சொருக்கவிழ்ந்த ... | 57 |
| **த** | |
| தனிமைபெறு ... | 2 |
| தண்ணீருங்கா ... | 13 |
| தடவுநிலைப் ... | 15 |
| தண்டாமலீவது ... | 15 |
| தன்னுடைய ... | 36 |
| தன்னுடன் ... | 55 |
| தந்தை பிறந்திற ... | 45 |
| தடக்கடலிற் ... | 43 |
| தருக்குலவு ... | 57 |
| **தா** | |
| தாதா வென்று ... | 25 |
| தாயரவை ... | 39 |
| **தி** | |
| திருத்தங்கி ... | 19 |

| பாட்டல். | பக்கம். |
| --- | --- |
| திறையின் முறை ... | 22 |
| இனேவினேத்தார் ... | 41 |
| **தூ** | |
| தூபங்கமழும் ... | 38 |
| தூதைந்து நாழிகை ... | 58 |
| தூசு தூசாக்கு ... | 22 |
| **தெ** | |
| தென்னவா ... | 49 |
| தென்பாரரளு ... | 63 |
| **தே** | |
| தேரையார் ... | 23 |
| தேறலமிர்தந் ... | 56 |
| **தொ** | |
| தொழுகின்ற ... | 35 |
| தொட்டிலிருக்கத் ... | 45 |
| தொல்காப்பியத் ... | 31 |
| **ந** | |
| நடக்கிலன்ன ... | 27 |
| நடித்ததுநச்சர ... | 33 |
| நகுதக்கனரே ... | 43 |
| நள்ளாற்றுத் ... | 56 |
| **நா** | |
| நாடாமுத ... | 6 |
| நானேயினிச் ... | 38 |
| நாராய்நாராய் ... | 46 |
| நாணென்றால் ... | 56 |
| நினைவுகவி— ... | 61 |
| **நீ** | |
| நீயேபுறவி ... | 10 |
| **நூ** | |
| நூற்றுப்பத் ... | 18 |
| நூலாநாலாயிர ... | 58 |
| **நெ** | |
| நெற்பயிர்விளை ... | 28 |
| நெட்டிலையிருப் ... | 12 |
| **ப** | |
| பசிமுடுக— ... | 69 |
| பண்பால் ... | 6 |
| பத்தம்பிற்பாதி ... | 13 |
| பந்தரிலே ... | 30 |
| பத்துக்கொண்டனர ... | 33 |
| பழியும்புகழும் ... | 38 |
| பறியாரோ ... | 62 |
| **பா** | |
| பாரிபறித்த ... | 18 |
| பாடுவார் ... | 30 |
| பாட்டுத்தொடுக்கும் ... | 35 |
| பாவலன் வாச ... | 40 |
| பாண்டியரிற் ... | 47 |
| பாலலைகை ... | 56 |
| பாம்புகடித் ... | 63 |
| பாழ்ப்பாமடற் ... | 64 |
| பாப்புக்குரங்கா ... | 54 |
| **பி** | |
| பிழைத்தாரோ ... | 41 |
| **பு** | |
| புக்குவிடைதழுவி ... | 27 |
| புராதனமான ... | 40 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| புவியோர்பெறு ... | 68 |
| புகார்மன்னன் ... | 72 |
| **பூ** | |
| பூமிலயனும் ... | 11 |
| பூங்கமலவாவி ... | 12 |
| பூவேந்தர்முன் ... | 21 |
| **பெ** | |
| பெருமா ... | 53 |
| **பொ** | |
| பொருந்தவொரு ... | 38 |
| பொன்போலுங் ... | 22 |
| பொங்குதமிழ் ... | 65 |
| பொங்குமிடியன் ... | 65 |
| பொதியிலகத்திய ... | 21 |
| **போ** | |
| போர்னபோன ... | 58 |
| **ம** | |
| மதிமலிபுரிசை ... | 5 |
| மறியாதார்முற்ற ... | 16 |
| மதுரமொழி ... | 19 |
| மங்கையொரு ... | 24 |
| மன்னவனு ... | 26 |
| மன்னுதிருவண் ... | 31 |
| மலையினுங்கா ... | 48 |
| மலைப்படுமோ ... | 53 |
| மருவுபுகழ் ... | 59 |
| மண்கவி ... | 62 |
| மனந்தான்றளந் ... | 71 |
| **மா** | |
| மாவுறங்கின் ... | 36 |
| மாகுன்றனைய ... | 43 |
| மானபரனபய ... | 46 |
| மாப்பைந்தார்க் ... | 49 |
| மாதாவைப் ... | 70 |
| **மீ** | |
| மீனகம்பற்றிய ... | 37 |
| **மு** | |
| முரணில் ... | 7 |
| முன்னுளிரு ... | 47 |
| முன்னுளறுபத் ... | 51 |
| முதிரத்தமிழ் ... | 54 |
| முற்றுத ... | 57 |
| முத்தெறியு ... | 73 |
| **மூ** | |
| மூவர்கோவையும் ... | 17 |
| மூட்டை ... | 60 |
| **மெ** | |
| மெய்கழுவி ... | 24 |
| **மோ** | |
| மோட்டெருமை ... | 24 |
| **யா** | |
| யாவரேகாராள ... | 41 |
| **வ** | |
| வலம்படு ... | 12 |
| வரகரசி ... | 13 |
| வள்ளியோர்ப் ... | 9 |
| **வா** | |
| வாதவர்கோன் ... | 13 |

| பாடல். | பக்கம். |
|---|---|
| வாய்த்தவயிரபுர ... | 20 |
| வாசமலர் ... | 22 |
| வாசவயல்நந்தி ... | 59 |
| வாழொப்பிலாத ... | 66 |
| வாவியபொற் ... | 66 |
| வாயிலொன்று ... | 69 |
| **வி** | |
| விரகரிருவர் ... | 19 |
| வில்லிகளந்தை ... | 28 |
| வில்லம்பிற் ... | 29 |
| விஃணுக் ... | 55 |
| விரகன்முத்தமிழ் ... | 65 |
| **வெ** | |
| வெய்தாய் ... | 18 |
| வெங்கண்சிவந்து ... | 29 |
| வெண்ணெயும் ... | 51 |
| வெறும்புற்கை ... | 51 |
| வெற்றிப்பாடு ... | 62 |
| **வே** | |
| வேதமொழி ... | 30 |
| வேம்பாகிலும் ... | 49 |
| வேசையரே ... | 66 |
| **வை** | |
| வையகமெல் ... | 16 |
| வையம்பெறினும் ... | 44 |
| வையைத்துறை ... | 72 |

# பெயர் அட்டவணை.


அகத்தியம்—பக். 2, 3, 4
அகத்தியனார்—பக். 2, 3, பாட். 8, 52, 63, 107, 135
அகளங்கன்—43,108,109,111, [117
அங்கதம்—32
அங்கத வெண்பா—7
அங்கவை சங்கவை. 41
அகநானூறு. பக். 4
அச்சுதகளப்பாளன். 142
அச்சுதானந்தன்—145
அஞ்சி (அதிகன்) 20
அதிகமான்—20, 21
அதிமதுரக்கவிராசன், 194,195, 196, 209
அந்தாதிச்சமுத்தி—120
அபங்கன்—117
அபயன்—103, 129, 157
அபிராமன்—153, 211
அம்பர்ச்சிலம்பி—25
அம்பிகர்—211
அம்மைச்சி—186
அயன்றைச்சடையன்—148,149
அரசூர்—66.
அரசை—57
அரும்பைத்தொள்ளாயிரம்—105
அறமுரைத்தான்—63
அறம் வளர்த்த முதலியார். 151
அறிவுடை நாயனார்—பக். 3.
ஆசுகவிராசசிங்கம்—225, 227,
ஆட்கொண்டநாயன்—96
ஆடூர்மல்லன். 16
ஆஅய்—39
ஆரியசேகரன்—131, 132, 136
ஆரியம்—8
ஆரோதன். 134
ஆலஞ்சேரி மயிந்தன்—17
ஆலவாய்—2
ஆலவாயிறையனார்—பக். 5
ஆலைப்பதிப்பெருமான். 201
ஆறை ஏகம்பவாணன்—170
இசை நுணுக்கம்—பக். 3
இசையாயிரம்—104
இடைச்சங்கத்தார்—பக். 3
இணையாரமார்பன்—76
இயக்கன்—134
இரட்டையர்—95, 101
இராயர்—214
இருந்தையூர்க்கருங்கோழி—பக்—3
இலங்காபுரம்—113
இலங்கை—105
இளஞ்சூரியர்—101
இளந்தத்தன்—14

இளந்திருமாறன்—பக்—4
இறையனார்—பக்—2, 3, 4
உத்தரநல்லூர் நங்கை—176
உருத்திரன்—79
உறையூர்—13, 14
எழினி—39
ஏகம்பவாணன்—166,170,171
ஏகாம்பரன் சம்பன்—98
ஏரெழுபது—68
ஏழிற்கோ—32
ஏழுவள்ளல்—39
ஐங்குறுநூறு—பக். 4
ஐயந்தவிர்த்த பெருமாள்—150
ஒட்டக்கூத்தன்—105—124, 217, 220
ஓட்டியன்—210
ஓரங்கல்நாடு—79
ஔவை, 25, 20.
கங்கை—71
கச்சி—104
கச்சிநல்லான்—252
கச்சியப்பன்—183
கச்சியனந்தன்—254
கடிகையார்—225
கடைச்சங்கத்தார்—பக். 3
கணக்காயனார் மகனார் நக்கீரர்—பக். 4
கணைக்காலிரும்பொறை—146
கண்டன்—110, 112, 113
கண்டி—136
கண்டியதேவன்—179
கண்டியூர்—64
கண்டியூர் வண்ணத்தி—59
கண்ணபிரந் தீத்தாள்—204
கண்ணமங்கை—203
கதிர்காமத்துவேலர்—133
கந்தபுராணம் கச்சியப்பர்—229
கபாடபுரம்—பக். 3, 113
கபிலபரணர்—பக். 3; 10, 19. 67
கம்பர்—67—90, 159
கம்பன்பிறந்தவூர்—173
கயத்தாற்றுராசா—250—251
கலி (நூல்) பக்—2
கலிங்கம்—111
கல்யாணபுரம்—11
கல்வியகவன்மாலை—பக்—3
கவிச்சக்ரவர்த்தி—115
கவிவீரராகவர்—229—251
களந்தை—81
களந்தைப்புகழேந்தி—150
களரியாவிரை—பக்—2
களவழி நாற்பது. 146
களிற்றியானை நிரை—பக்4
கன்னி (குமரியாறு) 71
காசிநாடு—153
காரி—10, 23, 39
காரோணர்—165
காவிரி—25, 70, 71

காளத்திக்கச்சியப்பன்—183
காளமேகம்—186—209
காளி—86
காளிங்கன்—51
காளிம்பன்—82
காளையார் கோவில்—56
கானப்பேர்—56
கிருட்டிணராயர்—177, 210, 212, 213
கிள்ளிவளவன்—15
கூடவாசல்விண்ணுள்—205
குமணன்—11, 12
குமாரசரசுவதி—210, 211
கும்பமுனி—173
குயக்கொண்டான்—7
குருகு (நூல்) பக்—3
குருநமச்சிவாயர்—165
குலோத்துங்கச்சாவகன்—6
குலோத்துங்கசோழன்—116, 128
குளமுற்றம்—15
குறப்பிள்ளைகள்—29
குறவன்பலா—28
குறுந்தொகை—பக்—4
குறுமுனி—63
குறும்பை (தாசி)—84
கூடல்—2
கூடாரம்—9
கூத்தமுதலியார்—105
கூத்தர்—106, 114
கூத்தனாரப்பன்—219
கூத்தாள்—62
கூத்தன் மூர்ணுக்கன்—120
கூத்து—பக் 4
கையறம்—92
கைலை—46, 47
கொங்கராயன்—96
கொத்தம்பி—26
கொல்லிப்பாவை—84
கொல்லிமலை—75
கொழும்பு—134
கொற்கை—47
கோடை (ஓர் ஊர்) 174, 175
கோடைச்சிவந்தான்—175
கோட்டையன்—193
கோவூர்கிழார்—13, 14, 15.
சங்கத்தார்—3, 17, 54
சங்கப்பலகை—55
சடையன்—70, 91
சடையபெரியதேவன்—253
சதுராननபண்டிதன்—81
சமுத்தி—97, 98, 120, 138
சம்பந்தன்—97
சம்பாசன்—98, 99
சயதுங்கன்—73, 92, 122, 125
சராமன்—67, 76
சவையப்பன்—202
சாத்தந்தையார்—16
சாருவபூமன்—31
சாலைவண்ணன்—181

சாளுவநாயக்கர்—215
சிங்கையாரியசேகரன்—136
சிந்தாசமுத்தி—1
சிராமலை—4, 61
சிவந்தான்—175
சிறுபாண்டரங்கன் - பக்—3
சிறுமேதாவியார் - பக்—3
சிற்றம்பலவன்—180
சிற்றிசை - பக்—4
சீநக்கன்—57, 221
சீவலமாறன்—167
சுவாகா (மந்திரம்)—7, 8
சூலிமுதுகிற்சோறிட்டது—149
செங்கணன்—146
செங்கலங்கைவடுகன்—182
செங்காட்டுக்கோட்டம்—52
செஞ்சி—85
செம்பியன்—106
செயங்கொண்டார் - 102—104
சேதிராயன்—68
சேரன்—2. 23, 24, 42, 46, 47, 109, 139—42
சேரமான்பெருமாள்—2
சைவருந்தாதரும்—190
சொக்கநாதசுவாமி-2
சோழமண்டலம்-25
சோழன் 78,118,119,140,143, 162,1-63 173,
சோழன் புலவன்-157
ஞானவரோதயன்-191
தஞ்சை—58
தத்துவப்பிரகாசர்-212,—216
தருமி - பக் 1
தலைச்சங்கத்தார் - பக் 2
தாதன்-74, 92
தாதியும்புலவனும்-161
தியாகக்கொடி-212
திரிபுவனம்-118
திருக்கண்ணபுரம்தாதி-172
திருக்குடந்தை-202, 44
திருக்கோவலூர்-41
திருத்தங்கி-44
திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம் 94
திருமலைராயன் 192, 193, 208
திருமுகவுகவல் 2
திருமுடிக்காரி 10
திருவக்கைக்கொங்கராயன் 96
திருவண்ணமலைச்சம்பந்தன் 97
திருவழுந்தூர்த்தாதி 173
திருவாமாத்தூர்க்கலம்பகம் 101
திருவாரூர்-177, 212
திருவாரூர்த்தியாகர்-213
திருவாலங்காடு-18
திருவாலி—83
திருவொற்றியூர்வல்லி—80
தினகரன்—248
தீபங்குடி—102
துலாபுருடதானம்—112,129
துவரைக்கோமான்—பக்—8

துறையூர்—52
தெண்டி—198
தேப்பெருமாள்—187
தொண்டைமண்டலவேளார்150
தொல்காப்பியதேவர்—94, 101
தொல்காப்பியம்—பக்—3
நக்கீரர்—பக்—4,7
நந்திய மாணிக்கம்—249
நந்திவரதன்—209
நலங்கிள்ளி—13, 14
நல்லந்துவன்—பக்—4
நள்ளாற்றுத்தெண்டி—198
நள்ளி—39
நற்றிணைநானூறு—பக்—4
நாகதேவன்—247
நாகபட்டினத்துச்செட்டி—201
நாகரசநம்பி—177
நாஞ்சில்வள்ளுவன்—31
நாடத்துக்குயக் கொண்டான்-7
நாமகள்—6
நிதியின்கிழவன்—பக்—2
நித்திலக்கோவை—பக்—4
நீலகங்கன்—180
நெடுங்கிள்ளி—13
நெடுஞ்செழியன்—147
நெடுந்தொகை—பக்—4
நெல்லிக்கனி—20
நெல்வேலிச் சீவலமாறன்—168
நெற்குன்றவாணமுதலியார் 115
நென்மலி—88
நேமிநாதர்—117
பட்டோலை—117
பண்டியாரம்—பக்—3
பதிற்றுப்பத்து—பக்—4
பத்துப்பாட்டு—பக்—4
பம்பையாறு—100
பரணகபிலர்-7
பரணர்-பக்-3
பரமேச்சுரப்புலவர்-227, 228
பரராசிங்கம்-230, 243
பராக்கிரமமாறன்-135
பரிபாடல்-பக்-2,4
பழையனூர்க்காரி-23,42
பழையனூர்நீலி-139—41
பறம்புமலை-9
பாகவதர்-189
பாச்சலூர்ப்பிராமணர்-176
பாணபத்திரன்-2
பாண்டியன்-33,53,63,76,77, 99, 109 131, 135, 136, 141, 144—5, 148, 156, 167,226
பாண்டியன் புலவன்-160
பாண்டியன்றேவி-153, 55
பாரதம்-6,105
பாரதவெண்பா.-பக்-4
பாரி-9, 39, 42
பாலலைகை-200
பிணமூடியன்ன இட்டது
பிரதாபருத்திரன்-79

பிரமன்—27
பிள்ளைப்பாண்டியனார்—217
பிள்ளையன்—184
புகழேந்தி—125—130, 150,
புகார்—104
புங்கனூர்க் கிழவன்—178
புதுவை—70
புதுவைச் சேதிராயன்—68
புலிக்குட்டிச் சிங்கன்—206
புவனை—119
புழல்—82
புழற்கோட்டம்—148
புள்வேளூர்—21—22
புறநானூறு—பக்—4
பூதன்—21—22
பெண்ணையாறு—21
பெருங்குன்றூர்க்கிழார்-பக்-4
பெருந்தலைச்சாத்தனார்—11
பெற்றான்—201
பேகன்—39
பேய்மகள்—141
பேராசிரியர்—117
பேரிசை—பக்—4
பொதியில்—52
பொய்கையார்—146
பொய்யாமொழிப்புலவர்—4,5, 25, 52
பொருளதிகாரம்—பக்—5 [16
போர்வைக்கோப் பெருநற்கிள்ளி
மணிமிடைபவளம்—பக்—4
மதுராபுரி—55
மதுரை—75, 191
மதுரைச்சொக்கன்—207
மதுரை ஆசிரியன் நல்லந்துவன்-பக்—4
மதுரை மருதனிள நாகர்-பக்-4
மதுரையின்மாறன்—பக்—3
மதுரையைக்கடல்கொண்டது-[பக்—3
மயிந்தன் 17
மயிலை 83
மருத்தன் 44
மலையமான் திருமுடிக்காரி 10
மலையமான் மக்கள் 15
மலையன் 39
மழவராயன் 175
மனதுங்கன் 123
மாகாளி 51
மாதை 100
மாபுராணம்-பக் 3
மாவலிவாணன் 197
மானாபரணன் 107, 127
முக்காவனூடு 16
முச்சங்கம் 207
முடிசூட்டுமங்கலம் 159
முட்டை 60
முதுகுருகு-பக் 2
முதுசூரியர் 101
முதுநாரை-பக் 2
முப்பால் 63

மும்மணிக்கோவை 92
முரிஞ்சியூர் முடிநாகராயர்-பக்2
முருகவேள்-பக்-2,5,48;60
முனையதரையன் 172
மூவேந்தர் 139-141
மைலாப்பூர் 83
முல்லை யெல்லப்பநயினார்—228
மோசி - பக்—3
யாதவன்—23
வகுப்பு—106
வக்கை—96
வஞ்சி—47
வடமலையார்—212
வடுகன்—182
வண்டியூர் மண்டபம்—184
வத்தவன்—23
வயிரபுரம்—51
வல்லி—80, 81, 82, 84
வரதன்—198, 209
வரதுங்கராமன்—153, 155
வரராமன்—167
வரி (நூல்) பக்—4
வள்ளுமாலை—7
வள்ளலெழுவர்—39
வள்ளுவர்—3, 18
வழுதி—17
விகடசமுத்தி—98
விக்கிரமசோழனுலா—108, 117
விக்கிரமசோழன்—105, 126
விக்கிரமமாறன்—135
விட்டிலிராசா—152
விநாயகபூசை—46
வியாழமாலை - பக்—3
வில்லி—217
விழுப்புரம்—211
வீரமாறன்—168
வாணன் 166, 171
வாணியன் தாதன் 73
வாதவன் 23
வாலகோகிலம் 219
வெண்டாளி (நூல்) - பக் 3
வெண்ணை 67
வெள்ளூர்க்காப்பியனார் - பக் 3
வேம்பத்தூரார் 138,185